# தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த

# வெள்ளை அறிக்கை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | **அறிமுகம்** | 1 |
| **I** | **நிதி நிலைமை** | 3 |
| | ஒட்டுமொத்த கடன் | 13 |
| | நிதிப் பற்றாக்குறைக்கான நிதியளித்தல் | 17 |
| | அரசின் உத்தரவாதங்கள் | 20 |
| | வருவாய் வரவினங்களின் போக்குகள் | 26 |
| | மாநில ஆயத்தீர்வை மற்றும் மதிப்பு கூட்டு வரிகள் | 41 |
| | வாகனங்கள் மீதான வரிகள் | 43 |
| | வரி மிதப்பு | 44 |
| | வரியல்லாத வருவாய் | 46 |
| | மத்திய வரிகளில் பங்கு | 49 |
| | மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்கள் | 57 |
| | ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள் | 60 |
| | சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு | 61 |
| | செலவினங்களின் போக்குகள் | 66 |
| | வருவாய் செலவினங்கள் | 66 |
| | மூலதனச் செலவினங்கள் | 73 |
| | உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு | 75 |
| | மாநில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப் படியான வாரியங்களின் செயல்பாடு | 82 |
| | மாநில போக்குவரத்துக் கழகங்கள் | 88 |
| | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் | 94 |
| | தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் | 101 |
| | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 103 |
| | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் | 106 |
| **II** | **பொருளாதார வளர்ச்சி நிலை** | 110 |
| **III** | **முடிவுரை** | 123 |

## அட்டவணைகள்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1 | : | வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறையின் போக்கு |
| அட்டவணை 2 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் – இணையான மாநிலங்களுக்கிடையே ஒப்பீடு |
| அட்டவணை 3 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் சதவீதம் – இணையான மாநிலங்களுக்கிடையே ஒப்பீடு |
| அட்டவணை 4 | : | நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் |
| அட்டவணை 5 | : | ஐந்தாண்டு காலத்தில் நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறை சதவீதம் |
| அட்டவணை 6 | : | நிலுவைக் கடன்களின் போக்கு |
| அட்டவணை 7 | : | 31–03–2019 அன்றுள்ளவாறு மாநில அரசின் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் பொறுப்புகள் |
| அட்டவணை 8 | : | நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளித்தல் |
| அட்டவணை 9 | : | நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கான இதர வழிவகைகள் மீது சார்ந்திருப்பது |
| அட்டவணை 10 | : | நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்ள அதிகரித்து வரும் இதர வழிவகைகளை சார்ந்திருக்கும் போக்கு |
| அட்டவணை 11 | : | நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் |
| அட்டவணை 12 | : | மின் துறை மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கான நிலுவைக் கடன்களில் அரசு உத்தரவாதக் கடன்களின் சதவீதம் (அரசுக் கடன்கள் நீங்கலாக) |
| அட்டவணை 13 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலுவையிலுள்ள உத்தரவாதத்தின் சதவீதம் |
| அட்டவணை 14 | : | வருவாய் வரவுகளின் போக்கு |
| அட்டவணை 15 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவுகளின் சதவீதம் |
| அட்டவணை 16 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவுகள் சதவீதத்தின் சராசரி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் |
| அட்டவணை 17 | : | மொத்த வருவாய் வரவுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம் |
| அட்டவணை 18 | : | மாநிலத்தின் சொந்த வரி வருவாய்– ஆண்டுவாரியான வளர்ச்சி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் |
| அட்டவணை 19 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம் |
| அட்டவணை 20 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சராசரி சதவீதம் |
| அட்டவணை 21 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிகவரி கூறுகளின் சதவீதம் |

## அட்டவணைகள்


அட்டவணை 22 : பீர் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான விற்பனையின் மீதான மாநில ஆயத்தீர்வை மற்றும் மதிப்புக் கூட்டு வரி ஆகியவற்றிலிருந்து கிடைத்த வருவாயின் போக்கு

அட்டவணை 23 : பீர் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான விற்பனையின் மீதான மாநில ஆயத்தீர்வை மற்றும் மதிப்புக் கூட்டு வரி–கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்

அட்டவணை 24 : தமிழ்நாட்டின் வரி வசூலின்எழுச்சி

அட்டவணை 25 : மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாயின் சதவீதம்

அட்டவணை 26 : மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரியல்லாத வருவாயின் சதவீதத்தின் சராசரி

அட்டவணை 27 : மாநில வரியல்லாத வருவாய்–ஆண்டுவாரியான வளர்ச்சி

அட்டவணை 28 : மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வரிகளில் பங்கு சதவீதம்

அட்டவணை 29 : மத்திய வரிகளில் பங்கு–மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வரிகளின் சராசரி பங்கு மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதம்

அட்டவணை 30 : நிதிக்குழுக்கள் பரிந்துரைத்த கிடைமட்டப் பங்கு மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்கான பங்கு

அட்டவணை 31 : மாநிலங்களுக்கு இடையிலான மக்கள் தொகை–15 வது நிதிக்குழு

அட்டவணை 32 : தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்கு மற்றும் மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு–15 வது நிதிக்குழு

அட்டவணை 33 : மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களில் மாற்றங்கள் மூலம் வரிகளில் மாற்றம்

அட்டவணை 34 : மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உதவி மானியங்களின் சதவீதம் மற்றும் மொத்த வரி வருவாயில் உதவி மானியங்களின் சதவீதம்

அட்டவணை 35 : தமிழ்நாட்டிற்கான சரக்கு மற்றும் சேவை வரி– நிலுவையிலுள்ள இழப்பீடு

அட்டவணை 36 : உதவி மானியங்கள் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஆண்டு கூட்டு சராசரியில் உதவி மானியங்களின்சராசரி சதவீதம்

அட்டவணை 37 : மொத்த வருவாய் வரவினங்களில் மத்திய வரிகளில் பங்கு மற்றும் உதவி மானியங்களின் சதவீதம்

அட்டவணை 38 : வருவாய் செலவினம்– ஆண்டுவாரியான வளர்ச்சி சதவீதம்

அட்டவணை 39 : மொத்த வருவாய் செலவினங்கள்– கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்

அட்டவணை 40 : மொத்தச் செலவினங்களில் வளர்ச்சி செலவினங்களின் சதவீதம்

அட்டவணை 41 : மொத்த வருவாய் செலவினத்தில் வருவாய் செலவின இனங்களின் சதவீதம்

# அட்டவணைகள்


| | | |
|---|---|---|
| அட்டவணை 42 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் செலவினங்களின் சதவீதம் |
| அட்டவணை 43 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் செலவினங்களின் சராசரி சதவீதத்தின் சராசரி |
| அட்டவணை 44 | : | உணவு, மின்சாரம் மற்றும் போக்குவரத்து மானியங்களின் போக்குகள் |
| அட்டவணை 45 | : | மூலதனச் செலவினங்களின் போக்கு |
| அட்டவணை 46 | : | மூலதனச் செலவினங்கள் – மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீதத்தின் சராசரி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் |
| அட்டவணை 47 | : | 2018–19ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட இந்திய மாநிலங்களில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீடுகள் மற்றும் நிதி (உள்ளபடியானவை) |
| அட்டவணை 48 | : | தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் மற்றும் நிதியுதவி |
| அட்டவணை 49 | : | உள்ளாட்சி அமைப்புகளின் மின்சாரக் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டண நிலுவை |
| அட்டவணை 50 | : | மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களுக்கான நிலுவையிலுள்ள அரசின் உத்தரவாதத் தொகை |
| அட்டவணை 51 | : | நிலுவையில் உள்ள உத்தரவாதங்களின் சதவீத உயர்வு |
| அட்டவணை 52 | : | மாநில பொதுத்துறை நிறுவனங்களிடம் நிலுவையிலுள்ள அரசு கடன்கள் |
| அட்டவணை 53 | : | மாநில பொதுத்துறை நிறுவனங்கள் அரசிடமிருந்து பெற்ற கடன்களின் சதவீத உயர்வு |
| அட்டவணை 54 | : | மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் நிலுவைக் கடன்கள் |
| அட்டவணை 55 | : | குடிநீர் வழங்கல் வாரியங்களின் ஒட்டுமொத்த இழப்புகள் |
| அட்டவணை 56 | : | மாநில பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து அரசிற்கு வரப்பெற்ற வருவாய் |
| அட்டவணை 57 | : | மாநிலத்தின் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களின் நிலுவை பொறுப்புகள், ஒட்டுமொத்த இழப்புகள் மற்றும் ஆண்டு நிகர இழப்பு |
| அட்டவணை 58 | : | மாநில போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய செலவினங்கள் |
| அட்டவணை 59 | : | அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் இயக்க வருவாய் |
| அட்டவணை 60 | : | மாநில போக்குவரத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்களின் போக்குகள் |
| அட்டவணை 61 | : | தமிழ்நாடு மின்சார வாரியம் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஒட்டுமொத்தக் கடன்கள் மற்றும் பொறுப்புகள் |
| அட்டவணை 62 | : | உதய் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இழப்பீட்டு நிதி |

## அட்டவணைகள்

அட்டவணை 63 : வசூலிக்கப்பட்ட சராசரி வருவாய் மற்றும் சராசரி விநியோகச் செலவிற்கு இடையிலான இடைவெளி

அட்டவணை 64 : தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்

அட்டவணை 65 : எரிபொருள் செலவுகள் மற்றும் மின் கொள்முதல் செலவுகள்

அட்டவணை 66 : சொந்த உற்பத்தி – எதிர்– மின் கொள்முதல் செலவு

அட்டவணை 67 : திறந்தவெளி நுழைவு உரிமை மற்றும் தொழிற்சாலைகளுக்கு நேரடி மின் விநியோகம்

அட்டவணை 68 : தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இழப்பு மற்றும் கடன் பொறுப்புகள்

அட்டவணை 69 : தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்

அட்டவணை 70 : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இழப்பு மற்றும் பொறுப்புகள்

அட்டவணை 71 : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்

அட்டவணை 72 : குடிநீர் கட்டண நிலுவைகள்

அட்டவணை 73 : சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் இழப்பு மற்றும் பொறுப்புகள்

அட்டவணை 74 : சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்

அட்டவணை 75 : சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை

அட்டவணை 76 : தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் (நிலையான விலைகளில்)

அட்டவணை 77 : தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைவாரியான சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் – 2006–07 முதல் 2019–20 வரை (நிலையான விலையில்)

அட்டவணை 78 : தமிழ்நாடு உற்பத்தித் துறையின் வளர்ச்சி விகிதம் மற்றும் சதவீதப் பங்கு ( 2011–12 ஆண்டின் நிலையான விலையில்)

அட்டவணை 79 : மொத்த மதிப்புக் கூட்டலில் சேவைகள் துறையின் பங்கு (நிலையான விலையில்)

அட்டவணை 80 : தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தின் ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதம் (நிலையான விலையில்)

அட்டவணை 81 : தேர்வுசெய்யப்பட்ட பெரிய மாநிலங்களில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் தனிநபர் வருமானம்

## படங்கள்


| | | |
|---|---|---|
| படம் 1 | : | வருவாய்ப் பற்றாக்குறை / உபரியின் போக்கு |
| படம் 2 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் |
| படம் 3 | : | நிதிப் பற்றாக்குறையின் போக்கு |
| படம் 4 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையின் சதவீதம் |
| படம் 5 | : | நிலுவையிலுள்ள பொதுக் கடன்–போக்குகள் |
| படம் 6 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலுவை பொதுக் கடனின் சதவீதம் |
| படம் 7 | : | நிலுவையிலுள்ள உத்தரவாதங்களின் போக்கு |
| படம் 8 | : | எரிசக்தித் துறை மற்றும் போக்குவரத்துத் துறைகளின் நிலுவைக் கடன்களில் (அரசுக் கடன்கள் நீங்கலாக) அரசு உத்தரவாதமளித்த கடன்களின் சதவீதம் |
| படம் 9 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உத்தரவாதத்தின் சதவீதம் |
| படம் 10 | : | மொத்த வருவாய் வரவினங்களின் போக்கு |
| படம் 11 | : | வருவாய் வரவின தொகுப்புகளின் போக்கு |
| படம் 12 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவினங்களின் சதவீதம் |
| படம் 13 | : | மாநிலத்தின் சொந்த வரி வருவாய்–ஆண்டுவாரியான வளர்ச்சியின் போக்குகள் |
| படம் 14 | : | மாநில சொந்த வரி வருவாய் கூறுகளின் பங்கு சதவீதம் |
| படம் 15 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம் |
| படம் 16 | : | வரியல்லாத வருவாயின் போக்கு |
| படம் 17 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மாநில சொந்த வரி அல்லாத வருவாயின் சதவீதம் |
| படம் 18 | : | மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு – போக்கு |
| படம் 19 | : | நிதிக் குழுக்கள்; மத்திய வரிகளில் கிடைமட்டப் பங்கீடு |
| படம் 20 | : | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உதவி மானியங்களின் சதவீதம் |
| படம் 21 | : | மொத்த வருவாய் வரவினங்களில் பங்கு – சதவீதம் |
| படம் 22 | : | மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவினங்களின் சதவீதம் |
| படம் 23 | : | அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் ஒவ்வொரு ரூபாய்க்கும் வருவாய் மற்றும் செலவினங்களை கணக்கிடுதல் |
| படம் 24 | : | தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் (நிலையான விலைகளில்) |
| படம் 25 | : | தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைவாரியான சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் – 2006–07 முதல் 2019–20 வரை (நிலையான விலைகளில்) |
| படம் 26 | : | தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தின் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் (நிலையான விலைகளில்) |

# சொற்களஞ்சியம்

1. வருவாய் வரவினங்கள் – வருவாய் வரவினங்கள் பின்வரும் நான்கு கூறுகளை உள்ளடக்கியதாகும். அவை (அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய், (ஆ) மத்திய வரிகளில் பங்கு, (இ) வரி அல்லாத வருவாய், (ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்.

2. வருவாய்ச் செலவினங்கள்– அரசு மேற்கொள்ளும் செலவினங்களான சம்பளம், ஓய்வூதியம், வட்டி செலுத்துதல், மானியங்கள், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் சட்ட ரீதியான வாரியங்களுக்கும் வழங்கப்படும் உதவித்தொகைகள் மற்றும் பிற இனங்களை உள்ளடக்கியதாகும். இது சொத்துக்களை உருவாக்குவதில்லை.

3. மூலதன வரவுகள் – திரும்பப்பெறும் மூலதனங்கள், அரசு பெறும் கடன்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டரீதியான வாரியங்களால் திரும்ப செலுத்தப்படும் கடன்களும் முன்பணங்களும் இதில் அடங்கும்.

4. மூலதனச் செலவினங்கள் – இது சாலைகள், பாசனத் திட்டங்கள், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள் போன்ற சொத்துக்களை உருவாக்கும் இனங்களையும், பொதுத்துறை நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் பங்கு மூலதனமும் மாநில அரசால் வழங்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்கியதாகும்.

5. வருவாய்ப் பற்றாக்குறை – பொதுவாக வருவாய் வரவினங்கள் வருவாய் செலவினங்களைவிட அதிகமாக இருந்தால் மீதத்தொகை மூலதன செலவிற்கு பயன்படுத்த இயலும். ஆனால், வருவாய் செலவினமானது வருவாய் வரவினத்தை விட அதிகமாக இருந்தால் ஏற்படும் குறைவு வருவாய் பற்றாக்குறை எனப்படும். ரொக்க இருப்புத் தொகையை பயன்படுத்தியோ அல்லது கடன் பெறுவதன் மூலமோ இந்த இடைவெளி நிரப்பப்படும்.

6. நிதிச் சமநிலை – மொத்த வருவாய்க்கும் (வருவாய் வரவுகள் மற்றும் கடனற்ற மூலதன வரவுகள்) மொத்த செலவினத்திற்கும் (வருவாய் மற்றும் மூலதன செலவுகள்) இடையேயான வித்தியாசம் நிதிச் சமநிலை என்று அழைக்கப்படுகிறது. நிதிப் பற்றாக்குறை என்பது வருவாய் மற்றும் மூலதன செலவின நிதியளிப்புகளுக்கு பெறப்படும் அரசின் கடன்களை குறிப்பதாகும்.

**அறிமுகம்:**

**21.6.2021** அன்று, **16**வது சட்டமன்றப் பேரவையின் தொடக்கமாக இடம்பெற்ற ஆளுநர் உரையில், அரசின் உண்மையான நிதிநிலையை சட்டமன்ற உறுப்பினர்களும், மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், தமிழ்நாட்டின் நிதி நிலைமையை உள்ளவாறாக விவரிக்கும் வெள்ளை அறிக்கை ஒன்று பொது வெளியில் வெளியிடப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், அவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, நீதி வழங்கல், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட பொதுச் சேவைகள் மற்றும் இதர அடிப்படை உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையிலான பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த வேண்டும் என்கிற எதிர்பார்ப்புடன் ஒவ்வொரு அரசாங்கமும் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. பொதுச் சேவைகளை வழங்குவதற்கும், முக்கியமான உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், ஏழை எளிய மக்களுக்கும், சமூகத்தில் சூழ்நிலையின் காரணமாக எதிர்பாராத பாதிப்புகளை சந்தித்த மக்களுக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கும் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதே நிர்வாகத்தின் முக்கிய பொருளாதாரப் பணியாக அமைகிறது. அத்தகைய நிதி ஆதாரங்கள் போதிய அளவில் திரட்டப்பட்டு, முறையாகப் பராமரிக்கப்பட்டு, திறம்பட பயன்படுத்தப்படும்போதுதான், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியும். வரி விதிப்பு என்பது நியாயமானதாகவும், மக்களுக்கு பெருஞ்சுமையை ஏற்படுத்தாத வகையிலும், உரியவர்கள் மீதும், அத்தியாவசிய செலவினங்களுக்குப் போதுமான அளவில் அமைய வேண்டும். அரசு நிதி வீணடிக்கப்படுவதைத் தடுத்து, ஊழலை ஒழித்து நிதி ஆதாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு, அதிக அளவில் திறன் வாய்ந்த ஒரு மாநிலமாகும். தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியிலும், வளத்திலும் முன்னிலை வகிக்க வேண்டும் என நமது மக்கள் விரும்புகின்றனர். தாங்கள் தேர்ந்தெடுக்கும் அரசாங்கங்கள், உயர்தர உட்கட்டமைப்பு வசதிகளையும், தரமான சாலைகள் மற்றும் தூய்மையான குடிநீர் போன்ற பொதுச் சேவைகளையும் வழங்க வேண்டும் என்பது மக்களின் நியாயமான எதிர்பார்ப்பாகும். எனவே, தமிழ்நாட்டிற்கான வளர்ச்சி மற்றும் நிதி நிலை குறியீடுகளை

மக்களின் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும். அதே போல், தமிழ்நாட்டின் வளர்ச்சி மாநிலத்தின் முழு திறனின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

இந்த வெள்ளை அறிக்கையின் வாயிலாக, தமிழ்நாட்டின் தற்போதைய நிதிநிலைமை, அது எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகள் மற்றும் பாதிப்புகள் ஆகியவை குறித்த துல்லியமான மற்றும் விரிவான விவரங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் வாக்காளர்களிடம் தெரிவிக்க விரும்புகிறோம். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடும் நோக்கத்தில் நாங்கள் செயல்படுகின்ற இத்தருணத்தில், அரசின் செயல்பாடுகளையும், கொள்கைகளையும் வழிநடத்துவதிலும் அதில் உள்ள தடைகள் குறித்தும் இந்த அறிக்கை, ஒரு பொதுவான புரிதலை வழங்கும். வாக்காளர்களின் தேவையறிந்து வெளிப்படையாகச் செயல்படும் அரசாங்கமாக இருக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்திற்கு ஏற்ப இந்த முயற்சி அமையும்.

ஆளுநர் உரையில் மிக முக்கியமான நோக்கம் எனக் குறிப்பிடப்பட்ட மாநிலத்தின் நிதிநிலை மதிப்பீட்டுடன் தொடங்கும் இவ்வறிக்கை பல்வேறு பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிதிநிலையின் அடிப்படையான நிலையையும், அது கடந்து வந்த பாதையையும், இந்த அறிக்கை விவரிக்கிறது. குடிநீர் வழங்கல், மின்சாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு வழங்கும் பெரிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய நிலையை இவ்வறிக்கை ஆழமாக ஆய்வு செய்கிறது.

இவ்வறிக்கையின் அடுத்த பிரிவில், பதின்மூன்றாவது (2006–11), பதினான்காவது (2011–16) மற்றும் பதினைந்தாவது (2016–20) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் காலக்கட்டத்தை உள்ளடக்கிய கடந்த பதினான்கு ஆண்டுகால பொருளாதார சூழ்நிலை விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள காரணிகள் மற்றும் அதனை மீறிய காரணிகள் ஆகிய இரண்டையும் கருத்திற்கொண்டு, அவற்றினால் தமிழ்நாடு சந்தித்த பொருளாதார விளைவுகளை இப்பிரிவு ஆராய்கிறது.

இவ்வறிக்கையின் முடிவுரையாக அமையும் இறுதிப் பகுதியானது, ஆய்வு முடிவுகளைத் தொகுத்து வழங்குவதுடன், அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில்

ஏற்பட்டுள்ள உடனடி மற்றும் நீண்டகால தாக்கங்களைக் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தின் செயல்பாடுகளில் பெருமளவில் வெளிப்படைத்தன்மையை கொண்டு வருவதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளின் தொடர்ச்சியாக எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகளையும் இப்பிரிவு உள்ளடக்கியுள்ளது. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப உள்ளது.

**வெள்ளை அறிக்கையின் முக்கியத்துவம்**

- தமிழக அரசின் தற்போதைய நிதி நிலை குறித்து சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்துதல்.
- தமிழ்நாட்டின் தற்போதைய நிதி நிலைமை, அரசு எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகள் மற்றும் பாதிப்புகள் குறித்து துல்லியமான மற்றும் விரிவான அறிக்கையை வழங்குதல்.
- இந்த வெள்ளை அறிக்கை மாநிலத்தின் நிதி நிலையின் போக்கு மற்றும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் போக்குகளை பகுப்பாய்வு செய்கிறது. இவ்வறிக்கையின் இறுதிப்பகுதியானது ஆய்வு முடிவுகளை தொகுத்து வழங்குவதுடன் அரசின் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றை விவரிக்கின்றது.

## I. நிதி நிலைமை

2011–12 ஆம் ஆண்டில் உச்ச நிலையிலிருந்த தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, மந்த நிலை ஏற்பட்டு வந்துள்ளது என்பது மிகவும் கவலையளிக்கும் ஒரு நிலையாகும். குறிப்பாக, 2013–14 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலகட்டத்தில் தமிழ்நாடு அரசின் நிதிநிலைமை தொடர்ந்து மோசமடைந்து வந்துள்ளது.

ஏற்கனவே நெருக்கடியிலிருந்த தமிழ்நாட்டின் நிதிநிலை, கோவிட்–19 பெருந்தொற்றின் தாக்கத்தினால் 2020–21 ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியை சந்தித்தது. ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வரும் வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப்பற்றாக்குறை மற்றும் அதனால் தொடர்ந்து அதிகரித்துள்ள கடன் சுமை ஆகியவை பெரும் நெருக்கடியில் உள்ள நிதிநிலைமைக்குக் காரணிகளாக அமைகின்றன.

**மாநிலத்தின் நிதி நிலை**

- **2006–13** காலகட்டத்திற்குள்ளான **7** ஆண்டுகளில் **5** ஆண்டுகள் தமிழ்நாடு அரசு வருவாய் உபரியை அடைந்திருந்தது. **2013** ஆம் ஆண்டு முதல் வருவாய்ப் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகிறது.
- **2020–21** ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை **61,320** கோடி ரூபாயாகும். இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் **3.16** சதவீதமாகும்
- **2017–18** மற்றும் **2018–19** ஆகிய **2** ஆண்டுகளில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சராசரி வருவாய் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **0.1** சதவீதமாக இருந்தபோது, தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை, முறையே **1.5** சதவீதமாகவும் **1.4** சதவீதமாகவும் இருந்தது.
- **2020–21** ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டிற்கான நிதிப் பற்றாக்குறை **92,305** கோடி ரூபாயாகும். இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் **4.43** சதவீதமாகும்
- **2016–2021** ஆம் ஆண்டு காலத்தில் நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறையின் விகிதம் **52.48** சதவீதமாகும். இவ்விகிதம் **2011–16** காலகட்டத்தில் **14.94** சதவீதமாக இருந்தது.

கடந்த **15** ஆண்டுகளில் மாநிலத்தின் வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறையில் நிலவும் போக்குகள் மாநிலத்தின் நிதி நிலைமை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதனை பின்வரும் விளக்கப்படங்களில் மற்றும் அட்டவணை **1** ல் காணலாம்.

**அட்டவணை 1: வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறையின் போக்கு**


| ஆண்டு | வருவாய் பற்றாக்குறை / உபரி (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் | நிதிப் பற்றாக்குறை (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையின் சதவீதம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2006-07 | (+)2648 | (-)0.81 | -3956 | 1.21 |
| 2007-08 | (+)4545 | (-)1.24 | -3686 | 1.00 |
| 2008-09 | (+)1452 | (-)0.35 | -8548 | 2.07 |
| 2009-10 | -3531 | 0.71 | -11807 | 2.37 |
| 2010-11 | -2729 | 0.45 | -16647 | 2.74 |
| 2011-12 | (+)1364 | (-)0.18 | -17274 | 2.30 |
| 2012-13 | (+)1760 | (-)0.21 | -16519 | 1.93 |
| 2013-14 | -1789 | 0.18 | -20584 | 2.13 |
| 2014-15 | -6408 | 0.60 | -27162 | 2.53 |
| 2015-16 | -11985 | 1.02 | -32628 | 2.77 |
| 2016-17 | -12964 | 1.00 | -56171 | 4.31 |
| 2017-18 | -21594 | 1.47 | -39840 | 2.72 |
| 2018-19 | -23459 | 1.44 | -47335 | 2.90 |
| 2019-20 | -35909 | 1.95 | -60179 | 3.26 |
| 2020-21 | -61320 | 3.16 | -92305 | 4.43* |

*சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்குப் பதிலாக பெறப்பட்ட கடனான 6,241 கோடி ரூபாய் இதில் அடங்காது.

குறிப்பு:கலம் 2–ல் காணப்படும் நேர்மறை (+) குறியீடு அந்த ஆண்டு உபரியைக் குறிக்கின்றது.


கலம் 3–ல் காணப்படும் எதிர்மறை (–) பற்றாக்குறை குறியீடு வருவாய் உபரியைக் குறிக்கின்றது.

**படம் 1: வருவாய்ப் பற்றாக்குறை / உபரியின் போக்கு**




| | 2006–07 | 2007–08 | 2008–09 | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் பற்றாக்குறை / உபரி | 2648 | 4545 | 1452 | –3531 | –2729 | 1364 | 1760 | –1789 | –6408 | –1198 | –1296 | –2159 | –2345 | –3590 | –6132 |


**படம் 2: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம்**




| | 2006–07 | 2007–08 | 2008–09 | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் பற்றாக்குறையின் சதவீதம் | –0.81 | –1.24 | –0.35 | 0.71 | 0.45 | –0.18 | –0.21 | 0.18 | 0.60 | 1.02 | 1.00 | 1.47 | 1.44 | 1.95 | 3.16 |


குறிப்பு: எதிர்மறை குறியீடு அந்த ஆண்டில் வருவாய் உபரியைக் குறிக்கின்றது.

**படம் 3: நிதிப் பற்றாக்குறையின் போக்கு**




| | 2006–07 | 2007–08 | 2008–09 | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிதிப் பற்றாக்குறை | –3956 | –3686 | –8548 | –1180 | –1664 | –1727 | –1651 | –2058 | –2716 | –3262 | –5617 | –3984 | –4733 | –6017 | –9230 |

**படம் 4: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையின் சதவீதம்**



2006–07 ஆம் ஆண்டு முதல் 2008–09 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு வருவாய் உபரியை அடைந்திருந்தது. உலகளாவிய நிதி நெருக்கடிக்குப் பின்னர், வளர்ச்சி மற்றும் அதனால் வருவாயில் ஏற்பட்ட ஒட்டுமொத்த சரிவினாலும், 6வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளினால் 1.6.2009 முதல் ஏற்பட்ட செலவின அதிகரிப்பினாலும் 2009–10 மற்றும் 2010–11 ஆம் ஆண்டுகளில் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டது. 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளில் இந்த நிலை மாற்றமடைந்து, வருவாய் உபரியாக இருந்தது. **இருப்பினும், இந்த வளர்ச்சி சிறிது காலமே நிலவியது. 2013–14 ஆம் ஆண்டு முதல் வருவாய் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகிறது.** தொடர்ந்து மோசமடைந்து வரும் இந்த நிலைமை உண்மையிலேயே அச்சமூட்டும் விதமாக உள்ளது. 2012–13 ஆம் ஆண்டில் இருந்த 1,760 கோடி ரூபாய் வருவாய் உபரி, 2013–14 ஆம் ஆண்டில் நிதிநிலை மோசமடைந்து 1,789 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறையாக மாறியது. இது நான்கு மடங்காக உயர்ந்து, 2014–15 ஆம் ஆண்டில் 6,408 கோடி ரூபாயை எட்டியது. கோவிட்–19 பெருந்தொற்றிற்கு முன்னரே, 2019–20 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை 35,909 கோடி ரூபாயாக அதிகரித்தது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் 2013–14 ஆம் ஆண்டில் 0.18 சதவீதமாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறை 2019–20 ஆம் ஆண்டில் 1.95 சதவீதமாக அதிகரித்தது. 2020–21 ஆம் ஆண்டில் கோவிட்–19 பெருந்தொற்று தாக்கியது. முதல்நிலைக் கணக்குகளின்படி, வருவாய்ப் பற்றாக்குறையானது 61,320 கோடி ரூபாயாக உள்ளது. இது, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.16 சதவீதமாகும். இது வழக்கமாக அனுமதிக்கப்படும் நிதிப் பற்றாக்குறையைக் காட்டிலுமே அதிகமாகும். **இது தமிழ்நாட்டை நிலையற்ற நிதி நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது.**

ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், 2017–18 மற்றும் 2018–19 ஆகிய 2 ஆண்டுகளில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சராசரி வருவாய் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1 சதவீதமாக இருந்தபோது, தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை, முறையே 1.5 சதவீதமாகவும் 1.4 சதவீதமாகவும் இருந்தது. இந்த இரண்டு ஆண்டுகளில் மகாராஷ்டிரா, குஜராத், மற்றும் கர்நாடகா போன்ற ஒப்பிடக்கூடும் மாநிலங்கள் வருவாய் உபரியைப் பதிவு செய்தன.

**அட்டவணை 2: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் – இணையான மாநிலங்களுக்கிடையே ஒப்பீடு**

| வ. எண். | மாநிலம் | 2017-18 | 2018-19 |
|---|---|---|---|
| 1 | **தமிழ்நாடு** | 1.5 | 1.4 |
| 2 | **குஜராத்** | -0.4 | -0.2 |
| 3 | **கர்நாடகா** | -0.3 | 0.0 |
| 4 | **மஹாராஷ்ட்ரா** | -0.1 | -0.5 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கியின் மாநில நிதிநிலை – 2020–21 வரவு செலவுகள் குறித்த ஆய்வு
குறிப்பு: வருவாய் பற்றாக்குறை குறியீடுகளின் எதிர்மறை (–) குறியீடு உபரியைக் குறிக்கிறது.

மேலும், நிதிப் பற்றாக்குறையின் போக்குகள் இதே போன்றே இருந்தன. 2006–07 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை 3,956 கோடி ரூபாயாக இருந்தது. இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.21 சதவீதமாகும். தொடக்க நிலை கணக்குகளின்படி, 2020–21 ஆம் ஆண்டில் 92,305 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.43 சதவீதமாகும். 2019–20 ஆம் ஆண்டு வரை, 2016–17 ஆம் ஆண்டைத் தவிர, ஏனைய ஆண்டுகளில் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட 3 சதவீத வரம்பிற்குள் நிதிப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டது. 2016–17 ஆம் ஆண்டில், உதய் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடன், அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், 3 சதவீதத்தை காட்டிலும் நிதிப் பற்றாக்குறை அதிகரித்தது. இதை ஒன்றிய அரசு அனுமதித்திருந்தது. ஒரு சில ஆண்டுகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் (STUs) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் மானியங்கள் உள்ளிட்ட சில செலவினங்கள் அடுத்த நிதியாண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டதன் மூலம் நிதிப் பற்றாக்குறை ஓரளவிற்கு வரம்பிற்குள் வைக்கப்பட்டது. **எனவே உண்மையில், செலவினங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை ஆனால் நிதி அளிக்கும் பொறுப்புகள் ஒத்திவைக்கப்பட்டு பற்றாக்குறைகள் மறைக்கப்பட்டன.** இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள் 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில் ஓரளவு சரிசெய்யப்பட்டது. கோவிட்–19 பெருந்தொற்றினால், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை வரம்பு

3 சதவீதத்திலிருந்து தளர்த்தப்பட்டதால் மேற்கூறிய ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை, முறையே 2.7 சதவீதம் மற்றும் 2.9 சதவீதமாகும். இது, இந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து மாநில சராசரியான 2.4 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாகும். இவ்விரண்டு ஆண்டுகளில் ஒப்பிடக்கூடும் மாநிலங்களான மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடகாவில் நிதிப் பற்றாக்குறை குறைவாகப் பதிவானது.

**அட்டவணை 3: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் சதவீதம் – இணையான மாநிலங்களுக்கிடையே ஒப்பீடு**

| வ. எண். | மாநிலம் | 2017-18 | 2018-19 |
|---|---|---|---|
| 1 | **தமிழ்நாடு** | 2.7 | 2.9 |
| 2 | **குஜராத்** | 1.6 | 1.8 |
| 3 | **கர்நாடகா** | 2.3 | 2.5 |
| 4 | **மஹாராஷ்ட்ரா** | 1.0 | 0.9 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கியின் மாநில நிதிநிலை – 2020–21 வரவு செலவுகள் குறித்த ஆய்வு

பொதுவாக, நிதிப் பற்றாக்குறைகள் நியாயமான வரம்புகள் வரை வரவேற்கத்தக்கது. ஏனெனில், மூலதன செலவினங்களுக்காக அரசுகள் சட்டப்பூர்வமாக கடன் பெறுவதனால், மேலும் வளர்ச்சி பெருக்கப்பட்டு, அதன் விளைவாக அதிக வருவாய் கிடைக்கப்பெறும். எனவே வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக மூலதன செலவினங்களுக்காக கடன்கள் பயன்படுத்தப்படும் வரையில் 3 சதவீதம் வரையிலான நிதிப் பற்றாக்குறை சமாளிக்கக்கூடிய அளவில் இருக்கும்.

**நிதிப் பற்றாக்குறையில் ஓர் கணிசமான பங்கு வருவாய் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக பயன்படுத்துவதால், தற்போதைய நிதிப் பற்றாக்குறை அளவுகள் நிலையற்ற தன்மையுடன் உள்ளது.** அட்டவணை 4 நிதிப் பற்றாக்குறையில் வருவாய் பற்றாக்குறையின் பங்கினை சதவீதத்தில் காட்டுகிறது. 2017–18 ஆம் ஆண்டு முதல், நிதிப் பற்றாக்குறையில்

வருவாய் பற்றாக்குறையின் பங்கு 50 சதவீதம் அல்லது அதற்கும் மேலாக உயர்ந்துள்ளது. எனவே, அரசு பெறும் கடன்கள் மூலதனச் செலவினங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை. இதற்கு மாறாக, நடப்புச் செலவினத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை 4: நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம்**

| ஆண்டு | வருவாய் உபரி / பற்றாக்குறை (ரூபாய் கோடியில்) | நிதிப் பற்றாக்குறை (ரூபாய் கோடியில்) | நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2006-07 | (+)2,648 | -3956 | பொருந்தாது |
| 2007-08 | (+)4,545 | -3,686 | பொருந்தாது |
| 2008-09 | (+)1,452 | -8,548 | பொருந்தாது |
| 2009-10 | -3,531 | -11,807 | 29.91 |
| 2010-11 | -2,729 | -16,647 | 16.39 |
| 2011-12 | (+)1,364 | -17,274 | பொருந்தாது |
| 2012-13 | (+)1,760 | -16,519 | பொருந்தாது |
| 2013-14 | -1,789 | -20,584 | 8.69 |
| 2014-15 | -6,408 | -27,162 | 23.59 |
| 2015-16 | -11,985 | -32,628 | 36.73 |
| 2016-17 | -12,964 | -56,171 | 23.08 |
| 2017-18 | -21,594 | -39,840 | 54.20 |
| 2018-19 | -23,459 | -47,335 | 49.56 |
| 2019-20 | -35,909 | -60,179 | 59.67 |
| 2020-21 | -61,320 | -92,305 | 66.43 |

குறிப்பு: கலம் 4–ல் காணப்படும் பொருந்தாது என்பது அந்த ஆண்டின் வருவாய் உபரியைக் குறிக்கின்றது.

அட்டவணை 5ல் நிதிச் சரிவின் முழுமையான அளவு காணப்படுகிறது. ஒரு காலத்தில் தமிழ்நாடு வருவாய் உபரி மாநிலமாக இருந்தது. 2003 ஆம் ஆண்டு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில், வருவாய்ப் பற்றாக்குறை இல்லாமல், சமமான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், வரவு செலவுத் திட்டங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வரும் காலங்களில் ஏற்படும் தவிர்க்க இயலாத

பொருளாதார மற்றும் இதர நிகழ்வுகள் அல்லது நெருக்கடிகள் காரணமாக ஒவ்வொரு வருடமும் இந்தக் குறியீட்டினை அடைவது கடினமானதாக்கும். அரசு தனது செலவினங்களை எந்த அளவிற்கு கட்டுப்படுத்த முடிகிறதோ அதைவிட, அதிகமாக இத்தகைய நிகழ்வுகளால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. உலகப் பொருளாதார நெருக்கடியால், **2008** ஆம் ஆண்டில் ஏற்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை இதற்கு சிறந்த உதாரணமாகும். எனினும், கடந்த ஐந்தாண்டுகள் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. இக்காலகட்டத்தில் ஆண்டுதோறும் வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து வந்துள்ளதுடன், அத்தகைய உயர்வு பல மடங்கு அதிகமாக இருந்துள்ளது. உலக அளவில் பெருமளவில் பாதிப்பு ஏற்படுத்திய கோவிட்–**19** பெருந்தொற்றின் தாக்கத்திற்கு முன்னதாகவே, இந்த எதிர்பாராத சரிவு ஆரம்பித்தது.

**அட்டவணை 5: ஐந்தாண்டு காலத்தில் நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறை சதவீதம்**

| வ. எண். | காலம் | ஐந்தாண்டு கால வருவாய்ப் பற்றாக்குறை (ரூபாய் கோடியில்) | ஐந்தாண்டு கால நிதிப் பற்றாக்குறை (ரூபாய் கோடியில்) | நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2006-07 முதல் 2010-11 வரை | (2,385) | 44,644 | பொருந்தாது |
| 2 | 2011-12 முதல் 2015-16 வரை | 17,058 | 1,14,167 | 14.94% |
| 3 | 2016-17 முதல் 2020-21 வரை | 1,55,246* | 2,95,830 | 52.48% |

**ஒட்டுமொத்தக் கடன்**

வருவாய்ப் பற்றாக்குறையால் தொடர்ந்து உயர்ந்து வரும் நிதிப்பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்குப் பெறப்பட்ட கடன்களால், ஒட்டுமொத்தக் கடன் சுமை பெருமளவு அதிகரித்துள்ளது. **2021–22** ஆம் ஆண்டு இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, **31.3.2022** அன்றுள்ளவாறாக, ஒட்டுமொத்த நிலுவைக் கடன் **5,70,189** கோடியாக இருக்கும்.

**அட்டவணை 6: நிலுவைக் கடன்களின் போக்கு ^^**


**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | ஆண்டு தொடக்கத்தில் இருந்த நிலுவைக் கடன் | ஆண்டிற்கான நிகரக் கடன் | ஆண்டு இறுதியில் மொத்த நிலுவைக் கடன் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலுவைக் கடன் சதவீதம் |
|---|---|---|---|---|
| 2006-2007 | 57457.17 | 2712.84 | 60170.01 | 18.37 |
| 2007-2008 | 60170.01 | 4484.64 | 64654.65 | 17.61 |
| 2008-2009 | 64654.65 | 10203.14 | 74857.79 | 18.16 |
| 2009-2010 | 74857.79 | 14024.73 | 88882.52 | 17.85 |
| 2010-2011 | 88882.52 | 12466.95 | 101349.47 | 16.68 |
| 2011-2012 | 101349.47 | 14062.91 | 115412.38 | 15.36 |
| 2012-2013 | 115412.38 | 17539.39 | 132951.77 | 15.55 |
| 2013-2014 | 132951.77 | 21099.47 | 154051.24 | 15.91 |
| 2014-2015 | 154051.24 | 25915.54 | 179966.79 | 16.78 |
| 2015-2016 | 179966.79 | 31099.21 | 211066.00 | 17.94 |
| 2016-2017 | 211066.00 | 60298.09 | 271364.09 | 20.83 |
| 2017-2018 | 271364.09 | 39065.11 | 310429.19 | 21.19 |
| 2018-2019 | 310429.19 | 35322.49 | 345751.68 | 21.21 |
| 2019-2020 | 345751.68 | 51273.31 | 397024.99 | 21.51 |
| தி.ம. 2020-2021 | 397024.99 | 88477.56* | 485502.55 | 24.98 |
| இ.வ.செ. 2021-2022 | 485502.54 | 84686.75 | 570189.29 | 26.69 |


^^ E-பொதுக் கடன், I-சிறுசேமிப்பு, சேம நிதி முதலியவை நிலுவைக் கடன் தொகையில் அடங்கும்.

* சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்குப் பதிலாக மாநில அரசே நேரடியாகத் திரும்பச் செலுத்தும் கடனாக மதிப்பிடப்பட்ட **7,608.38** கோடி ரூபாய் இதில் அடங்காது

படம் 5: நிலுவையிலுள்ள பொதுக் கடன்–போக்குகள்




படம் 6: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலுவைப் பொதுக் கடனின் சதவீதம்



2006–07 ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18.37 சதவீதமாக இருந்த ஒட்டுமொத்த கடன் 2010–11 ஆம் ஆண்டில் 16.68 சதவீதமாகவும், 2011–12 ஆம் ஆண்டில் 15.36 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. **2012–13 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் ஒட்டுமொத்த கடன் தொடர்ந்து அதிகரித்துள்ளது. மேலும், தற்போது 14வது நிதிக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்பான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதத்தினை எட்டியுள்ளது.** 2020–21ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் நிலுவையில் உள்ள மொத்த கடன் 4,85,502.55 கோடி ரூபாய் ஆகும். இது, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24.98 சதவீதம் ஆகும். 2020–21 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த கடன் இருப்பு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.47 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

கோவிட்–19 தொற்றின் தாக்கத்தினால் 15 ஆவது நிதிக்குழு கடன் வரம்புகளைத் தளர்த்தியிருந்தாலும், மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் நிலையற்ற தன்மைக்குச் செல்லும் அளவிற்கு அதிகமாக உள்ளது. 31.3.2019 நிலவரப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாநிலங்களின் நிலுவையில் உள்ள மொத்த கடன் பொறுப்பினை அட்டவணை 7 காட்டுகிறது. மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகள் அதிகமாக உள்ளது. **இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், வெளிச்சந்தையில் தற்போது அதிக அளவில் கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு நிற்கிறது.**

**அட்டவணை 7: 31–03–2019 அன்றுள்ளவாறு மாநில அரசின் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் பொறுப்புகள்**

| மாநிலம் | நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள் (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சதவீதம் |
|---|---|---|
| குஜராத் | 2,98,755.10 | 19.9 |
| கர்நாடகா | 2,86,328.70 | 18.5 |
| மஹாராஷ்ட்ரா | 4,38,841.80 | 16.7 |
| தமிழ்நாடு | 4,01,503.80 | 24.6 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கியின் மாநில நிதிநிலை – 2020–21 வரவு செலவுகள் குறித்த ஆய்வு

**மொத்தக் கடன்**

**மோசமடைந்து கொண்டே வரும் பற்றாக்குறை நிலை நம் மாநிலத்தை கடன்களை அதிகமாக நாட வைத்திருக்கிறது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் 2,63,976 கோடி ரூபாய் பொதுக்கடன் சுமத்தப்படுகிறது.**

- 2021–22 இன் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் 5,70,189 கோடி ரூபாயாக இருக்கும்.
- மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் பொதுக் கடன் விகிதம் – 26. 69 சதவீதமாகும்.
- 2006 ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் பொதுக் கடனின் விகிதம் 18. 37 சதவீதமாக இருந்தது.
- ஏறக்குறைய ஒவ்வொரு மாநிலமும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் பொதுக்கடனின் விகிதத்தை 2003 – 2019 க்கு இடையில் குறைத்துள்ளது; 2012 வரை, இந்த விகிதத்தை 26 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாக குறைத்து தமிழகமும் இந்த போக்கைப் பின்பற்றி வந்தது. ஆனால், அதன் பிறகு மோசமடைய தொடங்கியது.

**நிதிப் பற்றாக்குறைக்கான நிதியளித்தல்:**

ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறையானது அட்டவணை 4–இலும், ஒவ்வொரு நிதியாண்டிலும் பெறப்பட்ட நிகரக் கடன் அட்டவணை 6–இலும் காட்டப்பட்டுள்ளது. உண்மையாகப் பெறப்பட்ட கடனும், நிதிப் பற்றாக்குறையும் வேறுபட்டு இருப்பதை இது உணர்த்துகின்றது. இது ஒவ்வொரு நிதியாண்டிலும் நிதிப் பற்றாக்குறைக்கு உண்மையில் எவ்வாறு நிதியளிக்கப்படுகிறது என்ற கேள்வியை எழுப்புகிறது.

2006–07 ஆம் ஆண்டு முதல் நிதிப் பற்றாக்குறைகளுக்கு எவ்வாறு நிதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதை கீழே உள்ள அட்டவணை 8 விளக்குகிறது. நிதிப் பற்றாக்குறைக்கும் நிகர பொதுக் கடனுக்கும் இடையிலான இடைவெளி பொதுக் கணக்கிலிருந்தும் அந்த ஆண்டின் ரொக்க இருப்பிலிருந்தும் சரிசெய்யப்படுகிறது.

ஒவ்வோராண்டும் மாநில அரசு, ஆரம்ப ரொக்க இருப்பைப் பயன்படுத்தியும், அல்லது தொகுநிதியில் இருந்து வருவாய் அல்லது மூலதனக் கணக்குத் தலைப்பில் செலவினங்களைக் மேற்கொண்டாலும், அத்தொகையை பொதுக் கணக்கிற்கு மாற்றியும், அல்லது உண்மையான ரொக்க செலுத்துதல்களை நிதியாண்டு முடியும்வரை தாமதம் செய்தும் வந்துள்ளது. சாதகமான ஆண்டுகளில் அரசு ரொக்க இருப்பைக் கூட்டியும், அல்லது பொதுக் கணக்கிலிருந்து செலவு செய்தும் வந்துள்ளது.

இதன் மூலம், நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக அரசு மறைமுகமாக பொதுக் கணக்கின் மூலம் கடன் பெற்றுள்ளது. 2006–07 ஆம் ஆண்டு முதல் 2016–17 ஆம் ஆண்டிற்கு இடையேயான காலத்தில், நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக சில ஆண்டுகளில் பொதுக் கணக்கைச் சார்ந்த நிலை எழவில்லை, அல்லது பொதுக்கணக்கிலிருந்து பயன்படுத்தப்பட்ட நிதி குறைவாக இருந்தது. கடைசி மூன்றாண்டுகளில், நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக பொதுக் கணக்கிலிருந்து அதிகளவு நிதி பெறப்பட்டது.

அட்டவணை 9ல் பட்டியலிடப்பட்டுள்ளவாறு, கடந்த மூன்று அரசுகளின் ஒவ்வொரு ஐந்தாண்டு கால ஆட்சியிலும் சேர்ந்து, கடந்த 15 ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறைக்கான நிதி வழங்கலுக்கு ஏனைய இனங்களைச் சார்ந்திருப்பது பெருமளவில் உயர்ந்துள்ளது. ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திலும் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறையில் ஏனைய

இனங்கள் மூலம் பெறப்பட்ட நிதியின் விகிதாச்சாரத்திலும், அளவிலும் இத்தகைய உயர்வு காணப்படுகிறது.

**அட்டவணை 8: நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளித்தல்**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிதிப் பற்றாக்குறை | பொதுக் கடன் (நிகரம்) | இதர வழிவகைகளால் ஈடுசெய்யப்பட்ட நிதிப் பற்றாக்குறை |
|---|---|---|---|
| 2006-07 | 3956.00 | 2456.91 | 1499.09 |
| 2007-08 | 3685.59 | 4101.32 | -415.73 |
| 2008-09 | 8547.76 | 9625.43 | -1077.67 |
| 2009-10 | 11807.26 | 13045.03 | -1237.77 |
| 2010-11 | 16646.62 | 11195.29 | 5451.33 |
| 2011-12 | 17274.07 | 12950.06 | 4324.01 |
| 2012-13 | 16518.99 | 16205.09 | 313.90 |
| 2013-14 | 20583.49 | 19837.13 | 746.36 |
| 2014-15 | 27162.44 | 24592.66 | 2569.78 |
| 2015-16 | 32627.56 | 29461.19 | 3166.37 |
| 2016-17 | 56171.35 | 57942.96 | -1771.61 |
| 2017-18 | 39839.52 | 36730.70 | 3108.82 |
| 2018-19 | 47334.89 | 32872.6 | 14462.29 |
| 2019-20 | 60178.63 | 48907.85 | 11270.78 |
| தி.ம. 2020-21 | 104498.35 | 92497.95* | 12000.40 |

# I–சிறு சேமிப்பு இதில் அடங்காது.

* சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்குப் பதிலாக திரும்பச் செலுத்துக் கடனாக மதிப்பிடப்பட்ட 7,608.38 கோடி ரூபாய் இதில் அடங்கும்.

**அட்டவணை 9: நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கான இதர வழிவகைகள் மீது சார்ந்திருப்பது**

| வ. எண். | காலம் | ஆண்டு சராசரி தொகை (ரூபாய் கோடியில்) | ஐந்தாண்டுகால மொத்தத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006-07 முதல் 2010-11 வரை | 843.85 | 4,219.25 |
| 2 | 2011-12 முதல் 2015-16 வரை | 2224.08 | 11,120.42 |
| 3 | 2016-17 முதல் 2020-21 வரை | 7814.14 | 39,070.68 |

பொதுக்கடன் அளவிற்கும் அதிகமாக ஏனைய இனங்கள் மூலம் நிதி பெறுவதில் சார்ந்திருப்பதில் உயர்ந்து வரும் போக்கை அட்டவணை 10ல் பட்டியலிடப்பட்டுள்ளது. 2006–11 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 9.45 சதவீத அளவிற்கு 4,219 கோடி ரூபாயாக இருந்த இத்தகைய நிதி வழங்கல் 2011–16 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 9.74 சதவீதமான 11,120 கோடி ரூபாயாக உயர்ந்திருந்தது. இது, 2016–21 ஆம் ஆண்டு காலத்தில் 12.68 சதவீதமான 39,071 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

**அட்டவணை 10: நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்ள அதிகரித்து வரும் இதர வழிவகைகளை சார்ந்திருக்கும் போக்கு**

| வ. எண். | காலம் | ஐந்தாண்டு கால நிதிப் பற்றாக்குறை (ரூபாய் கோடியில்) | ஐந்தாண்டு காலத்தில் நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்ய இதர வழிவகைகள் (ரூபாய் கோடியில்) | நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதில் இதர வழிவகைகளின் பங்கு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2006-07 முதல் 2010-11 வரை | 44,644 | 4,219 | 9.45% |
| 2 | 2011-12 முதல் 2015-16 வரை | 1,14,167 | 11,120 | 9.74% |
| 3 | 2016-17 முதல் 2020-21 (தி.ம.) வரை | 3,08,023 | 39,071 | 12.68% |

மற்றொரு பார்வையில், **2020–21** ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள உண்மையான நிலுவைக் கடனை **5,24,574** கோடி ரூபாய் என கருதலாம். இதில் மொத்த நிலுவைப் பொதுக் கடனான **4,85,503** கோடி ரூபாய் அடங்கும். மீதமுள்ள **39,071** கோடி ரூபாயை பொதுக் கணக்கு மற்றும் ரொக்க இருப்பு போன்ற உள் கணக்குகளில் சரி செய்தால் மட்டுமே **2015–16** ஆம் ஆண்டு நிலைமைக்கு நம்மால் திரும்ப இயலும்.

**நிதிப் பற்றாக்குறைக்கு நிதி அளித்தல்: இதர வழிவகைகளின் மூலம் ஈடு செய்வதன் பங்கு பெருமளவில் உயர்வு**

- வழக்கமாக, இதர வழிவகைகளின் மூலம் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதன் பங்கு குறைவான அளவில் தான் இருக்கும்.
- இருப்பினும், **2016–21** வரையிலான காலகட்டத்தில் நிதி பற்றாக்குறையை இதர வழிகளில் ஈடுசெய்த பங்கு மொத்த நிதி பற்றாக்குறையில் **12. 68** சதவீதமாக இருந்தது. அதாவது **39,070** கோடி ரூபாய்
- குறிப்பாக கடந்த **3** ஆண்டுகளில், நிதிப் பற்றாக்குறையை நிர்வகிக்க பொதுக் கணக்கிலிருந்து பெறப்பட்ட தொகைகள் நிதி பற்றாக்குறையில் **10** சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளன.

**அரசின் உத்தரவாதங்கள்:**

**2006–07** ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஒட்டுமொத்தமாக **3,960.09** கோடி ரூபாய்க்கு உத்தரவாதம் அளித்திருந்தது. இது அந்த ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **1.21** சதவீதமாகும். இத்தொகை **2011–12** ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **1.30** சதவீதமாக உயர்ந்து **9,751.29** கோடி ரூபாயாக இருந்தது.

இதனைத்தொடர்ந்து மின் துறைக்கு உத்தரவாதங்கள் பெருமளவில் அதிகரித்ததன் காரணமாக, 2014–15 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு வழங்கிய மொத்த உத்தரவாதங்களுக்கான தொகை 53,697 கோடி ரூபாயாக உயர்ந்தது. மேலும் 2016–17–க்குப் பின்னர் உதய் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன்களை அரசு தனது கடன்களாக ஏற்றுக்கொண்டபோது, 2016–17 இல் இருந்து இது குறையத் தொடங்கியது.

அதன்பிறகு, உடனடியாக உத்தரவாதங்கள் மீண்டும் உயரத் தொடங்கி 2019–20ஆம் ஆண்டில் 47,318.87 கோடி ரூபாயை எட்டியது. 2020–21 ஆம் ஆண்டில், மின் மற்றும் போக்குவரத்துத் துறைகளில் ஏற்பட்ட மிக மோசமான நிதி நிலைமையின் காரணமாக, ஒரே வருடத்தில் மொத்த உத்தரவாதங்கள் ஏறத்தாழ இரட்டிப்பாகி 91,818.44 கோடி ரூபாயாக இருந்தது.

இதில், மின் துறைக்கான உத்தரவாதத் தொகை 82,916.90 கோடி ரூபாய் ஆகும். 2018–19 ஆம் ஆண்டு வரை மிகக் குறைவான நிலுவை உத்தரவாதங்களைக் கொண்டிருந்த போக்குவரத்துத் துறை, 2020–21 ஆம் ஆண்டின் இறுதியில் 4,642.72 கோடி ரூபாய் நிலுவையைக் கொண்டுள்ளது. இந்த உத்தரவாதங்கள் மாநில அரசிற்கான ஒரு பெரிய ஏற்படக்கூடிய கடன் பொறுப்பைக் குறிக்கிறது. **2019–20 ஆம் ஆண்டில் அனைத்து மாநிலங்களிலும், அதிகபட்சமான நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் பட்டியலில் தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேச மாநிலங்களுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு 3 வது இடத்தில் உள்ளது.**


**அட்டவணை 11: நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள்**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | மின் துறை | போக்குவரத்துத் துறை | கூட்டுறவுத் துறை | ஏனையவவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2006-07 | 2665.18 | 64.25 | 494.05 | 736.61 | 3960.09 |
| 2007-08 | 2693.90 | 50.75 | 1844.85 | 753.02 | 5342.52 |
| 2008-09 | 3323.14 | 44.23 | 471.44 | 648.65 | 4487.46 |
| 2009-10 | 4379.72 | 34.25 | 766.89 | 940.29 | 6121.15 |
| 2010-11 | 9383.38 | 24.25 | 5689.49 | 857.68 | 15954.80 |
| 2011-12 | 9024.25 | 14.25 | 19.92 | 692.87 | 9751.29 |
| 2012-13 | 23024.31 | 4.25 | 498.44 | 543.49 | 24070.49 |
| 2013-14 | 48031.16 | 4.25 | 385.27 | 1078.62 | 49499.30 |
| 2014-15 | 51939.64 | 4.25 | 267.71 | 1486.01 | 53697.61 |
| 2015-16 | 49507.44 | 4.25 | 359.75 | 1714.25 | 51585.69 |
| 2016-17 | 26996.58 | 4.25 | 380.63 | 1763.82 | 29145.28 |
| 2017-18 | 32745.28 | 754.25 | 294.23 | 2337.28 | 36131.04 |
| 2018-19 | 40770.61 | 4.25 | 630.28 | 2255.94 | 43661.08 |
| 2019-20 | 43580.96 | 903.50 | 686.79 | 2147.62 | 47318.87 |
| 2020-21 | 82916.90 | 4642.72 | 1474.31 | 2784.51 | 91818.44* |

* தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்த மொத்த உத்திரவாதங்கள்

**படம் 7: நிலுவையிலுள்ள உத்தரவாதங்களின் போக்கு**




**அட்டவணை 12: மின் துறை மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கான நிலுவைக் கடன்களில் அரசு உத்தரவாதக் கடன்களின் சதவீதம் (அரசுக் கடன்கள் நீங்கலாக)**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மின் துறையில் நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் | மின் துறையில் நிலுவையிலுள்ள கடன்கள் | உத்தரவாதம் அளிக்கப்பட்ட கடன்களின் சதவீதம் | போக்குவரத்து துறையில் நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் | போக்குவரத்து துறையில் நிலுவையிலுள்ள கடன்கள் | உத்தரவாதம் அளிக்கப்பட்ட கடன்களில் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 2665.18 | 10561.03 | 25.24 | 64.25 | 912.93 | 7.04 |
| 2007-08 | 2693.90 | 13745.21 | 19.60 | 50.75 | 1023.01 | 4.96 |
| 2008-09 | 3323.14 | 20249.94 | 16.41 | 44.23 | 1147.20 | 3.86 |
| 2009-10 | 4379.72 | 38505.52 | 11.37 | 34.25 | 1223.00 | 2.80 |
| 2010-11 | 9383.38 | 35875.67 | 26.16 | 24.25 | 1338.77 | 1.81 |
| 2011-12 | 9024.25 | 41196.32 | 21.91 | 14.25 | 1482.85 | 0.96 |
| 2012-13 | 23024.31 | 51981.04 | 44.29 | 4.25 | 1585.56 | 0.27 |
| 2013-14 | 48031.16 | 73425.24 | 65.42 | 4.25 | 1612.49 | 0.26 |
| 2014-15 | 51939.64 | 85027.84 | 61.09 | 4.25 | 1779.79 | 0.24 |
| 2015-16 | 49507.44 | 92080.47 | 53.77 | 4.25 | 2562.32 | 0.17 |
| 2016-17 | 26996.58 | 99630.58 | 27.10 | 4.25 | 3723.70 | 0.11 |
| 2017-18 | 32745.28 | 111782.86 | 29.29 | 754.25 | 5331.24 | 14.15 |
| 2018-19 | 40770.61 | 124990.08 | 32.62 | 4.25 | 5618.45 | 0.08 |
| 2019-20 | 43580.96 | 139737.96 | 31.19 | 903.50 | 7978.29 | 11.32 |
| 2020-21 | 82916.90 | 159688.67 | 51.92 | 4642.72 | 11840.29 | 39.21 |


**படம் 8: எரிசக்தித் துறை மற்றும் போக்குவரத்துத் துறைகளின் நிலுவைக் கடன்களில் (அரசுக் கடன்கள் நீங்கலாக) அரசு உத்தரவாதமளித்த கடன்களின் சதவீதம்**




**அட்டவணை 13: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலுவையிலுள்ள உத்தரவாதத்தின் சதவீதம்**

| ஆண்டு | நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உத்தரவாதத்தின் சதவீதம் |
|---|---|---|
| 2006-07 | 3960.09 | 1.21 |
| 2007-08 | 5342.52 | 1.46 |
| 2008-09 | 4487.46 | 1.09 |
| 2009-10 | 6121.15 | 1.23 |
| 2010-11 | 15954.8 | 2.63 |
| 2011-12 | 9751.29 | 1.30 |
| 2012-13 | 24070.49 | 2.82 |
| 2013-14 | 49499.3 | 5.11 |
| 2014-15 | 53697.61 | 5.01 |
| 2015-16 | 51585.69 | 4.38 |
| 2016-17 | 29145.28 | 2.24 |
| 2017-18 | 36131.04 | 2.47 |
| 2018-19 | 43661.08 | 2.68 |
| 2019-20 | 47318.87 | 2.56 |
| 2020-21 | 91818.44• | 4.72 |

**<u>படம் 9: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உத்தரவாதத்தின் சதவீதம்</u>**




**இத்தகைய உத்தரவாதங்கள் மாநில அரசின் கடன்களில் ஒரு பகுதியாக இல்லை, ஆனால் அவை ஏற்படக்கூடிய பொறுப்புகள் என்பதால், தவணை தவறும் நிலை ஏற்பட்டால் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை மாநில அரசுக்கு ஏற்படும்.** இந்த நிறுவனங்களில் ஏற்படும் தொடர்ச்சியான இழப்புகளை காணும் போது, இத்தகைய உத்தரவாதங்கள் உண்மையான நிதி நெருக்கடியைக் குறிக்கின்றன.

**அதிக அளவிலான அரசு உத்தரவாதங்கள் அரசாங்கத்தின் மதிப்பை குறைத்துவிடும்**

- 2020−21 நிதியாண்டிற்கான நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் 91,818 கோடி ரூபாயாக இருந்தது.
- இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4. 72 சதவீதமாகும், சமீபத்தில் பிரிக்கப்பட்ட மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலுங்கானாவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 3 வது இடத்தில் உள்ளது.
- தமிழக அரசின் 95 சதவீத அரசு உத்தரவாதங்கள் மின் மற்றும் போக்குவரத்து துறையைச் சார்ந்தது. (மின் துறை 90 சதவீதம் + போக்குவரத்து துறை 5சதவீதம்)
- பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தத் தவறினால் அரசின் கடன் சுமை அதிகரிக்கும் ஆபத்து உள்ளது.

**வருவாய் வரவினங்களின் போக்குகள்**

ஒட்டுமொத்தப் பற்றாக்குறைச் சூழல் என்பது, வரவு–செலவுத் திட்டத்தின் வருவாய் வரவினங்கள் மற்றும் செலவினங்களில் உள்ள போக்குகளுடன் நேரடியாக தொடர்புடையன. கோவிட் –19 நோய்த் தொற்றுப்பரவல் காலமான 2020–21 ஆம் ஆண்டில் தமிழகத்தின் ஒட்டுமொத்த நிதிநிலையில் கணிசமான சரிவு காணப்பட்டாலும், **மாநிலத்தின் நிதி நிலைமை ஏற்கனவே மோசமடைந்து வந்ததைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**


2006–07 ஆம் ஆண்டில் 40,913 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவினங்கள், 2019–2020ஆம் ஆண்டில் உச்ச நிலையான 1,74,526 கோடி ரூபாயை அடைந்து, 2020–21 ஆம் ஆண்டில் 1,69,012 கோடி ரூபாயை எட்டியுள்ளது.

## அட்டவணை 14: வருவாய் வரவுகளின் போக்கு


(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மாநில அரசின் சொந்த வரி வருவாய் | வரியல்லாத வருவாய் | மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு | ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | மொத்த வருவாய் வரவுகள் |
|---|---|---|---|---|---|
| 2006-07 | 27771.15 | 3422.57 | 6393.86 | 3325.65 | 40913.23 |
| 2007-08 | 29619.10 | 3304.37 | 8065.27 | 6531.77 | 47520.51 |
| 2008-09 | 33684.37 | 5712.33 | 8510.80 | 7135.01 | 55042.51 |
| 2009-10 | 36546.67 | 5027.05 | 8756.19 | 5514.22 | 55844.13 |
| 2010-11 | 47782.18 | 4651.45 | 10913.97 | 6840.02 | 70187.62 |
| 2011-12 | 59517.31 | 5683.57 | 12714.95 | 7286.31 | 85202.14 |
| 2012-13 | 71254.28 | 6554.26 | 14519.69 | 6499.48 | 98827.71 |
| 2013-14 | 73718.11 | 9343.27 | 15852.76 | 9122.28 | 108036.42 |
| 2014-15 | 78656.54 | 8350.6 | 16824.03 | 18589.27 | 122420.44 |
| 2015-16 | 80476.08 | 8918.31 | 20353.86 | 19259.62 | 129007.87 |
| 2016-17 | 85941.41 | 9913.76 | 24537.76 | 19838.20 | 140231.13 |
| 2017-18 | 93736.61 | 10764.00 | 27099.70 | 14679.44 | 146279.75 |
| 2018-19 | 105534.16 | 14200.02 | 30638.77 | 23368.21 | 173741.16 |
| 2019-20 | 107462.29 | 12887.85 | 26392.41 | 27783.37 | 174525.92 |
| 2020-21 | 106171.70 | 9040.43 | 24906.62 | 28893.52 | 169012.27 |

## படம் 10: மொத்த வருவாய் வரவினங்களின் போக்கு




## படம் 11: வருவாய் வரவின தொகுப்புகளின் போக்கு




| | 2006–07 | 2007–08 | 2008–09 | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 8.13 | 13.75 | 12.96 | 9.87 | 9.75 | 8.55 | 6.58 | 8.44 | 15.18 | 14.93 | 14.15 | 10.04 | 13.45 | 15.92 | 17.10 |
| மத்திய வரிகளில் பங்கு | 15.63 | 16.97 | 15.46 | 15.68 | 15.55 | 14.92 | 14.69 | 14.67 | 13.74 | 15.78 | 17.50 | 18.53 | 17.63 | 15.12 | 14.74 |
| வரியல்லாதவருவாய் | 8.37 | 6.95 | 10.38 | 9.00 | 6.63 | 6.67 | 6.63 | 8.65 | 6.82 | 6.91 | 7.07 | 7.36 | 8.17 | 7.38 | 5.35 |
| மாநிலத்தின்சொந்த வரி வருவாய் | 67.88 | 62.33 | 61.20 | 65.44 | 68.08 | 69.85 | 72.10 | 68.23 | 64.25 | 62.38 | 61.29 | 64.08 | 60.74 | 61.57 | 62.82 |


■ மாநிலத்தின்சொந்த வரி வருவாய் ■ வரியல்லாதவருவாய் ■ மத்திய வரிகளில் பங்கு ■ ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

மாநிலத்தின் மொத்த வருவாய் வரவினங்கள் **2006–07** ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **12.49** சதவீதமாக இருந்து, **2008–09** ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **13.35** சதவீதமாக உச்ச நிலையை அடைந்தது. அதனைத் தொடர்ந்து, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவினங்கள் விகிதம் குறைந்தது. குறிப்பாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) குறிப்பிடத்தக்க சரிவை பதிவு செய்துள்ளது. **2014–15** ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **11.41** சதவீதமாக இருந்த மொத்த வருவாய் வரவினங்கள், **2020–21** ஆம் ஆண்டில் **8.7** சதவீதமாக சரிவடைந்துள்ளது. **2006–07** முதல் **2010–11** வரையிலான வருவாய் வரவினங்களின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் **11.40** சதவீதம் ஆகும். இது **2011–12** முதல் **2015–16** வரையிலான காலத்தில் **8.65** சதவீதமாகவும், **2016–17** முதல் **2020–21** வரையிலான காலகட்டத்தில் **3.80** சதவீதமாகவும் மேலும் குறைந்துள்ளது. அதே காலகட்டத்தில் மொத்த வருவாய் வரவினங்களின் வளர்ச்சி மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை (தற்போதைய விலையில்) விட மிகக் குறைவாக இருந்ததால், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவினங்கள் குறைந்துள்ளது.

**அட்டவணை 15: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவுகளின் சதவீதம்**

| ஆண்டு | மொத்த வருவாய் வரவுகள் (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவுகளின் சதவீதம் |
|---|---:|---:|
| 2006-07 | 40913.23 | 12.49 |
| 2007-08 | 47520.51 | 12.95 |
| 2008-09 | 55042.51 | 13.35 |
| 2009-10 | 55844.13 | 11.21 |
| 2010-11 | 70187.62 | 11.55 |
| 2011-12 | 85202.14 | 11.34 |
| 2012-13 | 98827.71 | 11.56 |
| 2013-14 | 108036.42 | 11.15 |
| 2014-15 | 122420.44 | 11.41 |
| 2015-16 | 129007.87 | 10.97 |
| 2016-17 | 140231.13 | 10.77 |
| 2017-18 | 146279.75 | 9.98 |
| 2018-19 | 173741.16 | 10.66 |
| 2019-20 | 174525.92 | 9.46 |
| 2020-21 | 169012.27 | 8.70 |

**படம் 12: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவினங்களின் சதவீதம்**




**அட்டவணை 16: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் வரவுகள் சதவீதத்தின் சராசரி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்**

| காலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் வரவுகளின் சராசரி (சதவீதத்தில்) | மொத்த வருவாய் வரவுகளில் – கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|
| 2006–07 முதல் 2010–11 வரை | 12.31 | 11.40 |
| 2011–12 முதல் 2015–16 வரை | 11.29 | 8.65 |
| 2016–17 முதல் 2020–21 வரை | 9.91 | 3.80 |

மாநிலத்தின் வருவாய் வரவினங்களின் முக்கியக் கூறாக இருக்கும் மாநில சொந்த வரி வருவாய், **2013–14**ஆம் ஆண்டு வரை மொத்த வருவாயில் ஏறக்குறைய **70** சதவீதமாக இருந்தது**.** பின்னர் **2018–19** இல் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் மொத்த வருவாயில் **60.74** சதவீதமாக வீழ்ச்சியடைந்து, தற்போது **2020–21**ஆம் ஆண்டில் **62.82** சதவீதமாக உள்ளது**.**

**அட்டவணை 17:மொத்த வருவாய் வரவுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம்**


| ஆண்டு | மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம் |
|---|---|---|
| 2006-07 | 27771.15 | 67.88 |
| 2007-08 | 29619.10 | 62.33 |
| 2008-09 | 33684.37 | 61.20 |
| 2009-10 | 36546.67 | 65.44 |
| 2010-11 | 47782.18 | 68.08 |
| 2011-12 | 59517.31 | 69.85 |
| 2012-13 | 71254.28 | 72.10 |
| 2013-14 | 73718.11 | 68.23 |
| 2014-15 | 78656.54 | 64.25 |
| 2015-16 | 80476.08 | 62.38 |
| 2016-17 | 85941.41 | 61.29 |
| 2017-18 | 93736.61 | 64.08 |
| 2018-19 | 105534.16 | 60.74 |
| 2019-20 | 107462.29 | 61.57 |
| 2020-21 | 106171.70 | 62.82 |

2006–07 முதல் 2010–11 வரையிலான காலகட்டத்தில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (CAGR) 11.46 சதவீதமாக இருந்தது. பின்னர், 2011–12 முதல் 2015–16 வரையிலான கால அளவில் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 6.22 சதவீதமாக குறைந்துடன், 2016–17 முதல் 2020–21 வரையிலான காலகட்டத்தில் 4.32 சதவீதம் என குறைவாகவே இருந்தது. மேலும், 2019–20 மற்றும் 2020–21 காலகட்டத்தில் முறையே 1.83 சதவீதம் மற்றும் (–)1.20 சதவீதம் என்ற அளவிலேயே வளர்ச்சி வீதம் இருந்துள்ளது. சமீப ஆண்டுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் 2006–07 ஆம் ஆண்டில் அதன் உயர்ந்தளவாக 8.48 சதவீதத்தை எட்டியிருந்தது. 2012–13 ஆம் ஆண்டில் இந்த விகிதம் 8.34 சதவீதம் ஆகும். **அதனைத் தொடர்ந்து, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதாச்சாரம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வந்து 2017–18 ஆம் ஆண்டில் 6.40 சதவீதமாகவும், 2019–20 ஆம் ஆண்டில் 5.82 சதவீதமாகவும் இறுதியில் 2020–21 ஆம் ஆண்டில் 5.46 சதவீதமாக மிகக் குறைந்த நிலையை எட்டியுள்ளது. இந்த நிலை பெருங்கவலை அளிப்பதாக உள்ளது.**

**அட்டவணை 18: மாநிலத்தின் சொந்த வரி வருவாய்– ஆண்டுவாரியான வளர்ச்சி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்**

| ஆண்டு | மாநிலத்தின் சொந்த வரி வருவாய்– ஆண்டுவாரியான வளர்ச்சி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் |
|---|---|
| 2006-07 | 19.06 |
| 2007-08 | 6.65 |
| 2008-09 | 13.73 |
| 2009-10 | 8.50 |
| 2010-11 | 30.74 |
| **கூட்டு வருடாந்திரவளர்ச்சி விகிதம் (2006-07** முதல் **2010-11** வரை**)** | **11.46** |
| 2011-12 | 24.56 |
| 2012-13 | 19.72 |
| 2013-14 | 3.46 |
| 2014-15 | 6.70 |
| 2015-16 | 2.31 |
| **கூட்டு வருடாந்திரவளர்ச்சி விகிதம் (2011-12** முதல் **2015-16** வரை**)** | **6.22** |
| 2016-17 | 6.79 |
| 2017-18 | 9.07 |
| 2018-19 | 12.59 |
| 2019-20 | 1.83 |
| 2020-21 | -1.20 |
| **கூட்டு வருடாந்திரவளர்ச்சி விகிதம் (2016-17** முதல் **2020-21** வரை**)** | **4.32** |
| **ஒட்டுமொத்த கூட்டு வருடாந்திரவளர்ச்சி விகிதம்** | **9.35** |

**படம் 13: மாநிலத்தின் சொந்த வரி வருவாய்–ஆண்டுவாரியான வளர்ச்சியின் போக்குகள்**




**அட்டவணை 19: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம்**


| ஆண்டு | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி | வணிக வரிகள் | மாநில ஆயத்தீர்வை | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் | வாகனங்கள் மீதான வரி | ஏனையவை | மாநிலத்தின் சொந்த வரி வருவாய் |
|---|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 327614 | **5.83** | 1.22 | 0.91 | 0.38 | 0.13 | **8.48** |
| 2007-08 | 367089 | 5.29 | 1.30 | **1.04** | 0.40 | 0.04 | 8.07 |
| 2008-09 | 412188 | 5.30 | 1.40 | 0.92 | 0.41 | 0.14 | 8.17 |
| 2009-10 | 497972 | 4.81 | 1.35 | 0.74 | 0.41 | 0.04 | 7.34 |
| 2010-11 | 607656 | 5.01 | 1.34 | 0.77 | 0.44 | 0.31 | 7.86 |
| 2011-12 | 751486 | 5.15 | 1.33 | 0.88 | 0.41 | 0.15 | 7.92 |
| 2012-13 | 854825 | 5.45 | **1.42** | 0.89 | **0.46** | 0.11 | 8.34 |
| 2013-14 | 968530 | 5.75 | 0.52 | 0.85 | 0.38 | 0.11 | 7.61 |
| 2014-15 | 1072678 | 5.54 | 0.53 | 0.78 | 0.36 | 0.12 | 7.33 |
| 2015-16 | 1176500 | 5.11 | 0.50 | 0.74 | 0.36 | 0.13 | 6.84 |

| ஆண்டு | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி | வணிக வரிகள் | மாநில ஆயத்தீர்வை | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் | வாகனங்கள் மீதான வரி | ஏனையவை | மாநிலத்தின் சொந்த வரி வருவாய் |
|---|---|---|---|---|---|---|---|
| 2016-17 | 1302639 | 5.08 | 0.48 | 0.56 | 0.37 | 0.11 | 6.60 |
| 2017-18 | 1465051 | 4.91 | 0.40 | 0.63 | 0.37 | 0.09 | 6.40 |
| 2018-19 | 1630208 | 4.98 | 0.42 | 0.68 | 0.34 | 0.05 | 6.47 |
| 2019-20 | 1845853 | 4.49 | 0.39 | 0.59 | 0.31 | 0.05 | 5.82 |
| 2020-21 | 1943399 | 4.19 | 0.40 | 0.60 | 0.23 | 0.04 | 5.46 |


**அட்டவணை 20: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சராசரி சதவீதம்**

| வ.எண். | காலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதத்தில் மாநில சொந்த வரி வருவாயின் சராசரி சதவீதம் |
|---|---|---|
| 1 | 2006-07 முதல் 2010-11 வரை | 7.98 |
| 2 | 2011-12 முதல் 2015-16 வரை | 7.61 |
| 3 | 2016-17 முதல் 2020-21 வரை | 6.15 |

**படம் 14: மாநில சொந்த வரி வருவாய் கூறுகளின் பங்கு சதவீதம்**




**படம் 15: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம்**



2020–21 ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் குறைந்துள்ளதற்கு, கோவிட்–19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கமும் ஒரு காரணம் என்றாலும், இரண்டு முக்கியப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. முதலாவதாக 2011–12 ஆம் ஆண்டிலிருந்து மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதத்தில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. **மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 3 சதவீதமான இந்த ஒட்டுமொத்த சரிவு, தற்போதைய மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 60,000 கோடி ரூபாய் இழப்பை இந்த ஆண்டில் குறிக்கிறது.** இது மிகவும் கவலைக்குரியது. 2011–12 முதல் 2018–19 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், தமிழ்நாடு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சொந்த வரி வருவாய் விகிதம், அனைத்து மாநிலங்களின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி வரி வருவாய் விகிதத்தை விட வீழ்ச்சி அடைந்துள்ளது என்பதும் கவலையளிப்பதாக உள்ளது. **தேசிய அளவிற்கும் மேலாக நிலைத்து நின்றிருந்த மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வரி விகிதம், 2018–19 ஆம் ஆண்டில், முதல் முறையாக தேசிய சராசரி அளவிற்கும் கீழ் சென்றது.** இது அரசு உடனடியாக, தீவிரமாக கவனம் செலுத்த வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

மாநிலத்தின் சொந்த வரி வருவாய்களின் கூறுகளுக்கிடையே இருந்து பெறப்படும் வரி வருவாய்களின் போக்கினை ஆய்வு செய்கையில் முக்கியக் கூறாக வணிக வரிகள் திகழ்கிறது. 2006–07 ஆம் ஆண்டில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிகவரிகளின் வீதம் 5.83 சதவீதத்தினை அடைந்தது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிக வரிகளின் பங்கு பல ஆண்டுகளாக 5 சதவீதமாக இருந்தது, 2013–14 ஆம் ஆண்டில் 5.75 சதவீதம் தொடர்ந்து உயர்ந்து, பின் அதிலிருந்து குறைந்து வருகிறது. இவ்விதம் குறைந்த மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிக வரிகளின் பங்கானது 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுகளில் முறையே 5.11 சதவீதமாகவும் 5.08 சதவீமாகவும் கணிசமாகக் குறைந்துள்ளது. **01.07.2017 அன்று நடைமுறைக்கு வந்த சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரே இக்குறையும் போக்கு காணப்பட்டது என்பது தெளிவாகிறது.** மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிக வரிகளின் விகிதம் 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டில் மேலும் குறைந்து, முறையே 4.49 சதவீதமாகவும் 4.19 சதவீதமாகவும் இருந்தது. 2020–21 ஆம் ஆண்டில், மாநில

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிகவரிகளின் விகிதம் அதன் உச்ச மதிப்பிலிருந்து 28 சதவீதம் குறைந்துள்ளது.

**பல மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டிற்கு குறைந்த வரி விகிதங்கள் உள்ளன, இதுவே தொடர்ந்து வருவாய் இழப்புக்கு வழிவகுக்கிறது.**

- மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வணிக வரிகளின் விகிதம் 2019–20 ஆம் ஆண்டில் 4. 49 சதவீதமாகவும், 2020–21 ஆம் ஆண்டில் 4. 19 சதவீதமாகவும் குறைந்துள்ளது.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி அதிகரிப்பு, விற்பனைக் கட்டணம் ரத்து, மற்றும் உரிமக் கட்டணக் குறைப்பு ஆகியவை காரணமாக ஏற்பட்ட வருவாய் குறைப்பை ஈடு செய்யவில்லைஇதனால், மாநிலத்திற்கு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.27 சதவீதம் இழப்பு ஏற்பட்டது
- அண்டை மாநிலங்களை விட தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது, ஆனால் கடந்த பதினைந்து ஆண்டுகளில் வரி விகிதங்கள் திருத்தப்படாததால் மோட்டார் வாகன வரியின் மொத்த வருவாய் அதிகரிக்கவில்லை.
- மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் மின்சார வரியாக ஆண்டுதோறும் மிகப் பெரிய தொகையை வசூலிக்கின்றன. ஆனால் தமிழகத்தில் மின்சார வரிகளின் விகிதங்கள் குறைவாக இருக்கின்றன.

அட்டவணை 21ல் வணிகவரிகளின் துணைக் கூறுகளான பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை வரி, உள்நாட்டில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் விற்பனை வரி மற்றும் இதர பொருட்கள் மீதான மதிப்புக்கூட்டு வரி / சரக்கு மற்றும் சேவை வரி (2007–08 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கூட்டு வரிக்குப் பின்னர்) ஆகியவற்றின் கீழ் பெறப்படும் வருவாய் விவரங்கள் தரப்பட்டுள்ளன. தற்போது சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படும் சில பொருட்களுக்கு 2012–13 ஆம் ஆண்டில் வரை அதிகபட்சமாக 3.25 சதவீதம் வரி வசூலிக்கப்பட்டது. பின்னர் இந்த வரி விகிதம் தொடர்ந்து குறைந்து வந்து 2019–20 ஆம் ஆண்டு 2.12 சதவீதமாகவும், மேலும் குறைந்து 2020–21 ஆம் ஆண்டில் 1.99 சதவீதமாகவும் இருந்தது. இந்த வரி விகித வீழ்ச்சி 2017–18 ஆம் ஆண்டில் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு நடைமுறைக்கு வரும் முன்னரே தொடங்கி விட்டது.

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான விற்பனை வரியிலிருந்து பெறப்படும் வருவாய், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீத அளவிற்கு உள்ளது. 2012–13 ஆம் ஆண்டு வரையில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீதமாக இருந்த உள்நாட்டில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் மீதான மதிப்புக் கூட்டு வரியின் வருவாய் 2013–14 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் வரி விதிப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களினால் 1.72 சதவீதமாக உயர்ந்தது. உள்நாட்டில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் மீதான மாநில ஆயத்தீர்வை குறைக்கப்பட்டு, மதிப்புக்கூட்டு வரி உயர்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2019–20 ஆம் ஆண்டு இறுதியில் உள்நாட்டில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் விற்பனை மீதான மதிப்புக்கூட்டு வரி வருவாய் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீத அளவிற்கு குறைந்துள்ளது. தற்போது, சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பொருட்களின் மீதான வரி வருவாயில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 1 சதவீதம் அளவிற்கு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சி சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு நடைமுறைக்கு வந்த பின்னரும் அதிகரித்துள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக் கட்டமைப்பில் வருவாய் சமநிலையை எட்டும் நிலையில்லாமை, விதிவிலக்குகள் வழங்கப்பட்டமை மற்றும் திறன் மிக்க வரி வசூலிப்பிற்குத் தேவையான அமைப்புரீதியாக மேம்பாடு செய்யப்படும் என்ற சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பின் வாக்குறுதிகள் பொய்த்தது போன்றவை தமிழ்நாட்டின் வரி வருவாயைக் குறைத்ததற்கான காரணிகளாகக் கருதப்படுகிறது.

## அட்டவணை 21: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிகவரி கூறுகளின் சதவீதம்

| ஆண்டு | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிகவரியின் சதவீதம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனையின் மீது வரிகளின் வசூல் சதவீதம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்நாட்டில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் வகைகளின் விற்பனையின் மீது வரிகளின் சதவீதம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிகவரியின் கீழ் இதர பொருட்களின் விற்பனையின் மீது வரி வசூல் சதவீதம் (மதிப்புக்கூட்டு வரி, சரக்கு மற்றும் சேவை வரி போன்றவை) |
|---|---|---|---|---|
| 2007-08 | 5.29% | 1.01% | 1.22% | 3.05% |
| 2008-09 | 5.30% | 1.29% | 1.16% | 2.85% |
| 2009-10 | 4.81% | 1.16% | 1.00% | 2.65% |
| 2010-11 | 5.01% | 1.13% | 1.03% | 2.86% |
| 2011-12 | 5.15% | 1.11% | 0.96% | 3.09% |
| 2012-13 | 5.45% | 1.11% | 1.09% | 3.25% |
| 2013-14 | 5.75% | 1.13% | 1.72% | 2.91% |
| 2014-15 | 5.54% | 1.02% | 1.71% | 2.81% |
| 2015-16 | 5.11% | 0.86% | 1.70% | 2.55% |
| 2016-17 | 5.08% | 0.88% | 1.58% | 2.63% |
| 2017-18 | 4.91% | 1.03% | 1.41% | 2.48% |
| 2018-19 | 4.98% | 1.09% | 1.49% | 2.40% |
| 2019-20 | 4.49% | 0.97% | 1.40% | 2.12% |
| 2020-21 | 4.19% | 0.86% | 1.33% | 1.99% |

**மாநில ஆயத்தீர்வை மற்றும் மதிப்புக் கூட்டு வரி**

2006–07 முதல் 2012–13 வரையிலான காலகட்டத்தில், மாநில ஆயத்தீர்வையிலிருந்து கிடைத்த வருவாய் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.22 சதவீதத்திற்கும் 1.42 சதவீதத்திற்கும் இடையே இருந்தது. 28.02.2013 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2013–14 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் வரவு–செலவுத் திட்டத்துடனான நிதிச் சட்டத்தில் ''வருவாய்'' என்பதன் வரையறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் பொதுத்துறை நிறுவனங்களின் மீது மாநில அரசுகள் விதிக்கும் சில தீர்வைகளை வருவாய் இனத்தின் கீழ் கழித்துக் கொள்வதை தடை செய்யப்பட்டது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) மீது தமிழ்நாடு அரசால் விதிக்கப்பட்ட மாநில ஆயத்தீர்வையின் பகுதியாக உள்ள விற்பனைக் கட்டணம் மற்றும் உரிமக் கட்டணம் ஆகியவற்றின் மீதான வரிவிதிப்பை இந்தத் திருத்தம் பாதித்தது. இதனை எதிர்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் விற்பனைக் கட்டணத்தை நீக்கிய அரசு, உரிமம் புதுபித்தல் கட்டண வீதத்தையும் கணிசமாகக் குறைத்தது. இதன் விளைவாக, ஆயத்தீர்வை வருவாயில் ஏற்பட்ட இழப்பை இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் விற்பனையின் மீது உயர்த்தப்பட்ட மதிப்புக்கூட்டு வரி ஈடுசெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதன் விளைவாக, 2012–13 ஆம் ஆண்டு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.42 சதவீதமாக இருந்த ஆயத்தீர்வை வருவாய் 2013–14 ஆம் ஆண்டில் 0.52 சதவீத அளவிற்கு வீழ்ச்சியடைந்து, அது முதல் அதே நிலை நீடித்து வருகிறது. மாறாக, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் விற்பனையின் மீது விதிக்கப்பட்ட மதிப்புக்கூட்டு வரியிலிருந்து கிடைத்த வருவாயானது, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 2012–13 ஆம் ஆண்டில் 1.09 சதவீதமாக இருந்தது 2013–14 ஆம் ஆண்டில் இந்த விகிதம் 1.72 சதவீதமாக மட்டுமே அதிகரித்தது. **விற்பனைக் கட்டணத்தை நீக்கம் செய்தல் மற்றும் உரிமக் கட்டணத்தைக் குறைத்தல் காரணமாக ஏற்பட்ட வருவாய் இழப்பை மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முழுமையாக ஈடுசெய்யவில்லை. இந்த மாற்றங்களின் காரணமாக மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.27 சதவீதம் வருவாய் இழப்பு ஏற்பட்டது.**

அதன் பின்னர், மதுபான விற்பனை நிலையங்களின் நேரங்களை குறைத்ததன் மூலமும், மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை மூடியதன் மூலமும் மதுபான

விற்பனையைக் குறைப்பதற்கு மாநில அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. மேலும், நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்ட மதுபானக் கடைகளை மூட வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. மேற்கண்ட காரணங்களால், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான விற்பனையில் கிடைத்த வருவாயில் மேலும் இழப்பு ஏற்பட்டது.

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மாநில ஆயத்தீர்வை மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான விற்பனையின் மீதான மதிப்புக் கூட்டு வரி வருவாய் விகிதம், **2008–09** ஆம் ஆண்டில் **2.55** சதவீதம் என்ற உச்ச மதிப்பிலிருந்து, **2020–21** ஆண்டில் **1.74** சதவீதமாகக் குறைந்த போக்கினை அட்டவணை **22** எடுத்துக்காட்டுகிறது.

**அட்டவணை 22: பீர் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான விற்பனையின் மீதான மாநில ஆயத்தீர்வை மற்றும் மதிப்புக் கூட்டு வரி ஆகியவற்றிலிருந்து கிடைத்த வருவாயின் போக்கு**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | ஆயத்தீர்வை | பீர் மற்றும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகை மீதான மதிப்புக்கூட்டு வரி | மொத்தம் | ஆண்டு வாரியான வளர்ச்சி (சதவீதத்தில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2006-07 | 3,986.42 | 209.12 | 4,195.54 | 28.84 | 1.28 |
| 2007-08 | 4,764.06 | 4,491.70 | 9,255.76 | 120.61 | 2.52 |
| 2008-09 | 5,755.52 | 4,772.49 | 10,528.01 | 13.75 | 2.55 |
| 2009-10 | 6,740.68 | 4,971.40 | 11,712.08 | 11.25 | 2.35 |
| 2010-11 | 8,115.94 | 6,246.78 | 14,362.72 | 22.63 | 2.36 |
| 2011-12 | 9,975.21 | 7,198.24 | 17,173.45 | 19.57 | 2.29 |
| 2012-13 | 12,125.68 | 9,342.45 | 21,468.13 | 25.01 | 2.51 |
| 2013-14 | 5,034.91 | 16,639.39 | 21,674.30 | 0.96 | 2.24 |
| 2014-15 | 5,731.18 | 18,364.84 | 24,096.02 | 11.17 | 2.25 |
| 2015-16 | 5,836.02 | 20,018.81 | 25,854.83 | 7.30 | 2.20 |
| 2016-17 | 6,248.16 | 20,538.40 | 26,786.56 | 3.60 | 2.06 |
| 2017-18 | 5,815.28 | 20,652.56 | 26,467.84 | -1.19 | 1.81 |
| 2018-19 | 6,863.12 | 24,314.87 | 31,177.99 | 17.80 | 1.91 |
| 2019-20 | 7,205.97 | 25,824.47 | 33,030.44 | 5.94 | 1.79 |
| 2020-21 | 7,821.66 | 25,924.40 | 33,746.06 | 2.17 | 1.74 |

**அட்டவணை 23: பீர் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபான விற்பனையின் மீதான மாநில ஆயத்தீர்வை மற்றும் மதிப்புக் கூட்டு வரி–கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்**

| **வ.எண்.** | **காலம்** | **கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்** (சதவீதத்தில்) |
|---|---|---|
| 1 | 2006-07 முதல் 2010-11 வரை | 27.91 |
| 2 | 2011-12 முதல் 2015-16 வரை | 8.53 |
| 3 | 2016-17 முதல் 2020-21 வரை | 4.73 |

**வாகனங்கள் மீதான வரிகள்**

தமிழ்நாட்டில் மோட்டார் வாகன வரி, கனரக வாகனங்கள், டிராக்டர் போன்றவற்றின் மீது, குறிப்பிட்ட அடிப்படையின் பேரிலும் கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களின் மீது அவற்றின் மதிப்பின் அடிப்படையிலும் விதிக்கப்படுகின்றன. **கடந்த பதினைந்து ஆண்டுகளாக வரிவீதங்கள் மாற்றியமைக்கப் படவில்லை.** சாலைப் போக்குவரத்து ஆண்டு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி, அண்டை மாநிலங்களில் பதிவு செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கையைவிட தமிழ்நாட்டில் பதிவு செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும், மோட்டார் வாகன வரியாக கிடைக்கும் மொத்த வருவாய் அதற்கேற்ப அதிகரிக்கவில்லை. உண்மையில், தமிழ்நாட்டில் வாகனங்களிலிருந்து கிடைக்கும் சராசரி வருவாய், கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களை விட கணிசமான அளவில் குறைவாக உள்ளது.

இதைப் போன்றே, நீண்டகாலமாக மின்சாரத்தின் மீதான வரியும் சீரமைக்கப்படாமல் உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள மின்சார வரிவிதிப்பு முறையானது குறிப்பிட்ட வகையைச் சார்ந்த மின்நுகர்வோர்கள் வரிவிதிப்பிலிருந்து தப்பிட வழிவகுக்கிறது. இதர குறிப்பிட்ட சில வகையினரில், மின்சாரத்தை சொந்தப் பயன்பாட்டிற்காக உற்பத்தி செய்யும் முறையில், ஓரலகு நுகர்விற்கு பத்து பைசா என்ற அளவிலும், ஏனைய பிரிவினர்களுக்கு ஐந்து சதவீதம் என்ற அளவிலும் உள்ளது. இது ஒப்பிடக்கூடும் மாநிலங்களைவிட மிகவும் குறைவானதாகும். **மகாராஷ்ட்ரா போன்ற மாநிலங்கள் ஆண்டிற்கு மின்சார வரியாக மிகப் பெரும் தொகையை பெறுகின்றன.**

## வரி மிதப்பு (Tax buoyancy)

**அட்டவணை 24: தமிழ்நாட்டின் வரி வசூலின்எழுச்சி**

| வரிகள் | 2006-07 | 2007-08 | 2008-09 | 2009-10 | 2010-11 | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 தி.ம. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனை வரி + சரக்கு மற்றும் சேவை வரி | 0.68 | 0.19 | 0.96 | 0.49 | 1.20 | 1.91 | 1.54 | 1.63 | 0.64 | 0.06 | 0.93 | 0.98 | 1.29 | 0.15 | 0.54 |
| மாநில ஆயத்தீர்வை | 1.25 | 1.50 | 1.45 | 0.88 | 0.93 | 1.63 | 1.56 | -4.42 | 1.29 | 0.19 | 0.66 | -.0.56 | 1.60 | 0.36 | 1.77 |
| முத்திரைத்தாள் கட்டணங்கள் | 2.14 | 2.08 | -0.02 | -0.18 | 1.23 | 2.95 | 1.17 | 0.60 | 0.13 | 0.44 | -1.59 | 2.17 | 1.81 | -0.14 | -0.14 |
| மோட்டார் வாகனங்கள் மீதான வரி | 0.59 | 1.36 | 1.06 | 0.94 | 1.43 | 1.18 | 1.93 | -0.47 | 0.37 | 1.09 | 1.37 | 0.84 | 0.35 | 0.13 | -4.10 |
| சரக்குகள் மற்றும் நுழைவு வரி | 1.28 | -0.91 | -0.75 | 0.59 | 2.23 | 2.17 | 0.44 | -1.37 | 0.33 | 1.32 | 1.72 | -5.19 | -8.84 | 20.36 | -15.79 |
| ஏனையவை | 1.91 | -3.37 | 10.19 | -2.69 | 21.82 | -2.24 | -0.93 | 0.67 | 1.77 | 2.37 | -0.89 | -1.31 | -4.23 | 0.26 | 24.12 |
| சொந்த வரி வருவாய் | 0.93 | 0.51 | 0.95 | 0.44 | 1.40 | 1.75 | 1.43 | 0.26 | 0.62 | 0.24 | 0.63 | 0.73 | 1.12 | 0.13 | 0.49 |

2012–13 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் முக்கிய வரிகளில் ஆண்டுவாரியான மிதப்பினை அட்டவணை 24 எடுத்துக்காட்டுகிறது. 2011–12 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தமிழ்நாட்டின் சொந்த வரிவருவாய் (தற்போதைய நிலவரப்படி) 8.7 சதவீத சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்தது. அதே காலகட்டத்தில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை (11.7 சதவீதம்) விட இது குறைவானதாகும். இதன் விளைவாக, மாநிலத்தின் சராசரி சொந்த வரி மிதப்பு 0.74 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஏழு ஆண்டுகாலத்தில், இரண்டு ஆண்டுகளில் மட்டுமே சொந்த வரிகளின் மிதப்பு ஒன்றிற்கு மேலாகவும், மீதமுள்ள ஆண்டுகளில் ஒன்றை விட குறைவாகவும் இருந்துள்ளது. பல ஆண்டுகளாகவே அனைத்து வரிகளின் வரி மிதப்பும் கிட்டதட்ட ஏற்ற இறக்கமாக உள்ளதையும் சில ஆண்டுகளில் வரி மிதப்பு ஒன்றை விடக் குறைவாகவோ அல்லது எதிர்மறையாகவோ உள்ளதையும் காணமுடிகிறது.

ஒட்டுமொத்தமாக, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி விகித வீழ்ச்சிக்கான காரணங்களாக பல காரணிகள் இருக்கலாம். **பல ஆண்டுகளாக, குறிப்பிட்ட வீதங்களிலுள்ள மோட்டார் வாகன வரிகள் போன்ற சில வரிகள் மாற்றியமைக்கப்படவில்லை.** எனவே, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாச்சாரத்திற்கேற்ப அவற்றின் வருவாய் அதிகரிக்கவில்லை. ஒட்டுமொத்த வாகனங்களின் எண்ணிக்கை சாலைகளில் அதிகரித்த போதிலும் இந்த நிலையே உள்ளது. 2013 ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதிச் சட்டத்தில், வருமான வரி நோக்கத்திற்காக வருவாயிலிருந்து அனுமதிக்கப்படும் கழித்தல்களின் வரையறைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் காரணமாக, 2013 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில், மாநில ஆயத்தீர்வையின் கீழ் விற்பனைக் கட்டணம் மற்றும் கூடுதல் விற்பனைக் கட்டணம் ஆகியன நீக்கப்பட்டன. இந்த இழப்பு மாநில மதிப்பு கூட்டு வரியின் மூலமாக போதுமான அளவு ஈடுசெய்யப்படவில்லை.

இருப்பினும்,மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வணிக வரிகளின் விகிதத்தில், சில விவரிக்க இயலாத குறைவுகள் உள்ளன. ஒட்டுமொத்தத்தில் வருவாய் குறைந்து வரும் போக்கிற்கு காரணமாக, அனைத்து வரிகளிலும் காணப்படும் தளர்வான வரி நிர்வாகமும் ஒரு காரணியாக இருக்க இயலும். இது கவனத்தில் கொள்ளத்தக்கது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதத்தில் ஏற்பட்டுள்ள பெரிய சரிவிற்கான காரணங்களை ஆராய ஒரு விரிவான ஆய்வு நடத்த வேண்டிய தேவை உள்ளது. அத்தகைய ஆய்வு, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சொந்த வரி வருவாயின் விகிதத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளுக்கு இன்றியமையாததாகும்.

**வரியல்லாத வருவாய்**

**அட்டவணை 25: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாயின் சதவீதம்**

| ஆண்டு | வரியல்லாத வருவாய் (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் |
|---|---|---|
| 2006-07 | 3422.57 | 1.04 |
| 2007-08 | 3304.37 | 0.90 |
| 2008-09 | 5712.33 | 1.39 |
| 2009-10 | 5027.05 | 1.01 |
| 2010-11 | 4651.45 | 0.77 |
| 2011-12 | 5683.57 | 0.76 |
| 2012-13 | 6554.26 | 0.77 |
| 2013-14 | 9343.27 | 0.96 |
| 2014-15 | 8350.6 | 0.78 |
| 2015-16 | 8918.31 | 0.76 |
| 2016-17 | 9913.76 | 0.76 |
| 2017-18 | 10764.00 | 0.73 |
| 2018-19 | 14200.02 | 0.87 |
| 2019-20 | 12887.85 | 0.70 |
| 2020-21 | 9040.43 | 0.47 |

**2008–09**ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநில சொந்த வரியல்லாத வருவாய் உயரளவாக **1.39** சதவீதத்தை எட்டியது. **2010–11**ஆம் ஆண்டிலிருந்து மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் இந்த வருவாய், **2018–19**ஆம் ஆண்டைத் தவிர, பொதுவாக, **0.8** சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. தமிழ்நாடு அரசுக்கான வரியல்லாத வருவாயின் முக்கிய இனங்களில், சுரங்கங்கள் மற்றும் கனிமங்களிலிருந்து கிடைக்கப்பெறும் உரிமைத் தொகை, வட்டி வரவினங்கள் மற்றும் அரசால் விதிக்கப்படும் பல்வேறு கட்டணங்களும் அடங்கும். வரியல்லாத வரவினங்களின் வாயிலாக, கூடுதலாக வருவாயை ஈட்டுவதற்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. **கேரளா,**

**குஜராத் மற்றும் உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்கள் வரி அல்லாத வருவாயை அதிக அளவில் திரட்டுகின்றன. வரியல்லாத வருவாய்க் கட்டணங்களை விதிக்காமல் மற்றும் உரிய கட்டணங்களை வசூலிக்காமல் என இரண்டு காரணங்களால் இந்த வருவாய் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.**

**கேரளா, குஜராத் மற்றும் உத்தரபிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்கள் வரி அல்லாத வருவாயாக அதிக தொகையை திரட்டுகின்றன. வரி விதிப்பின்மை மற்றும் வரி செலுத்தாததால் இந்த வருவாய் ஆதாரம் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை.**

- 2020–21 ஆம் ஆண்டிற்கான மாநில சொந்த வரியல்லாத வருவாய் 9,040 கோடி ரூபாயாகும் இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0. 47சதவீதமாகும்.
- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மீதான உரிமத்தொகை, வட்டி வரவினங்கள் மற்றும் அரசால் விதிக்கப்படும் கட்டணங்கள் போன்ற வரி அல்லாத வரவினங்கள் மூலம் அதிக வருவாயை திரட்ட பல வாய்ப்புகள் உள்ளன.
- வரி விதிப்பின்மை மற்றும் வரி செலுத்தாததால் இந்த வருவாய் ஆதாரம் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை.


**அட்டவணை 26: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரியல்லாத வருவாயின் சதவீதத்தின் சராசரி**

| காலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரியல்லாத வருவாயின் சதவீதத்தின் சராசரி |
|---|---|
| 2006-07 முதல் 2010-11 வரை | 1.02 |
| 2011-12 முதல் 2015-16 வரை | 0.81 |
| 2016-17 முதல் 2020-21 வரை | 0.71 |


**அட்டவணை 27: மாநில வரியல்லாத வருவாய்–ஆண்டுவாரியான வளர்ச்சி**

| ஆண்டு | ஆண்டுவாரியான வளர்ச்சி (சதவீதத்தில்) |
|---|---|
| 2006-07 | 31.60 |
| 2007-08 | -3.45 |
| 2008-09 | 72.87 |
| 2009-10 | -12.00 |
| 2010-11 | -7.47 |
| 2011-12 | 22.19 |
| 2012-13 | 15.32 |
| 2013-14 | 42.55 |
| 2014-15 | -10.62 |
| 2015-16 | 6.80 |
| 2016-17 | 11.16 |
| 2017-18 | 8.58 |
| 2018-19 | 31.92 |
| 2019-20 | -9.24 |
| 2020-21 | -29.85 |
| **கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்** | **6.69** |

**படம் 16: வரியல்லாத வருவாயின் போக்கு**



**படம் 17: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மாநில சொந்த வரி அல்லாத வருவாயின் சதவீதம்**




**மத்திய வரிகளில் பங்கு:**

**2006–07** ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் பெறப்பட்ட மத்திய வரிகளின் பங்கினை கீழேயுள்ள அட்டவணை **28** காட்டுகிறது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மத்திய வரிகளின் பங்கு, **2007–08** ஆம் ஆண்டில் அதிக அளவான **2.20** சதவீதத்திலிருந்து கோவிட் தொற்றுக்கு முன் **2019–20** ஆம் ஆண்டில் **1.43** சதவீதமாகவும், **2020–21** ஆம் ஆண்டில் **1.28** சதவீதமாக குறைந்துள்ளது. **2021–22** ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் வரவு செலவுத்திட்டத்தில் மேல்வரிகளை அதிகரித்து, மாநிலங்களுக்கு பகிரக்கூடிய நிதியைக் குறைத்ததால் விகிதாச்சாரம் மேலும் குறையும்.

**அட்டவணை 28: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வரிகளில் பங்கு சதவீதம்**

| ஆண்டு | மத்திய வரிகளில் பங்கு (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வரிகளின் பங்கு (சதவீதம்) |
|---|---|---|
| 2006-07 | 6393.86 | 1.95 |
| 2007-08 | 8065.27 | 2.20 |
| 2008-09 | 8510.80 | 2.06 |
| 2009-10 | 8756.19 | 1.76 |
| 2010-11 | 10913.97 | 1.80 |
| 2011-12 | 12714.95 | 1.69 |
| 2012-13 | 14519.69 | 1.70 |
| 2013-14 | 15852.76 | 1.64 |
| 2014-15 | 16824.03 | 1.57 |
| 2015-16 | 20353.86 | 1.73 |
| 2016-17 | 24537.76 | 1.88 |
| 2017-18 | 27099.70 | 1.85 |
| 2018-19 | 30638.77 | 1.88 |
| 2019-20 | 26392.41 | 1.43 |
| 2020-21 | 24906.63 | 1.28 |

மத்திய வரிகளில் தமிழ்நாடு அரசிற்கான பங்கு இரண்டு காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது அதாவது, தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வுத் தொகுப்பின் கிடைமட்ட பங்கு மற்றும் வரிப் பகிர்வுத் தொகுப்பின் அளவு.


**அட்டவணை 29: மத்திய வரிகளில் பங்கு–மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வரிகளின் சராசரி பங்கு மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதம்**

| காலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வரிகளின் பங்கின் சராசரி (சதவீதம்) | கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) |
|---|---|---|
| 2006-07 முதல் 2010-11 வரை | 1.95 | 11.29 |
| 2011-12 முதல் 2015-16 வரை | 1.67 | 9.87 |
| 2016-17 முதல் 2020-21 வரை | 1.67 | 0.30 |

**14 வது மற்றும் 15 வது நிதிக்குழுக்கள் 2011 மக்கள் தொகைக்கு மாறியது தமிழகத்தை மோசமாக பாதித்துள்ளது.**

- 10 வது நிதிக்குழுவில் மத்திய வரிகளின் பங்ககு 6. 63 சதவீதமாக இருந்தது. இது 15 வது நிதிக்குழுல் 4. 07 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- மக்கள்தொகைப் பகிர்வில் 6.124 விழுக்காடும் வரி வருவாயில் 4.079 விழுக்காடும் கொண்டுள்ளது. இது, விகிதாச்சார அடிப்படையில் 66.607 விழுக்காடாகும். இது, ஹரியானா மற்றும் மஹாராஷ்ட்ரா மாநிலங்களைத் தொடர்ந்து மூன்றாவது குறைந்தபட்ச விகிதமாகும்.
- அடுத்த நிதிக்குழுவிற்கு தமிழ்நாடு போன்ற தன் சொந்த வருவாயை நம்பியுள்ள செயல்திறன் மாநிலங்கள், மாநிலங்களுக்கு இயற்றப்படும் அநீதியை தவிர்ப்பதற்கு உரிய விதிமுறையை மாற்றியமைக்கத்தக்க வலுவான வாதத்தை முன் வைக்க வேண்டும்
- ஒன்றிய அரசால் சில வரிகள் மீது விதிக்கப்படும் சலுகைகள் காரணமாக மாநிலங்களுக்கான நதி அளிப்பும் குறைந்தன. 2017–18 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தில் பெருநிறுவனங்களுக்கான வருமான வரி விகிதம் குறைக்கப்பட்டது இதற்கு முக்கியக் காரணமாகும்.

**படம் 18: மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு – போக்கு**




அடுத்தடுத்த நிதிக்குழுக்களின் மத்திய வரிகளின் வரிப்பகிர்வுத் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கான பங்கு குறைந்துள்ளதை அட்டவணை – 30 காட்டுகிறது. அனைத்து மத்திய வரிகளை தொகுத்து பங்கிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்ட 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரையிலான 10 வது நிதிக்குழு காலத்தின்போது 6.637 விழுக்காடாக இருந்த வரிப்பகிர்வு அளவானது, 11 வது நிதிக்குழு காலத்தில் 5.385 விழுக்காடாகவும், 12 வது நிதிக்குழு காலத்தில் 5.305 விழுக்காடாக குறைந்ததுடன், 13 வது நிதிக்குழு காலத்தில் மேலும் குறைந்து 4.969 விழுக்காடாக இருந்தது.

மேலும், 14 வது நிதிக்குழு காலத்தில் தமிழ்நாட்டின் பங்கானது மிகப்பெரிய அளவாக 20 விழுக்காடு சரிந்து 4.023 விழுக்காடாக மட்டுமே இருந்தது. தனிநபர் வருமான இடைவெளிக்கு அதிக மதிப்பீடு வழங்கும் காரணமாகவும், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானமானது 2010–11, 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிகரித்ததன் காரணமாகவும், நம் மாநிலத்திற்கான கிடைமட்ட வரிப்பகிர்வில் கணிசமான அளவில் இழப்பு ஏற்பட்டது.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கு பதிலாக 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொள்வதால் 14வது மற்றும் 15வது நிதிக்குழுக்கள் தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டைப் போல் தேசத்திற்கு பயன்படும் விதமாக மக்கள்


தொகையை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களையும் வெகுவாகப் பாதித்தது. நிலப்பரப்பு அளவுகோல்களுக்கான மதிப்பீட்டை அதிகரித்தது மற்றும் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட காடுகளின் பரப்பளவு அளவுகோல் ஆகியவையும் தமிழ்நாட்டை பாதித்தது.

2016–17 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் தனிநபர் வருமானத்தில் வீழ்ச்சியினாலும் தனிநபர் வருமான இடைவெளி அளவுகோலுக்கான மதிப்பீடு சிறிதளவு குறைக்கப்பட்டதாலும் 15வது நிதிக்குழு காலத்தில் வரிப்பகிர்வுத் தொகுப்பில் தமிழ்நாட்டிற்கான பங்கீடானது 4.079 விழுக்காடாக சிறிதளவு உயர்ந்துள்ளது.

**அட்டவணை 30: நிதிக்குழுக்கள் பரிந்துரைத்த கிடைமட்டப் பங்கு மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்கான பங்கு**

| நிதிக் குழுக்கள் | மத்திய வரிகளில் பங்கு (சதவீதத்தில்) |
|---|---|
| பத்தாவது | 6.637 |
| பதினொன்றாவது | 5.385 |
| பன்னிரெண்டாவது | 5.305 |
| பதின்மூன்றாவது | 4.969 |
| பதினான்காவது | 4.023 |
| 15வது (முதல் அறிக்கை) | 4.189 |
| 15வது (முதன்மை அறிக்கை) | 4.079 |

**படம் 19: நிதிக் குழுக்கள்; மத்திய வரிகளில் கிடைமட்டப் பங்கீடு**




இந்தியாவிலுள்ள 28 மாநிலங்களில் அவைகளுக்கிடையிலான மக்கள் தொகை பங்கீடு மற்றும் வரிப்பகிர்வு தொகுப்பு பங்கீட்டின் விகிதாச்சார அளவை ஒப்பிடும்போது தமிழ்நாடு மக்கள்தொகைப் பகிர்வில் **6.124** விழுக்காடும் வரி வருவாயில் **4.079** விழுக்காடும் கொண்டுள்ளது. இது, விகிதாச்சார அடிப்படையில் **66.607** விழுக்காடாகும். இது, ஹரியானா மற்றும் மஹாராஷ்ட்ரா மாநிலங்களைத் தொடர்ந்து மூன்றாவது குறைந்தபட்ச விகிதமாகும்.

**அட்டவணை 31 : மாநிலங்களுக்கு இடையிலான மக்கள் தொகை–15 வது நிதிக்குழு**

| வ. எண். | மாநிலம் | 2011 மக்கள்தொகை (மில்லியனில்) | மக்கள்தொகையில் மாநிலங்களின் பங்கு (சதவீதத்தில்) | ஒன்றிய வரிகளில் மாநிலங்களின் பங்கு (சதவீதத்தில்) | வித்தியாசம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 (கலம். 5/4*100) |
| 1 | ஆந்திர பிரதேசம் | 49.577 | 4.208 | 4.047 | 96.174 |
| 2 | அருணாச்சலப் பிரதேசம் | 1.384 | 0.117 | 1.757 | 1501.709 |
| 3 | அஸ்ஸாம் | 31.206 | 2.649 | 3.128 | 118.082 |
| 4 | பீகார் | 104.099 | 8.836 | 10.058 | 113.830 |
| 5 | சட்டீஸ்கர் | 25.545 | 2.168 | 3.407 | 157.149 |
| 6 | கோவா | 1.459 | 0.124 | 0.386 | 311.290 |

| வ. எண். | மாநிலம் | 2011 மக்கள்தொகை (மில்லியனில்) | மக்கள்தொகையில் மாநிலங்களின் பங்கு (சதவீதத்தில்) | ஒன்றிய வரிகளில் மாநிலங்களின் பங்கு (சதவீதத்தில்) | வித்தியாசம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6 (கலம். 5/4*100)** |
| 7 | குஜராத் | 60.440 | 5.130 | 3.478 | 67.797 |
| 8 | ஹரியானா | 25.351 | 2.152 | 1.093 | 50.790 |
| 9 | ஹிமாச்சலப் பிரதேசம் | 6.865 | 0.583 | 0.830 | 142.367 |
| 10 | ஜார்கண்ட் | 32.988 | 2.800 | 3.307 | 118.107 |
| 11 | கர்நாடகா | 61.095 | 5.186 | 3.647 | 70.324 |
| 12 | கேரளா | 33.406 | 2.835 | 1.925 | 67.901 |
| 13 | மத்தியப் பிரதேசம் | 72.627 | 6.164 | 7.850 | 127.352 |
| 14 | மஹாராஷ்ட்ரா | 112.374 | 9.538 | 6.317 | 66.230 |
| 15 | மணிப்பூர் | 2.856 | 0.242 | 0.716 | 295.868 |
| 16 | மேகாலயா | 2.967 | 0.252 | 0.767 | 304.365 |
| 17 | மிசோரம் | 1.097 | 0.093 | 0.500 | 537.634 |
| 18 | நாகலாந்து | 1.979 | 0.168 | 0.569 | 338.690 |
| 19 | ஒடிசா | 41.974 | 3.563 | 4.528 | 127.084 |
| 20 | பஞ்சாப் | 27.743 | 2.355 | 1.807 | 76.730 |
| 21 | ராஜஸ்தான் | 68.548 | 5.818 | 6.026 | 103.575 |
| 22 | சிக்கிம் | 0.611 | 0.052 | 0.388 | 746.154 |
| 23 | **தமிழ்நாடு** | **72.147** | **6.124** | **4.079** | **66.607** |
| 24 | தெலுங்கானா | 35.004 | 2.971 | 2.102 | 70.751 |
| 25 | திரிபுரா | 3.674 | 0.312 | 0.708 | 226.923 |
| 26 | உத்திரப் பிரதேசம் | 199.812 | 16.959 | 17.939 | 105.779 |
| 27 | உத்திரகண்ட் | 10.086 | 0.856 | 1.118 | 130.607 |
| 28 | மேற்கு வங்கம் | 91.276 | 7.747 | 7.523 | 97.109 |
| அனைத்து மாநிலங்கள் | | **1178.190** | **100.00** | **100.00** | |

இதேபோன்று, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்களிப்பு அவற்றுடன் பகிர்ந்துகொள்ளக்கூடிய மத்திய வரித் தொகுப்பின் பங்கோடு ஒப்பிடுகையில், தமிழ்நாடு மற்றும் இதர உயர் வருவாய் கொண்ட மாநிலங்கள் குறைந்த விகிதத்திலான பங்கையே பெறுகின்றன. சிறிய மலைப்பிரதேச மாநிலங்களைத் தவிர்த்து இவ்விரு அளவீடுகளை ஒருங்கே கருதும்போது, சில பெரிய மாநிலங்கள் அவற்றின் மக்கள்தொகை மற்றும் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பைவிட அதிகமான விகிதத்தில்

மத்திய வரித் தொகுப்பிலிருந்து பங்கீட்டினைப் பெற்று வருகின்றன. **தனிநபர் வருமான இடைவெளி என்ற காரணி குறைந்த தனிநபர் வருமானம் கொண்ட பெரிய மாநிலங்களுக்குப் பயனளிக்கின்றன.**

**அட்டவணை 32 : தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்கு மற்றும் மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு–15 வது நிதிக்குழு**

| மாநிலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி 2018-19 (ரூபாய் கோடியில்) | தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அனைத்து மாநிலங்களின் பங்கு (சதவீதத்தில்) | மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு (சதவீதத்தில்) | வித்தியாசம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (கலம். 4/3)*100 |
| ஆந்திர பிரதேசம் | 868782 | 4.891 | 4.047 | 82.750 |
| அருணாச்சலப் பிரதேசம் | 24315 | 0.137 | 1.757 | 1283.640 |
| அஸ்ஸாம் | 315881 | 1.778 | 3.128 | 175.909 |
| பீகார் | 522224 | 2.940 | 10.058 | 342.137 |
| சட்டீஸ்கர் | 318573 | 1.793 | 3.407 | 189.980 |
| கோவா | 73159 | 0.412 | 0.386 | 93.727 |
| குஜராத் | 1333668 | 7.508 | 3.478 | 46.326 |
| ஹரியானா | 698830 | 3.934 | 1.093 | 27.784 |
| ஹிமாச்சலப் பிரதேசம் | 154430 | 0.869 | 0.830 | 95.476 |
| ஜார்கண்ட் | 297204 | 1.673 | 3.307 | 197.663 |
| கர்நாடகா | 1490657 | 8.391 | 3.647 | 43.461 |
| கேரளா | 787209 | 4.431 | 1.925 | 43.440 |
| மத்தியப் பிரதேசம் | 780099 | 4.391 | 7.850 | 178.758 |
| மஹாராஷ்ட்ரா | 2571477 | 14.476 | 6.317 | 43.639 |
| மணிப்பூர் | 27915 | 0.157 | 0.716 | 455.639 |
| மேகாலயா | 32167 | 0.181 | 0.767 | 423.575 |
| மிசோரம் | 22786 | 0.128 | 0.500 | 389.805 |
| நாகலாந்து | 28392 | 0.160 | 0.569 | 356.010 |
| ஒடிசா | 491968 | 2.769 | 4.528 | 163.499 |
| பஞ்சாப் | 529607 | 2.981 | 1.807 | 60.611 |
| ராஜஸ்தான் | 916491 | 5.159 | 6.026 | 116.801 |
| சிக்கிம் | 29214 | 0.164 | 0.388 | 235.932 |
| **தமிழ்நாடு** | **1627230** | **9.160** | **4.079** | **44.530** |
| தெலுங்கானா | 845503 | 4.760 | 2.102 | 44.163 |
| திரிபுரா | 48023 | 0.270 | 0.708 | 261.896 |
| உத்திரப் பிரதேசம் | 1607328 | 9.048 | 17.939 | 198.262 |
| உத்திரகண்ட் | 236720 | 1.333 | 1.118 | 83.898 |
| மேற்கு வங்கம் | 1084348 | 6.104 | 7.523 | 123.245 |
| **அனைத்து மாநிலங்கள்** | **17764200** | **100** | **100** | |

அடுத்த நிதிக்குழுவிற்கு தமிழ்நாடு போன்ற தன் சொந்த வருவாயை நம்பியுள்ள செயல்திறன் மாநிலங்கள், மாநிலங்களுக்கு இயற்றப்படும் அநீதியை தவிர்ப்பதற்கு உரிய விதிமுறையை மாற்றியமைக்கத்தக்க வலுவான வாதத்தை முன் வைக்க வேண்டும்

**மத்திய வரிகளின் ஒட்டுமொத்த பகிர்வுத் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கான பங்கீட்டை 32 விழுக்காட்டிலிருந்து 42 விழுக்காடாக உயர்த்தப் பரிந்துரைத்த 14 ஆவது நிதிக்குழுவின் (பரிந்துரை காலம் 2015–16 முதல் 2019–20 வரை) அறிக்கை மீது குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டது. மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை கணிசமான அளவில் பகிர்ந்து அளிக்கக்கூடிய மிகப்பெரிய சீர்திருத்தம் என பாராட்டப்பட்டது. இதன்படி, விருப்புரிமையற்ற பங்கீடு உண்மையில் அதிகரித்திருந்தாலும், மாநிலத்திற்கான மொத்த நிதி அளிப்பு உண்மையில் அதிகரிக்கவில்லை. இது குறைந்திருக்கவும் வாய்ப்புள்ளது.** ஒன்றிய திட்டக் குழுவை கலைத்தபோது, ஒன்றிய அரசால் மாநிலங்களுக்குத் திட்ட மானியமாக வழங்கப்பட்டு வந்த பொதுவான மத்திய நிதியுதவி நிறுத்தப்பட்டது இதற்கு ஒரு காரணமாகும். மேலும், ஒன்றிய நிதியுதவி பெறும் திட்டங்களில் மாநில அரசுகளின் பங்களிப்பும் கணிசமான அளவு உயர்த்தப்பட்டது. ஒன்றிய அரசால் சில வரிகள் மீது விதிக்கப்படும் சலுகைகள் காரணமாக மாநிலங்களுக்கான நிதி அளிப்பும் குறைந்தன. 2017–18 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தில் பெருநிறுவனங்களுக்கான வருமான வரி விகிதம் குறைக்கப்பட்டது இதற்கு முக்கியக் காரணமாகும். பல கோணங்களில் இது ஒரு பின்னோக்கிய நடவடிக்கையாகும். இதனால், ஒட்டுமொத்த வரி வருவாயில் நேரடி வரிகளின் பங்கு குறைந்துள்ளது. இதனால் மத்திய வரி வருவாயில் நேரடி வருவாயின் பங்கு அதிகரித்துக் கொண்டிருந்த நீண்டகால நிலையை மாற்றியுள்ளது. மேலும், பல்வேறு வரி இனங்களின் மீது மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் விதிக்கும் நடைமுறையை ஒன்றிய அரசு அதிகமாகக் கையாண்டு வருகிறது. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 270 மற்றும் 271 இன் கீழ், அத்தகைய வரி விதிப்புகள் பகிர்ந்தளிக்கப்படாது.

**மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்கள்:**

**மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளாத, இந்திய அரசால் விதிக்கப்படும் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் விகிதம் அதிகரித்துள்ளது. இது கவனத்தில் கொள்ள வேண்டிய இனமாகும்.** 2011–12 ஆம் ஆண்டில் 10.4 விழுக்காடாக இருந்த மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் 2019–20 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் 20.2 விழுக்காடாக

உயர்ந்துள்ளது. இந்த மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை.

2013–14 ஆம் ஆண்டு ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தில் தனிநபர் வருமான வரி மீதான கூடுதல் கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து வந்த காலங்களில் அதனை நீட்டித்ததும் நேரடி வரி விதிப்பில் மாநில அரசின் பங்கில் அதிகளவிலான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**பெட்ரோலியப் பொருட்கள் மீதான வரி விதிப்பு முறையில் ஒன்றிய அரசு மேற்கொண்ட முக்கியமான மாற்றங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்திய நடவடிக்கையாகும்.** பெட்ரோலியப் பொருட்களின் மீது ஒன்றிய அரசின் வரி விதிப்பு கணிசமான அளவில் உயர்ந்தது மட்டுமல்லாமல், மாநில அரசுகளுடன் ஒன்றிய அரசு பகிர்ந்து கொள்ளும் ஆயத்தீர்வை குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டதும், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டதும் வருவாய் பங்கீட்டில் மாநில அரசுகளுக்கு இழப்பை ஏற்படுத்தியள்ளன. ஒன்றிய அரசால் பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகளின் அளவு 2014 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 7 ஆண்டுகளாக கணிசமான அளவு அதிகரித்துள்ளது. லிட்டர் ஒன்றுக்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் 10.39 ரூபாயாக விதிக்கப்பட்ட வரிகள், 2021 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் 32.90 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது 216 விழுக்காடு அதிகமாகும். குறிப்பாக 2020 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இந்த உயர்வு மிக அதிக அளவில் காணப்படுகிறது.

**அட்டவணை 33: மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களில் மாற்றங்கள் மூலம் வரிகளில் மாற்றம்**

**(லிட்டர் ஒன்றிற்கு ரூபாய்)**

| ஆயத்தீர்வை | பெட்ரோல் | | டீசல் | |
|---|---|---|---|---|
| | ஏப்ரல் 2017 | ஏப்ரல் 2020 | ஏப்ரல் 2017 | ஏப்ரல் 2020 |
| **வரிகள்** | 9.48 | 1.40 | 11.33 | 1.80 |
| **மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள்** | 12.00 | 31.50 | 6.00 | 30.00 |
| **மொத்தம்** | 21.48 | 32.90 | 17.33 | 31.80 |

(ஆதாரங்கள்: பெட்ரோலியம் திட்டமிடுதல் மற்றும் பகுப்பாய்வு பிரிவு: PRS)

**2011–12 ஆம் ஆண்டில் 10.4 விழுக்காடாக இருந்த மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் 2019–20 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் 20.2 விழுக்காடாக உயர்ந்துள்ளது.**

**இந்த மேல் வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்கள் மாநிலங்களுடன் பகிரப்படாது.**

- ஒன்றிய அரசால் பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகளின் அளவு 2014 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 7 ஆண்டுகளாக கணிசமான அளவு அதிகரித்துள்ளது. லிட்டர் ஒன்றுக்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் 10.39 ரூபாயாக விதிக்கப்பட்ட வரிகள், 2021 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் 32.90 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது 216 விழுக்காடு அதிகமாகும்.
- ஒன்றிய அரசு விதிக்கும் வரிகளை அதிகரிப்பதைத் தாண்டி, மாநிலங்களுடன் பகிர்ந்து அளிக்கவேண்டிய ஒன்றிய கலால் வரியின் பங்கு பெருமளவில் குறைக்கப்பட்டது. மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணம் மாநிலங்களின் வருவாயை குறைக்கும் வண்ணம் கணிசமாக அதிகரித்துள்ளது.
- மொத்த வரி வருவாயில் மானியங்களின் விகிதம் 2006–07 ஆம் ஆண்டில் 8. 13 சதவீதத்லிருந்து 2020–21 ஆம் ஆண்டில் வருவாய் வரவுகளில் 17. 10 சதவீதமாக அதிகரித்தது. . இது கூட்டாட்சி தத்துவத்திற்கும் நிதி சுதந்திரத்திற்கும் எதிரானது.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது ஒன்றிய அரசு விதிக்கும் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் லிட்டர் ஒன்றுக்கு, முறையே 18 ரூபாய் மற்றும் 21 ரூபாய் உயர்த்தப்பட்டது. அதே சமயம், பெட்ரோல் மற்றும் டீசல் மீதான ஆயத்தீர்வை லிட்டர் ஒன்றுக்கு 6.50 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, ஒன்றிய அரசால் விதிக்கப்படும் வரிகள் மற்றும் கட்டணங்கள் பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 11.50 ரூபாயும், டீசல் மீது 14.50 ரூபாயும் என அதிகரித்தது. 2021–22 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தில் வேளாண்மை உட்கட்டமைப்பு மேம்பாட்டு மேல்வரியாக பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 2.50 ரூபாயும், டீசல் மீது லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயும் விதிக்கப்படுவதாக ஒன்றிய நிதியமைச்சர் அறிவித்தார். இந்த வரி விதிப்பும் மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை.

**ஒன்றிய அரசானது கூடுதலான வருவாயை பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரிகள் மற்றும் கட்டணங்கள் வாயிலாக பெறும் நிலையில், மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய மத்திய ஆயத்தீர்வை கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளது இதன் வாயிலாக தெரிய வருகிறது.**

2020–21 ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் கட்டணங்கள் வாயிலாக, ஒன்றிய அரசு 3,89,622 கோடி ரூபாய் வருவாய் பெற்றுள்ளது இது 2019 –20 ஆம் ஆண்டில் பெற்ற வருவாயான 2,39,452 கோடி ரூபாயை விட 63 விழுக்காடு அதிகமாகும். அதே சமயம் ஒன்றிய அரசிடமிருந்து 2019–20 ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான ஆயத்தீர்வையிலிருந்து வரிப் பகிர்வாக 1,163.13 கோடி ரூபாயை பெற்ற தமிழ்நாடு அரசு 2020–21 ஆம் ஆண்டில் 837.75 கோடி மட்டுமே பெற்றுள்ளது.

அதே காலகட்டத்தில் **பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரிகளின் நிகர வரிகளில் பெரிதளவில் மாற்றம் செய்யாத மாநில அரசுகள், பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டு வந்த ஒட்டு மொத்த வரிப்பகிர்வில் குறைவான தொகையினைப் பெற்று பாதிப்புக்குள்ளாகின.**

**ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள்:**

ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள், மொத்த வருவாய் வரவினங்கள் மற்றும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதங்களில் நிலையற்ற தன்மை கொண்டதாக உள்ளது. மொத்த வருவாய் வரவினங்களில் இதன் விகிதம் 2020–21 ஆம் ஆண்டில் அதிகளவாக 17.10 விழுக்காடாகவும், 2006–07 ஆம் ஆண்டில் குறைந்த அளவாக 8.13 விழுக்காடாகவும் இருந்ததை அட்டவணை 34 காட்டுகிறது. அவ்வாறே, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில், 2007–08 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளில் முறையே, 1.78 சதவீதம் மற்றும் 0.76 சதவீதமாகவும் இருந்தது .

2014–15 ஆம் ஆண்டிலிருந்து உயர்ந்து வரும் மொத்த வருவாய் வரவினங்களில், மானியங்களின் வீதம் மாநில அரசானது அதிக அளவில் ஒன்றிய அரசை விருப்புரிமை நிதி வழங்குதலில் சார்ந்திருக்க வேண்டியுள்ளது என்பதை காட்டுகிறது. ஒன்றிய நிதிக்குழு பரிந்துரைத்த உதவி மானியங்களைக்கூட பல்வேறு காரணங்களைக் கூறி ஒன்றிய அரசு உரிய நேரத்தில் விடுவிக்காமல் இருக்கின்றது. **14வது நிதிக்குழு பரிந்துரையின்படி,**

**உள்ளாட்சிகளுக்கு 2017–18 முதல் 2019–20 வரையிலா காலகட்டத்திற்கு விடுவிக்கப்பட வேண்டிய மானியத்தில் ஒரு பெரும் பகுதியை, உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை என்ற காரணத்தினால் ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. இதனால் தமிழ்நாட்டிற்கு 2,577.29 கோடி ரூபாய் மானிய இழப்பு ஏற்பட்டுள்ளது.** 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில் வரப்பெற்ற மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கினைவிட, மானியங்கள் வழியே தமிழ்நாடு அதிக வரவினம் பெற்றுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரிகளின் இழப்பீட்டுத் தொகைக்காக ஒன்றிய அரசு சரக்கு மற்றும் சேவை இழப்பீட்டு மேல்வரி நிதியத்திலிருந்து வழங்கிய தொகை மானியமாகவே கணக்கிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இவ்வாறாக, விருப்புரிமையற்ற நிதி வழங்கல்கள் குறைந்து, விருப்புரிமை நிதி வழங்கல்கள் அதிகரிப்பதான போக்கு மாநில சுயாட்சியை பாதிக்கிறது. அத்தகைய மானியங்களை ஒன்றிய அரசு தன்னிச்சையாகவே மாற்றக்கூடியவையாக உள்ளதால் அது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக உள்ளது.**

**சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு**

2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாளுடன் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு வழங்கும் முறை முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வருவாய் இழப்புகள் ஈடுசெய்யப்படும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு சரக்கு மற்றும் சேவை வரி முறையில் தன்னை இணைத்துக்கொண்டது. சரக்கு மற்றும் சேவை வரி முறையை செயற்படுத்துவதால் வருவாய் சமநிலை ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில், இழப்பீடு வழங்குவதற்கான உத்தரவாதத்தினை ஒன்றிய அரசு வழங்கியது. மேலும், பொருளாதாரத்தில் உயரும் ஆக்கத்திறனாலும் எதிர்நோக்கும் திறன் உயர்வினால் ஏற்படும் பலன்களினாலும் இழப்பீடு வழங்குவதற்கான நிலை எழாமல் போகலாம் என கருதப்பட்டது. உண்மையில், இழப்பீடு கணக்கிடுவதற்காக, 2015–16 ஆம் ஆண்டின் வருவாயை அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் 2013–14, 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் ஒற்றை இலக்க வருவாய் வளர்ச்சி தான் அமைந்தது. இது சரியான நிலையை பிரதிபலிக்கவில்லை.

கோவிட் –19 பெருந்தொற்று காலத்திற்கு முன்னரே வசூலிக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரியானது, உறுதியளிக்கப்பட்ட வரவுகள் மற்றும் வழங்கப்பட வேண்டிய

இழப்பீட்டிற்கு ஏற்ப இல்லை. கோவிட்–19 பெருந்தொற்று காலத்திற்கு பின்னர், இழப்பீட்டு மேல்வரி உள்ளிட்ட வரவுகள் குறைந்தன. இதனால், மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லை. **நடப்பு நிதியாண்டில் சூழல் சாதகமாக மாறுவதற்கும், 2022–23 ஆம் ஆண்டில் வருவாய் வளர்ச்சி அதிகரித்து மாநிலங்களுக்கு தேவையான 2013–14 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலையை அடையவும் சாத்தியக்கூறுகள் இல்லை.**

சரக்கு மற்றும் சேவை வரி வருவாயில் மிதப்பு இல்லாத தன்மையானது, மிகவும் கவலையளிக்கிறது. மாநிலத்தின் நிதிநிலையில் இது முக்கிய அம்சமாக உள்ளது. குறிப்பாக, 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 க்குப் பின்னர் தமிழ்நாட்டின் நிதி நிலை வலுப்பெறுவதற்கு முக்கிய ஆதாரமாக இது திகழும். எனவே, அடுத்த ஆண்டு முதல், சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பு மற்றும் அதற்கான மாற்று முறைகள், ஒன்றிய – மாநில அரசுகளுக்கு இடையேயான நிதி உறவில் முதன்மையானதாக இருக்கும்.

**அட்டவணை 34: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உதவி மானியங்களின் சதவீதம் மற்றும் மொத்த வரி வருவாயில் உதவி மானியங்களின் சதவீதம்**

| ஆண்டு | உதவி மானியங்கள் (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் சதவீதம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் |
|---|---|---|---|
| 2006-07 | 3325.65 | 8.13 | 1.02 |
| 2007-08 | 6531.77 | 13.75 | 1.78 |
| 2008-09 | 7135.01 | 12.96 | 1.73 |
| 2009-10 | 5514.22 | 9.87 | 1.11 |
| 2010-11 | 6840.02 | 9.75 | 1.13 |
| 2011-12 | 7286.31 | 8.55 | 0.97 |
| 2012-13 | 6499.48 | 6.58 | 0.76 |
| 2013-14 | 9122.28 | 8.44 | 0.94 |
| 2014-15 | 18589.27 | 15.18 | 1.73 |
| 2015-16 | 19259.62 | 14.93 | 1.64 |
| 2016-17 | 19838.20 | 14.15 | 1.52 |
| 2017-18 | 14679.44 | 10.04 | 1.00 |
| 2018-19 | 23368.21 | 13.45 | 1.43 |
| 2019-20 | 27783.37 | 15.92 | 1.51 |
| 2020-21 | 28893.52 | 17.10 | 1.49 |

**அட்டவணை 35: தமிழ்நாட்டிற்கான சரக்கு மற்றும் சேவை வரி– நிலுவையிலுள்ள இழப்பீடு (31–03–2022 ல்)**


**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | உறுதி செய்யப்பட்ட வருவாய் | செய்யப்பட்ட வரி வசூல் | வருவாய் இடைவெளி | பெறப்பட்ட இழப்பீடு | நிலுவை |
|---|---|---|---|---|---|
| **2017–18 (ஜூலை 2017 முதல் மார்ச் 2018 வரை)** | 29032.77 | 28014.77 | 1018.00 | 1018.00 | 0.00 |
| **2018–19** | 44129.80 | 38766.72 | 5363.08 | 5363.08 | 0.00 |
| **2019–20** | 50307.98 | 37979.36 | 12328.62 | 12305.00 | 23.62 |
| **2020–21** | 57351.09 | 39455.71 | 17895.38 | --- | 4821.70 |
| **மானியங்கள்** | | | | 6832.68 | |
| **சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கு பதிலாகப் பெறப்பட்ட கடன்** | | | | 6241.00 | |
| **2020–21 (மதிப்பிடப்பட்டது)** | 65380.24 | 46374.04 | 19006.20 | --- | 15187.70 |
| **மானியங்கள்** | | | | --- | |
| **சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கு பதிலாகப் பெறப்பட்ட கடன்** | | | | 3818.50 | |
| **மொத்தம்** | 246201.88 | 190590.60 | 55611.28 | 35578.26 | 20033.02 |

**அட்டவணை 36: உதவி மானியங்கள் – மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதத்தின் சராசரி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதம்**

| காலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உதவி மானியங்களின் சதவீதத்தின் சராசரி | கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதம் (சதவீதம்) |
|---|---|---|
| 2006-07 முதல் 2010-11 வரை | 1.35 | 15.51 |
| 2011-12 முதல் 2015-16 வரை | 1.21 | 21.46 |
| 2016-17 முதல் 2020-21 வரை | 1.39 | 7.81 |

**படம் 20.மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உதவி மானியங்களின் சதவீதம்**





**கோவிட்–19 தொற்றுக்கு முன்னறே சரக்கு மற்றும் சேவை வரியின் வசூல் பாதுகாக்கப்பட்ட வருவாயின் அளவை எட்டவில்லை**

- சரக்கு மற்றும் சேவை வரி வருவாயின் மிதப்புத்தன்மை கவலைக்குரிய காரணமாகும். இது மாநிலங்களின் நிதி நிலையை குறிப்பாக 2022 ஜூன் 30 க்கு பிந்தைய காலகட்டத்தில் பாதிக்கக்கூடியதாகும்.
- மாநில அரசுகளுக்கு உறுதியளித்தபடி சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டை ஒன்றிய அரசால் கொடுக்க முடியவில்லை.
- 2021–22 ஆண்டில் தமிழகத்திற்கு செலுத்த வேண்டிய சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு 20,033 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது .

**அட்டவணை 37: மொத்த வருவாய் வரவினங்களில் மத்திய வரிகளில் பங்கு மற்றும் உதவி மானியங்களின் சதவீதம்**

| ஆண்டு | மொத்த வருவாய் வரவினங்களில் மத்திய வரிகளில் பங்கு (சதவீதத்தில்) | மொத்த வருவாய் வரவினங்களில் மத்திய அரசின் உதவி மானியங்கள் (சதவீதத்தில்) |
|---|---|---|
| 2006-07 | 15.63 | 8.13 |
| 2007-08 | 16.97 | 13.75 |
| 2008-09 | 15.46 | 12.96 |
| 2009-10 | 15.68 | 9.87 |
| 2010-11 | 15.55 | 9.75 |
| 2011-12 | 14.92 | 8.55 |
| 2012-13 | 14.69 | 6.58 |
| 2013-14 | 14.67 | 8.44 |
| 2014-15 | 13.74 | 15.18 |
| 2015-16 | 15.78 | 14.93 |
| 2016-17 | 17.50 | 14.15 |
| 2017-18 | 18.53 | 10.04 |
| 2018-19 | 17.63 | 13.45 |
| 2019-20 | 15.12 | 15.92 |
| 2020-21 | 14.74 | 17.10 |

**படம் 21: மொத்த வருவாய் வரவினங்களில் பங்கு – சதவீதம்**



## செலவினங்களின் போக்குகள்

### வருவாய் செலவுகள்

மாநிலத்தின் ஒட்டுமொத்த செலவினத்தில், வருவாய் செலவினமானது மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. மொத்த வருவாய் செலவினமானது, கடந்த **15** ஆண்டுகளாக மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **11.16 – 13.00** சதவீதத்திற்கு இடையே இருந்துள்ளது **(அட்டவணை 38).** பல ஆண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சியில் இருந்த மாநில அரசின் வருவாய் செலவின வளர்ச்சியானது, **2015–16**ஆம் ஆண்டில் **9.44** சதவீதத்திற்கு குறைந்தது. **2015–16**ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டு காலத்தில் வருவாய் செலவினத்தின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் **8.50** சதவீதமாக இருந்துள்ளது. **2018–19**ஆம் ஆண்டில், ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியது மற்றும் ஓய்வூதியம் தொடர்பான செலவின உயர்வு ஆகியவற்றினால் வருவாய் செலவினம் **17.47** சதவீதம் உயர்ந்ததைத் தவிர, வருவாய் செலவின வளர்ச்சியானது ஒற்றை இலக்கங்களில் இருந்தது. **2018–19**ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் மற்றும் உதவித்தொகைகளின் அளவும் அதிக அளவு அதிகரித்துள்ளது.

**அட்டவணை 38: வருவாய் செலவினம்– ஆண்டுவாரியான வளர்ச்சி சதவீதம்**

| ஆண்டு | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | ஊதியமற்ற செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு | மானியங்கள் | உதவித் தொகைகள் | நிதி மாற்றங்கள் மற்றும் ஏனையவை | ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்கால பலன்கள் | வட்டி செலுத்தல் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 19.35 | -2.52 | 26.32 | 38.80 | -1.21 | 21.28 | 20.13 | -57.89 | 19.54 |
| 2007-08 | 13.68 | 8.25 | 10.29 | 13.83 | 33.44 | 10.60 | 10.32 | -25.00 | 12.31 |
| 2008-09 | 31.56 | 1.17 | 44.84 | 24.12 | 69.12 | 28.24 | -1.64 | 83.33 | 24.70 |
| 2009-10 | 21.86 | 7.51 | 4.34 | 0.47 | 10.99 | 6.96 | 11.89 | -45.45 | 10.79 |
| 2010-11 | 22.23 | -5.01 | 16.92 | 32.38 | 19.98 | 40.93 | 18.52 | 183.33 | 22.81 |
| 2011-12 | 12.47 | 36.44 | 19.24 | 5.33 | 63.73 | 5.52 | 12.01 | -58.82 | 14.98 |
| 2012-13 | 2.99 | 33.45 | 42.54 | 12.18 | 42.76 | 1.77 | 15.06 | 142.86 | 15.78 |
| 2013-14 | 15.46 | 5.95 | 2.77 | 16.89 | 15.94 | 13.33 | 21.17 | 76.47 | 13.14 |
| 2014-15 | 16.34 | 5.55 | 9.46 | 44.15 | 5.28 | 11.76 | 19.41 | 46.67 | 17.30 |
| 2015-16 | 0.17 | 2.46 | 12.36 | 19.16 | 17.72 | 6.75 | 15.84 | -72.73 | 9.44 |
| 2016-17 | 8.05 | -10.11 | 27.91 | 4.19 | -13.05 | 9.12 | 18.09 | 558.33 | 8.65 |
| 2017-18 | 12.10 | 6.81 | 21.81 | -18.87 | 18.35 | 10.79 | 24.14 | -72.15 | 9.58 |
| 2018-19 | 16.79 | 8.98 | 21.79 | 16.42 | 6.30 | 33.23 | 10.26 | 9.09 | 17.47 |
| 2019-20 | 10.08 | 7.98 | 5.77 | 5.26 | -2.28 | 0.72 | 12.20 | 4.17 | 6.71 |
| 2020-21 | -0.75 | 14.90 | 53.24 | 11.01 | -14.47 | -11.70 | -3.33 | -20.00 | 9.46 |

**அட்டவணை 39: மொத்த வருவாய் செலவினங்கள்– கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்**

| **காலம்** | **கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (சதவீதம்)** |
|---|---|
| 2006-07 முதல் 2010-11 வரை | 13.76 |
| 2011-12 முதல் 2015-16 வரை | 10.96 |
| 2016-17 முதல் 2020-21 வரை | 8.50 |

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான செலவினங்களின் போக்கு தொடர்ந்து குறைந்துகொண்டு வருகிறது. கல்வி, மருத்துவம், பொது சுகாதாரம், குடிநீர் வழங்கல், தூய்மைப் பணிகள், வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாடு, ஊட்டச்சத்து மற்றும் வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் உள்ளிட்ட பொருளாதார சேவைகள், ஊரக மேம்பாடு, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், பாசன வசதி, தொழில் மற்றும் கனிமங்கள், போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு உள்ளிட்ட செலவினங்கள், வளர்ச்சிக்கான செலவினங்களில் உள்ளடங்கியுள்ளன.

**2011–12** ஆம் ஆண்டில் அனைத்து மாநிலங்களின் வளர்ச்சிக்கான செலவினங்களின் சராசரி **63.1** சதவீதமாக இருக்கும்போது, தமிழ்நாட்டின் சராசரி **62.9** சதவீதமாக இருந்தது. இது, **2018–19** ஆம் ஆண்டில் **57.5** சதவீதமாக குறைந்தது. இக்குறைவானது, அனைத்து மாநிலங்களின் சராசரியான **62.9** சதவீதத்தை விட மிகக் குறைவாகும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான செலவின விகிதத்தில் ஏற்பட்டுள்ள இக்குறைவு கவலையளிப்பதாகும்.

## அட்டவணை 40: மொத்தச் செலவினங்களில் வளர்ச்சி செலவினங்களின் சதவீதம்

(சதவீதத்தில்)

| வ. எண். | மாநிலம் | 2011-12 (கணக்குகள்) | 2012-13 (கணக்குகள்) | 2013-14 (கணக்குகள்) | 2014-15 (கணக்குகள்) | 2015-16 (கணக்குகள்) | 2016-17 (கணக்குகள்) | 2017-18 (கணக்குகள்) | 2018-19 (கணக்குகள்) | 2019-20 (தி.ம) | 2020-21 (வ.செ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 62.9 | 61.8 | 62.3 | 62.4 | 62.1 | 64.9 | 59.8 | 57.5 | 56.7 | 57.4 |
| 2 | குஜராத் | 65.3 | 67.9 | 67.4 | 68.3 | 68.1 | 66.2 | 64.4 | 63.9 | 64.9 | 62.8 |
| 3 | மஹாராஷ்ட்ரா | 65.6 | 65.4 | 63.9 | 64.9 | 63.7 | 64.0 | 61.0 | 60.0 | 63.4 | 61.2 |
| 4 | ஆந்திரப் பிரதேசம் | 68.0 | 68.2 | 66.9 | 73.6 | 70.2 | 71.8 | 66.7 | 66.5 | 61.8 | 71.6 |
| 5 | கர்நாடகா | 71.0 | 70.5 | 69.0 | 69.1 | 70.5 | 73.2 | 73.1 | 72.0 | 69.7 | 67.0 |
| | அனைத்து மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்கள்** | **63.1** | **63.4** | **63.1** | **65.5** | **67.1** | **67.6** | **64.2** | **62.9** | **63.8** | **63.4** |

** 2017–18 ஆம் ஆண்டு முதல் தரவுகள் டெல்லி மற்றும் புதுச்சேரியை உள்ளடக்கியுள்ளன.

ஆதாரம் – இந்திய ரிசர்வ் வங்கி – மாநிலங்களின் நிதிநிலைகள்

மொத்த செலவினத்தில், சம்பளச் செலவினத்தின் அளவு, 26.19 சதவீதத்திற்கும் 32.67 சதவீதத்திற்கும் இடையே இருந்துள்ளது. 2006–07 ஆம் ஆண்டிலிருந்து 2010–11ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஒட்டுமொத்த செலவினத்தில் சம்பளச் செலவினங்கள் சராசரியாக 14.50 சதவீதத்திலிருந்து, கடந்த 5 ஆண்டுகளில் 12 சதவீதமாக குறைந்துள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மானியங்கள் மற்றும் உதவித்தொகைகள் இரண்டும் சேர்ந்த செலவின சதவீதமானது, 2006–07ஆம் ஆண்டிலிருந்து 2010–11 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 33.13 சதவீதத்திலிருந்து 2016–17ஆம் ஆண்டிலிருந்து 2020–21ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 41 சதவீதமாக உயர்ந்துள்ளது.

2006–07ஆம் ஆண்டில் உதவித்தொகை 6,126.69 கோடி ரூபாயாக இருந்தது. 2020–21ஆம் ஆண்டில் அது 31,410.53 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. மொத்த

செலவினத்தில், **2006–07**ஆம் ஆண்டில் **16.01** சதவீதமாக இருந்த உதவித்தொகை, **2020–21** ஆம் ஆண்டில் **13.64** சதவீதமாகக் குறைந்துள்ளது. **மாறாக, 2006–07ஆம் ஆண்டில், வருவாய் செலவினத்தின் 12.65 சதவீதமும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.48 சதவீதமான 4,841.80 கோடி ரூபாயாக இருந்த மானியங்கள், விரைவாக உயர்ந்து 2020–21ஆம் ஆண்டில் 62,338.84 கோடி ரூபாயை எட்டியது. இது, மொத்த வருவாய் செலவினத்தில் 27.06 சதவீதமும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.21 சதவீதமும் ஆகும்.** 2020–21 ஆம் ஆண்டில் கோவிட் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட ஆண்டாக இருந்தாலும்கூட, மொத்த வருவாய் செலவினத்தில் **19.5** சதவீதமாக உள்ள மானியச் செலவினங்கள் **2018–19** ஆம் ஆண்டிலேயே மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **2.36** சதவீதம் அளவை எட்டியுள்ளது.

**அட்டவணை 41: மொத்த வருவாய் செலவினத்தில் வருவாய் செலவின இனங்களின் சதவீதம்**

| ஆண்டு | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | ஊதியமற்ற செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு | மானியங்கள் | உதவித் தொகைகள் | நிதி மாற்றங்கள் மற்றும் ஏனையவை | ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்கால பலன்கள் | வட்டி செலுத்தல் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 27.95 | 10.90 | 12.65 | 16.01 | 2.97 | 14.22 | 15.27 | 0.02 |
| 2007-08 | 28.29 | 10.51 | 12.43 | 16.23 | 3.53 | 14.01 | 15.00 | 0.01 |
| 2008-09 | 29.85 | 8.52 | 14.43 | 16.15 | 4.79 | 14.40 | 11.83 | 0.02 |
| 2009-10 | 32.83 | 8.27 | 13.59 | 14.65 | 4.80 | 13.90 | 11.95 | 0.01 |
| 2010-11 | 32.67 | 6.40 | 12.94 | 15.79 | 4.69 | 15.96 | 11.53 | 0.02 |
| 2011-12 | 31.96 | 7.59 | 13.42 | 14.47 | 6.67 | 14.64 | 11.23 | 0.01 |
| 2012-13 | 28.43 | 8.75 | 16.52 | 14.02 | 8.23 | 12.87 | 11.16 | 0.02 |
| 2013-14 | 29.01 | 8.19 | 15.01 | 14.48 | 8.43 | 12.89 | 11.96 | 0.03 |
| 2014-15 | 28.77 | 7.37 | 14.00 | 17.79 | 7.57 | 12.28 | 12.17 | 0.03 |
| 2015-16 | 26.34 | 6.90 | 14.38 | 19.37 | 8.14 | 11.98 | 12.88 | 0.01 |
| 2016-17 | 26.19 | 5.71 | 16.92 | 18.58 | 6.51 | 12.03 | 14.00 | 0.05 |
| 2017-18 | 26.79 | 5.57 | 18.81 | 13.75 | 7.04 | 12.16 | 15.86 | 0.01 |
| 2018-19 | 26.64 | 5.16 | 19.50 | 13.63 | 6.37 | 13.80 | 14.89 | 0.01 |
| 2019-20 | 27.48 | 5.23 | 19.33 | 13.45 | 5.83 | 13.02 | 15.65 | 0.01 |
| 2020-21 | 24.92 | 5.49 | 27.06 | 13.64 | 4.56 | 10.50 | 13.83 | 0.01 |

**அட்டவணை 42: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் செலவினங்களின் சதவீதம்**

| ஆண்டு | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | ஊதியமற்ற செயல்பாடுகள் மற்றும் ராமரிப்பு | மானியங்கள் | உதவித் தொகைகள் | நிதி மாற்றங்கள் மற்றும் ஏனையவை | ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்கால பலன்கள் | வட்டி செலுத்தல் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 3.26 | 1.27 | 1.48 | 1.87 | 0.35 | 1.66 | 1.78 | 0.00 | 11.68 |
| 2007-08 | 3.31 | 1.23 | 1.45 | 1.90 | 0.41 | 1.64 | 1.76 | 0.00 | 11.71 |
| 2008-09 | 3.88 | 1.11 | 1.88 | 2.10 | 0.62 | 1.87 | 1.54 | 0.00 | 13.00 |
| 2009-10 | 3.91 | 0.99 | 1.62 | 1.75 | 0.57 | 1.66 | 1.42 | 0.00 | 11.92 |
| 2010-11 | 3.92 | 0.77 | 1.55 | 1.89 | 0.56 | 1.91 | 1.38 | 0.00 | 12.00 |
| 2011-12 | 3.57 | 0.85 | 1.50 | 1.61 | 0.74 | 1.63 | 1.25 | 0.00 | 11.16 |
| 2012-13 | 3.23 | 0.99 | 1.88 | 1.59 | 0.93 | 1.46 | 1.27 | 0.00 | 11.36 |
| 2013-14 | 3.29 | 0.93 | 1.70 | 1.64 | 0.96 | 1.46 | 1.36 | 0.00 | 11.34 |
| 2014-15 | 3.46 | 0.89 | 1.68 | 2.14 | 0.91 | 1.48 | 1.46 | 0.00 | 12.01 |
| 2015-16 | 3.16 | 0.83 | 1.72 | 2.32 | 0.98 | 1.44 | 1.54 | 0.00 | 11.98 |
| 2016-17 | 3.08 | 0.67 | 1.99 | 2.18 | 0.77 | 1.41 | 1.65 | 0.01 | 11.76 |
| 2017-18 | 3.07 | 0.64 | 2.16 | 1.58 | 0.81 | 1.39 | 1.82 | 0.00 | 11.46 |
| 2018-19 | 3.22 | 0.62 | 2.36 | 1.65 | 0.77 | 1.67 | 1.80 | 0.00 | 12.10 |
| 2019-20 | 3.13 | 0.60 | 2.20 | 1.53 | 0.66 | 1.48 | 1.78 | 0.00 | 11.40 |
| 2020-21 | 2.95 | 0.65 | 3.21 | 1.62 | 0.54 | 1.25 | 1.64 | 0.00 | 11.85 |

**அட்டவணை 43: மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருவாய் செலவினங்களின் சராசரி சதவீதத்தின் சராசரி**

| காலம் | சராசரி |
|---|---|
| 2006-07 முதல் 2010-11 வரை | 12.06 |
| 2011-12 முதல் 2015-16 வரை | 11.57 |
| 2016-17 முதல் 2020-21 வரை | 11.71 |

பொதுமக்களின் நலனை மேம்படுத்துவதற்கும், அவர்கள் நேரடியாக பலன்களைப் பெறவும், மானியங்களை மறுசீரமைத்து, உரிய நபர்களுக்கு வழங்குவது குறித்த சில அவசரகால சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை இத்தகைய அதிக அளவிலான மானியங்கள் உணர்த்துகின்றன. **ஏழை எளிய மற்றும் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாமல், பயனாளர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை சிக்கனமான முறையில் வழங்கக்கூடிய மாற்றுவழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யப்படலாம்.**

**வருவாய் செலவினம் என்பது மாநிலத்தின் ஒட்டுமொத்த செலவினங்களின் மிகப்பெரிய அங்கமாகும். இதனை கோவிட் பெருந்தொற்றிற்கு முன்பிருந்தே சரியாக நிர்வகிக்காமல் விட்டுவிட்டனர்**

- 2006−07 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் செலவினங்களில் மானியங்களின் வீதம் 12. 65 சதவீதம் (4841. 80 கோடி ரூபாய்).இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.48 சதவீதம். இது விரைவாக உயர்ந்து, 2020–21 ஆம் ஆண்டில், வருவாய் செலவினங்களில் 27.06 சதவீதமாகவும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.21 சதவீதமாகவும் இருந்தது.
- மற்ற மானியங்களை விட மின்சார மானியம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1–10 சதவீதம் என அதிகமான அளவில் உள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் /தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் பெருகிவரும் இழப்புகளால் மின்துறையில் அரசிற்கு அதிக அளவில் இழப்பு ஏற்படுகிறது.
- உணவு மானியம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0. 49 சதவீதம் மற்றும்
- போக்குவரத்து மானியம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0. 19 சதவீதம் ஆகும்
- சில அவசரகால சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை இத்தகைய அதிக அளவிலான மானியங்கள் உணர்த்துகின்றன. பயனாளர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை சிக்கனமான முறையில் வழங்கக்கூடிய மாற்றுவழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யப்படலாம்
- ஒட்டுமொத்தமாக, வருவாய் வரவினங்களின் வளர்ச்சியான 9.92 சதவீதத்தை விட வருவாய் செலவின வளர்ச்சி வீதமான 12.71 சதவீதத்தில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகிறது. இதனால், தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

உணவு மானியம், மின்சார மானியம் மற்றும் போக்குவரத்து மானியங்கள் ஆகியவை மானியங்களின் முக்கிய இனங்களாகும். இந்த மானியங்களின் செலவுகள் குறித்த விவரத்தை அட்டவணை 44–இல் காணலாம்.

**அட்டவணை 44: உணவு, மின்சாரம் மற்றும் போக்குவரத்து மானியங்களின் போக்குகள்**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | உணவு மானியம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் | மின்சார மானியம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் | போக்குவரத்து மானியம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 2026.49 | 0.62 | 1424.84 | 0.43 | 350.49 | 0.11 |
| 2007-08 | 1950.00 | 0.53 | 1465.03 | 0.40 | 300.29 | 0.08 |
| 2008-09 | 2700.00 | 0.66 | 1493.44 | 0.36 | 301.01 | 0.07 |
| 2009-10 | 4000.00 | 0.80 | 1651.21 | 0.33 | 301.27 | 0.06 |
| 2010-11 | 3950.00 | 0.65 | 1626.78 | 0.27 | 302.52 | 0.05 |
| 2011-12 | 4900.00 | 0.65 | 2013.45 | 0.27 | 390.23 | 0.05 |
| 2012-13 | 4900.00 | 0.57 | 4082.64 | 0.48 | 536.37 | 0.06 |
| 2013-14 | 4900.00 | 0.51 | 4917.99 | 0.51 | 1123.17 | 0.12 |
| 2014-15 | 5000.00 | 0.47 | 5988.07 | 0.56 | 1048.40 | 0.10 |
| 2015-16 | 5300.00 | 0.45 | 6696.71 | 0.57 | 737.10 | 0.06 |
| 2016-17 | 5500.00 | 0.42 | 8132.48 | 0.62 | 1126.12 | 0.09 |
| 2017-18 | 6000.00 | 0.41 | 12405.17 | 0.85 | 1380.74 | 0.09 |
| 2018-19 | 7988.77 | 0.49 | 12294.67 | 0.75 | 1131.17 | 0.07 |
| 2019-20 | 8363.13 | 0.45 | 13769.21 | 0.75 | 1559.02 | 0.08 |
| 2020-21 | 9604.26 | 0.49 | 21349.71 | 1.10 | 3704.39 | 0.19 |

மின்சார மானியத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மிகவும் கவலையளிக்கக் கூடியதாக உள்ளது. அது தற்போது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீதமாக உள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரிசியை விலையில்லாமல் வழங்கி வந்தாலும், அரிசிக்கான மானியத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த பகுதி 2013 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உறுதியளிக்கப்பட்ட அளவிலான அரிசி மானிய விலையில் ஒதுக்கீடாகப் பெறப்படுகிறது. இதற்கு மேல், மாநில அரசு கூடுதல் மானியம் வழங்குகிறது. சமையல் எண்ணெய் மற்றும்

துவரம் பருப்பு ஆகியவற்றை மானிய விலையில் விநியோகம் செய்வதற்கான மொத்த செலவையும் மாநில அரசு மானியமாக வழங்கி வருகிறது.

கடந்த 15 ஆண்டுகளில் உதவித்தொகைகள், மானியங்கள் மற்றும் வட்டித்தொகை செலுத்துகை ஆகிய மூன்றும் விரைவாக உயரும் செலவினங்களாக இருந்துள்ளன. சம்பளங்கள், ஊதியங்கள், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பயன்கள் ஆகியவை செலவினத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதத்தை விட குறைவான வீதத்தில் அதிகரித்து வருகிறது. அரசுத் துறைகளில் பெருமளவிலான பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதும், சம்பளச் செலவினத்தில் காணப்படும் குறைந்த விகிதத்திலான உயர்விற்கு ஒரு முக்கியக் காரணமாகும்.

இது, சில செலவினங்களை மீதப்படுத்தி, உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வழிவகுத்திருந்தாலும், திறன்மிகு நபர்கள் பல்வேறு துறைகளில் இல்லாததால் திறன்மிக்க சேவையைப் பெறுவதில் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். மேலும் சேவைகளை அரசு வழங்குவதிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, வருவாய் வரவினங்களின் வளர்ச்சியான 9.92 சதவீதத்தை விட வருவாய் செலவின வளர்ச்சி வீதமான 12.71 சதவீதத்தில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகிறது. இதனால், தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

**மூலதன செலவினம்**

2006–07ஆம் ஆண்டு முதல் 2010–11ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மூலதன செலவினம் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 1.97 சதவீதமாக இருந்தது. இச்சதவீதமானது, 2011–12ஆம் ஆண்டிலிருந்து 2015–16ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 1.78 சதவீதமாகவும், 2016–17 மற்றும் 2020–21ஆம் ஆண்டுகளுக்கிடையேயான காலத்தில் 1.50 சதவீதமாக மேலும் குறைந்துள்ளது. 2019–20ஆம் ஆண்டில் 1.39 சதவீதமாகவும், 2017–18ஆம் ஆண்டில் 1.38 சதவீதமாக குறைந்தது. 2020–21ஆம் ஆண்டில் மூலதன செலவினத்தை உயர்த்துவதற்கான சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டதால், இந்த விகிதமானது, மாநிலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.67 சதவீதத்திற்கு உயர்ந்தது.

**அட்டவணை 45: மூலதனச் செலவினங்களின் போக்குகள்**


| ஆண்டு | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபாய் கோடியில்) | மொத்த மூலதனச் செலவுகள் (ரூபாய் கோடியில்) | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவுகளின் சதவீதம் | ஆண்டுவாரியான வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 2006-07 | 327614 | 5953 | 1.82 | 46.81 |
| 2007-08 | 367089 | 7462 | 2.03 | 25.35 |
| 2008-09 | 412188 | 9104 | 2.21 | 22.00 |
| 2009-10 | 497972 | 8572 | 1.72 | -5.84 |
| 2010-11 | 607656 | 12437 | 2.05 | 45.09 |
| 2011-12 | 751486 | 16336 | 2.17 | 31.35 |
| 2012-13 | 854825 | 14568 | 1.70 | -10.82 |
| 2013-14 | 968530 | 17173 | 1.77 | 17.88 |
| 2014-15 | 1072678 | 17804 | 1.66 | 3.67 |
| 2015-16 | 1176500 | 18995 | 1.61 | 6.69 |
| 2016-17 | 1302639 | 20709 | 1.59 | 9.02 |
| 2017-18 | 1465051 | 20202 | 1.38 | -2.45 |
| 2018-19 | 1630208 | 24311 | 1.49 | 20.34 |
| 2019-20 | 1845853 | 25632 | 1.39 | 5.43 |
| 2020-21 | 1943399 | 32474 | 1.67 | 26.69 |

மூலதனச் செலவின வளர்ச்சியில் ஆண்டுதோறும் காணப்பட்ட அதிகளவு வேறுபாடும், **2012–13**ஆம் ஆண்டிலிருந்து **2017–18**ஆம் ஆண்டுகளில் மூலதன செலவினம் மிகவும் குறைந்ததும் கவலைக்குரியவையாகும். நிதிப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் முதலாவதாக மூலதன செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இது, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**அட்டவணை 46: மூலதனச் செலவினங்கள் – மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீதத்தின் சராசரி மற்றும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்**

| காலம் | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவுகளின் சதவீதத்தின் சராசரி | கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|
| 2006-07 முதல் 2010-11 வரை | 1.97 | 15.88 |
| 2011-12 முதல் 2015-16 வரை | 1.78 | 3.06 |
| 2016-17 முதல் 2020-21 வரை | 1.50 | 9.41 |

**படம் 22: மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவினங்களின் சதவீதம்**




**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி பகிர்வு**

தமிழ்நாட்டில் **15** மாநகராட்சிகள், **121** நகராட்சிகள் மற்றும் **528** பேரூராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய **664** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. தற்போது, மாநிலத்தின் மக்கள் தொகையில் **50** சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிப்பதால், அவர்களுக்கு சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வை உயர்த்த வேண்டியுள்ளது.

**அட்டவணை 47: 2018–19ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட இந்திய மாநிலங்களில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீடுகள் மற்றும் நிதி (உள்ளபடியானவை)**

| வ.எண். | மாநிலம் | ரூபாய் கோடியில் | வருவாய் செலவினங்களில் சதவீதம் | வருவாய் வரவுகளில் சதவீதம் | சொந்த வரி வருவாயில் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆந்திரப் பிரதேசம் | 41.14 | 0.03 | 0.04 | 0.07 |
| 2 | அஸ்ஸாம் | 273.89 | 0.48 | 0.43 | 1.67 |
| 3 | பீஹார் | 3.91 | 0.00 | 0.00 | 0.01 |
| 4 | சத்தீஸ்கர் | 895.16 | 1.39 | 1.38 | 4.09 |
| 5 | குஜராத் | 364.82 | 0.27 | 0.27 | 0.45 |
| 6 | ஹரியானா | 221.80 | 0.29 | 0.34 | 0.52 |
| 7 | ஹிமாச்சலப் பிரதேசம் | 9.39 | 0.03 | 0.03 | 0.12 |
| 8 | ஜார்கண்ட் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 9 | கர்நாடகா | 5425.31 | 3.30 | 3.29 | 5.56 |
| 10 | கேரளா | 8898.72 | 8.07 | 9.58 | 17.44 |
| 11 | மத்தியப் பிரதேசம் | 7671.66 | 5.42 | 5.10 | 14.72 |
| 12 | மஹாராஷ்ட்ரா | 20107.21 | 7.53 | 7.21 | 10.68 |
| 13 | ஒடிசா | 1363.02 | 1.60 | 1.37 | 4.39 |
| 14 | பஞ்சாப் | 2264.66 | 3.00 | 3.64 | 7.12 |
| 15 | இராஜஸ்தான் | 0.08 | 0.00 | 0.00 | 0.00 |
| 16 | **தமிழ்நாடு** | **14879.55** | **7.55** | **8.56** | **14.02** |
| 17 | உத்தரப் பிரதேசம் | 12100.39 | 4.01 | 3.67 | 9.85 |
| 18 | உத்தரகாண்ட் | 1459.32 | 4.53 | 4.67 | 11.82 |
| 19 | மேற்கு வங்கம் | 488.73 | 0.31 | 0.33 | 0.79 |

**ஆதாரம் (அடிப்படைத் தரவுகள்) :** இந்திய ரிசர்வ் வங்கி, மாநில நிதிநிலை: மாநில வரவு–செலவுத் திட்டங்கள் பற்றிய ஆய்வு (பல்வேறு ஆண்டுகள்)

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவில் நிதிசார் சுயாட்சியை வழங்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். உண்மையில், தமிழ்நாடு அரசு உள்ளாட்சி

அமைப்புகளுக்கு அதிக அளவு இழப்பீடுகளும், நிதியும் வழங்குகின்றது. வருவாய் செலவினங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடு மற்றும் நிதியின் வீதத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

தற்போது, மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடுகளாகவும், நிதியாகவும், மொத்த வருவாய் செலவினத்தில் 7.55 சதவீதமும், சொந்த வரி வருவாயில் 14.02 சதவீதமும் வழங்கப்படுகிறது. மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடாகவும், நிதியாகவும் வழங்கப்பட்ட மொத்த தொகை குறித்த விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணை 47–இல் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 48: தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் மற்றும் நிதியுதவி**

**(ரூபாய் கோடியில்)**

| | 2008-09 | 2009-10 | 2010-11 | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாநகராட்சி | 477 | 453 | 680 | 808 | 1014 | 1339 | 1376 | 1511 | 1912 | 1770 | 2384 | 2525 |
| நகராட்சி / மன்றங்கள் | 634 | 617 | 1220 | 1403 | 1903 | 1425 | 1697 | 1864 | 2119 | 1852 | 2441 | 2502 |
| நகர ஊராட்சி | 393 | 500 | 654 | 1064 | 1052 | 1094 | 1182 | 1210 | 1555 | 1469 | 2003 | 2085 |
| ஜில்லா/மாவட்ட ஊராட்சிகள் | 137 | 276 | 225 | 267 | 340 | 329 | 342 | 347 | 394 | 285 | 337 | 323 |
| வட்டாரம்/இடைநிலை ஊராட்சிகள் | 723 | 751 | 1188 | 1419 | 1736 | 1768 | 1952 | 1540 | 1508 | 1320 | 1554 | 1591 |
| கிராம ஊராட்சிகள் | 1615 | 1403 | 1895 | 2532 | 3119 | 3220 | 3432 | 4260 | 4978 | 4774 | 6161 | 6661 |
| **அனைத்து உள்ளாட்சி அமைப்புகள்** | **3980** | **3999** | **5861** | **7493** | **9164** | **9175** | **9980** | **10731** | **12466** | **11470** | **14880** | **15688** |
| **உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்தப் பங்கு சதவீதத்தில்** | | | | | | | | | | | | |
| மாநகராட்சி | 11.99 | 11.32 | 11.6 | 10.79 | 11.06 | 14.6 | 13.79 | 14.08 | 15.34 | 15.43 | 16.02 | 16.1 |
| நகராட்சி / மன்றங்கள் | 15.94 | 15.42 | 20.82 | 18.73 | 20.77 | 15.53 | 17 | 17.37 | 17 | 16.14 | 16.41 | 15.95 |
| நகர ஊராட்சி | 9.86 | 12.49 | 11.15 | 14.2 | 11.48 | 11.92 | 11.84 | 11.28 | 12.48 | 12.81 | 13.46 | 13.29 |
| ஜில்லா/மாவட்ட ஊராட்சிகள் | 3.45 | 6.9 | 3.84 | 3.56 | 3.72 | 3.59 | 3.43 | 3.23 | 3.16 | 2.49 | 2.26 | 2.06 |
| வட்டாரம்/இடைநிலை ஊராட்சிகள் | 18.17 | 18.79 | 20.27 | 18.94 | 18.94 | 19.27 | 19.56 | 14.35 | 12.1 | 11.51 | 10.44 | 10.14 |
| கிராம ஊராட்சிகள் | 40.58 | 35.08 | 32.32 | 33.79 | 34.04 | 35.1 | 34.39 | 39.7 | 39.93 | 41.62 | 41.4 | 42.46 |
| **அனைத்து உள்ளாட்சி அமைப்புகள்** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** |

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிகர மாநில சொந்த வரி வருவாயின் 10 சதவீதம் பகிரப்பட்டு வருகிறது. இத்தொகையானது, மேற்கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 56:44 என்ற வீதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இவ்வாறு கணிசமான நிதிப் பகிர்வு அளிக்கப்பட்டபோதிலும், உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு மின்சாரம் மற்றும் குடிநீருக்கான கட்டணங்களை செலுத்துவதில்லை. இத்தகைய நிறுவனங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை குறித்த விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணை 49–இல் அளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 49: உள்ளாட்சி அமைப்புகளின் மின்சாரக் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டண நிலுவை**

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண். | உள்ளாட்சி அமைப்பு | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு மின் கட்டண நிலுவை | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர்க் கட்டண நிலுவை |
|---|---|---|---|
| 1 | **மாநகராட்சிகள்** | 411.52 | 261.05 |
| 2 | **நகராட்சிகள்** | 163.99 | 10.09 |
| 3 | **பேரூராட்சிகள்** | 41.29 | 10.82 |
| 4 | **கிராம ஊராட்சிகள்** | 642.39 | 202.14 |
| | **மொத்தம்** | 1259.20 | 484.10 |

வரி வருவாய், வரி அல்லாத வருவாய், மானியங்கள் மற்றும் கடன்கள் ஆகியவற்றை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரமாகும். மாநில நிதிக்குழுவின் நிதிப் பகிர்வு மற்றும் மாநில மற்றும் ஒன்றிய நிதிக் குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்களைத் தவிர, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் வரி

வருவாயின் முதன்மையான ஆதாரமாக சொத்து வரி உள்ளது. இது, உள்ளாட்சி அமைப்புகளின் வரி வருவாயில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

**நிலையானதாகவும், நேரடியாக சரிபார்க்கப்படக் கூடியதாகவும் நியாயமான மற்றும் பாகுபாடற்ற வகையில் வரி வசூலிக்கும் வகையிலானது என்பதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொத்து வரி ஒரு சிறந்த வரி வருவாயாக உள்ளது.**

மாநகராட்சி சட்டங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, கட்டடங்களின் ஆண்டுவாரியான வாடகை மதிப்பின் மீது குறைந்தளவு மற்றும் உயரளவு சதவீதத்திற்குள் (15.5 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையிலான அளவிற்குள்) சொத்து வரியை விதிப்பதற்காக வரி வீதத்தை நிர்ணயிப்பதற்கு மாநகராட்சி குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை பொறுத்தமட்டில், 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் ஐந்தாண்டுகளுக்கொரு முறை சொத்து வரியில், குறிப்பிட்ட காலமுறையில் திருத்தம் செய்வதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. **பொதுவான சொத்து வரி திருத்தம் கடைசியாக 2008ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.**

2020–21 ஆம் நிதியாண்டின் இறுதியில், 664 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 2,565.05 கோடி ரூபாய் ஆண்டு கேட்புத் தொகையுடன், 89,53,969 சொத்து வரி மதிப்பீடுகள் இருந்தன. மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஆண்டுவாரியான வாடகையின் அடிப்படையில், கட்டடங்களுக்கான சொத்து வரியினை விதிக்கின்றன. இது, உள்ளாட்சி அமைப்பின் மொத்த பகுதியை மூன்று அல்லது நான்கு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தின் சராசரி வாடகை மதிப்பினை கணக்கில் கொண்டு, சம்பந்தப்பட்ட நகராட்சி குழுக்களால் நிர்ணயிக்கப்படும் மண்டல அடிப்படை மதிப்பின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது. 1998ஆம் ஆண்டிலிருந்து கட்டட பரப்பு அடிப்படையிலும், மண்டல அடிப்படை மதிப்பின் பேரிலும் சொத்து வரி விதிக்கும் வழிமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு பகுதியின் கட்டடத்தில் வாடகை மதிப்பானது, நிலத்தின் மூலதன மதிப்புடன் (வழிகாட்டி மதிப்பு) தொடர்புடையது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது அறிக்கையை சமர்ப்பித்த ஐந்தாவது மாநில நிதிக்குழு 2007–08 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சொத்து வரியின் விகிதம் 0.21 சதவீதத்திலிருந்து, 2012–13 ஆம் ஆண்டில்

0.16 சதவீதமாகக் குறைந்திருந்ததைக் குறிப்பிட்டிருந்தது. மேலும், மஹாராஷ்ட்ரா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களை ஒப்பிடும்போது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சொத்து வரி வசூல் தமிழ்நாட்டில் குறைவாகவே உள்ளது. வரி வசூலை உயர்த்துவதற்கு, சொத்துப் பதிவேடுகள் மற்றும் சொத்து கணக்கெடுப்பினை புதுப்பித்தல், திறன்மிக்க வசூல், மதிப்பீட்டு முறை, விதிவிலக்குகளை மறு ஆய்வு செய்தல் மற்றும் வரி விகிதங்களை உயர்த்துதல் ஆகியவற்றை ஆணையம் குறிப்பிட்டுள்ளது. ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் அறிக்கையில் சொத்து வரி குறித்த பரிந்துரைகள் தமிழக அரசால் பகுதியளவே ஏற்கப்பட்டு, உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2018ஆம் ஆண்டில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற அமர்வில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் (ரிட் மனு 2730/2018), 1.4.2018 முதல் சொத்து வரியில் பொதுவான திருத்தத்தை மேற்கொள்வதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. எனினும், திருத்த வரி விதிப்பு முறையை நிர்ணயிப்பதில் வேறுபாடுகள் இருந்ததால், இந்த விவகாரத்தை ஆய்வு செய்வதற்கு அரசு குழு ஒன்றை அமைத்ததுடன், பொது திருத்தத்தை நிறுத்தி வைப்பதற்கான ஆணைகளையும் பிறப்பித்தது. இன்று வரையில், அறிக்கை பெறப்படவில்லை.

மாநில மற்றும் ஒன்றிய நிதி குழுவின் பரிந்துரைகளைக் கருதும்போது காலமுறையில் சொத்து வரி திருத்தம் செய்வது முக்கியத்துவம் பெறுகின்றது. ஐந்தாவது மாநில நிதிக் குழு பரிந்துரைத்த, நிதிக்குழுவின் இறுதி ஆண்டான 2021–22 ஆம் ஆண்டிற்குள், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சொத்து வரி வருவாய் 0.60 சதவீதம் என்ற இலக்கினை, 0.25 சதவீதமாக மாநில அரசு குறைத்துள்ளது. இவ்வாறு குறைக்கப்பட்ட இலக்கினை அடைவதென்பதும் சந்தேகத்திற்குரியது. **இவ்வாறாக, உள்ளாட்சி அமைப்புகள் சுயாட்சி பெற்று 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், அவற்றின் வரி வசூலிப்பு திறன் மேம்படாமல் உள்ளது.**

பதினைந்தாவது ஒன்றிய நிதிக் குழு, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் 2021–22 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, குறைந்தபட்ச அடிப்படை விகிதத்தை நிர்ணயம் செய்து, செயல்பாட்டுக்குக் கொண்டு வருதல், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்திற்கு இணையாக சொத்து வரி வசூலிப்பதை தொடர்ச்சியாக மேம்படுத்துதல், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை பொது வெளியில் அளித்தல் ஆகிய முதல் நிலை நிபந்தனைகளை நிறைவேற்றினால் தான் மானியம் பெற முடியும்.

**2021–22 ஆம் ஆண்டில் சொத்து வரி அடிப்படை வீதங்களை அறிவிக்கை செய்வதற்கான நிபந்தனையானது 2022–23ஆம் ஆண்டிலிருந்து மானியங்கள் பெறுவதற்கான தகுதியாக அமையும்.**

சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுதப்பட்டதால் மாநில வரி விதிப்பில் கூடுதல் நிதி ஆதாரத்தை திரட்டுவதற்கான வழிவகைகள் கட்டுப்படுத்தப்பட்டது. எனவே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சொத்து வரி வசூலிப்பை அதிகரிப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். சொத்து வரி வசூலிப்பை அதிகரிப்பது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுயாட்சியை அதிகரிப்பதுடன், நிதிப் பகிர்வு மற்றும் பல்வேறு திட்டங்களுக்காக, மாநில அரசு ஏற்கும் நிதிச்சுமை குறையும். மேலும், உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், பொதுச்சேவையை திறம்பட வழங்குவதற்கும் கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைக்கும்.

**மாநிலத்தின் மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கிறார்கள்.**

- மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடுகளாகவும், நிதியாகவும், மொத்த வருவாய் செலவினத்தில் 7.55 சதவீதமும், சொந்த வரி வருவாயில் 14.02(14,879.55 கோடி ரூபாய் ) சதவீதமும் வழங்கப்படுகிறது.
- நிலையானதாகவும், நேரடியாக சரிபார்க்கப்படக் கூடியதாகவும் நியாயமான மற்றும் பாகுபாடற்ற வகையில் வரி வசூலிக்கும் வகையிலானது என்பதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொத்து வரி ஒரு சிறந்த வரி வருவாயாக உள்ளது.
- மஹாராஷ்டிரா மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களை விட மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் சொத்து வரி வசூல் கணிசமாக குறைவாக உள்ளது.
- பொது சொத்து வரி திருத்தம் கடைசியாக 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் ஒரு திருத்தத்தை பரிந்துரைத்துள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுதப்பட்டதால் மாநில வரி விதிப்பில் கூடுதல் நிதி ஆதாரத்தை திரட்டுவதற்கான வழிவகைகள் கட்டுப்படுத்தப்பட்டது. எனவே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சொத்து வரி வசூலிப்பை அதிகரிப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும்.
- உள்ளாட்சி அமைப்புகள் சுயாட்சி பெற்று 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், அவற்றின் வரி வசூலிப்பு திறன் மேம்படாமல் உள்ளது.

**மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களின் செயல்பாடு**

பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு மாநில அரசின் நிதியின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும், மேலும், நிதி நெருக்கடிகளை உருவாக்க இயலும். பொதுத்துறை நிறுவனங்கள், பங்கு மூலதனம், கடன்கள் மற்றும் மானியங்களின் வடிவில், மாநில அரசின் வரவு–செலவு திட்டத்தின் வாயிலாக நிதியுதவியைப் பெறுகின்றன. தமிழ்நாட்டில் 60 பொதுத்துறை நிறுவனங்களும் (புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 5 பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) 9 சட்டப்படியான வாரியங்களும் உள்ளன. இவற்றில் 26 பொதுத்துறை நிறுவனங்கள் இழப்பை சந்திப்பவையாக உள்ளன. அவற்றின் இழப்புகளை சரிசெய்வதற்கு கூடுதல் கடன் பெறுவது தவிர்க்க இயலாததாகும்.

பொது மக்களுக்கு முக்கிய சேவைகளை வழங்கி வரும் பெரிய அளவிலான பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம், மாநில போக்குவரத்து நிறுவனங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் போன்றவை அவற்றின் மோசமான நிதிநிலைமையின் காரணத்தால் அவை சுயமாக கடன்களைப் பெற இயல்வதில்லை. எனவே, கடன்கள் பெறுவதற்கு அரசின் உத்தரவாதம் அவசியமாகிறது.

**மோசமடைந்து வரும் பொதுத்துறை நிறுவனங்களின் நிதிநிலையானது, அவைகள் அரசு உத்தரவாதமின்றி கடன் பெற இயலாத சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.** அனைத்து மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களுக்கு அரசு வழங்கிய உத்தரவாதத் தொகையின் நிலுவை குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணை 50 ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 50: மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களுக்கான நிலுவையிலுள்ள அரசின் உத்தரவாதத் தொகை**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிலுவையிலுள்ள அரசின் உத்தரவாதத் தொகை |
|---|---|
| 2006-07 | 3466.04 |
| 2007-08 | 3497.67 |
| 2008-09 | 4016.02 |
| 2009-10 | 5354.26 |
| 2010-11 | 10265.31 |
| 2011-12 | 9731.37 |
| 2012-13 | 23572.05 |
| 2013-14 | 49114.03 |
| 2014-15 | 53429.90 |
| 2015-16 | 51225.94 |
| 2016-17 | 28764.65 |
| 2017-18 | 35836.81 |
| 2018-19 | 43030.80 |
| 2019-20 | 46632.08 |
| 2020-21 | 90344.13 |

**அட்டவணை 51: நிலுவையில் உள்ள உத்தரவாதங்களின் சதவீத உயர்வு**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | நிலுவையிலுள்ள அரசின் உத்தரவாதத் தொகை | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2006-07 | 3466.04 | --- | --- |
| 2011-12 | 9731.37 | (+)6265.33 | 180.76 |
| 2020-21 | 90344.13 | (+)80612.76 | 828.38 |

**60 பொதுத்துறை நிறுவனங்களில் 26 நஷ்டத்தில் உள்ளன. அவர்களின் கடன் மதிப்பீடுகள் மிகவும் குறைவாக இருப்பதால் அரசு உத்தரவாதங்களை சார்ந்து உள்ளனர்.**

- அரசு உத்தரவாதங்கள் 2006–07ல் 3466. 04 கோடியிலிருந்து 2020–21 இல் 90344. 13 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. (2507 சதவீதம் அதிகரிப்பு)
- நிலுவையில் உள்ள அரசு கடன்கள் 2006–07 இல் 1578. 69 கோடியிலிருந்து 20019. 98 கோடியாக 2020–21 இல் அதிகரித்துள்ளது (605 சதவீதம் அதிகரிப்பு)
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் மாநில போக்குவரத்து கழகங்களின் ஒட்டுமொத்தக் கடன் 1,99,572. 55 கோடி ரூபாய் ஆகும்
- பொதுத்துறை நிறுவனங்களின் நிலுவையில் உள்ள கடன் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36 சதவீதமாகும். இது வரையறுக்கப்பட்ட 25 சதவீதத்தை விட அதிகமாகும்.
- அவர்களின் மோசமான நிதி நிலை சேவைகளின் தரத்தை பாதிக்கிறது. ஏற்கனவே நெருக்கடியில் உள்ள மாநிலத்தின் நிதி நிலைக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் எனவே இந்த, சீர்திருத்தத்தை ஒத்தி வைக்க இயலாது..

மாநிலத்தின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிடமும் நிலுவையிலுள்ள அரசுக் கடன் குறித்த விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 52: மாநில பொதுத்துறை நிறுவனங்களிடம் நிலுவையிலுள்ள அரசு கடன்கள்**

**(ரூபாய் கோடியில்)**

| **ஆண்டுகள்** | **அரசுக் கடன்** |
|---|---|
| 2006-07 | 1578.69 |
| 2007-08 | 2113.31 |
| 2008-09 | 2919.61 |
| 2009-10 | 2388.51 |
| 2010-11 | 3552.02 |
| 2011-12 | 2837.23 |
| 2012-13 | 3003.77 |
| 2013-14 | 3325.50 |

| ஆண்டுகள் | அரசுக் கடன் |
|---|---|
| 2014-15 | 3441.83 |
| 2015-16 | 4043.12 |
| 2016-17 | 4152.21 |
| 2017-18 | 26159.22 |
| 2018-19 | 26542.20 |
| 2019-20 | 23240.27 |
| 2020-21 | 20019.98 |

**அட்டவணை 53: மாநில பொதுத்துறை நிறுவனங்கள் அரசிடமிருந்து பெற்ற கடன்களின் சதவீத உயர்வு**

| ஆண்டு | அரசுக் கடன் (ரூபாய் கோடியில்) | கூடுதல் / குறைவு (ரூபாய் கோடியில்) | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2006-07 | 1578.69 | --- | --- |
| 2011-12 | 2837.23 | (+)1258.54 | 79.72 |
| 2020-21 | 20019.98 | (+)17182.75 | 605.62 |

மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட **96.92** சதவீத அரசு உத்தரவாதங்கள் மற்றும் **87.80** சதவீத அரசு கடன்கள், மின்சாரத்துறை மற்றும் போக்குவரத்து துறைகளைச் சார்ந்ததாகும். எனவே, **பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் பொறுப்புறுதியால் ஏற்படக்கூடிய நெருக்கடியை அளவிடுவதற்கு, பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டுகின்ற இலாபம், பொதுத்துறை நிறுவனங்களின் எளிதில் பணப்புழக்கம், கடன் தீர்வு நிலை மற்றும் நிதி நிலை செயல்பாடு போன்ற காரணிகளின் அடிப்படையில் விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. 31.3.2021** நிலவரப்படி, மின்சாரத்துறை மற்றும் போக்குவரத்துத் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்தக் கடன்கள் **1.99** இலட்சம் கோடி ரூபாய் ஆகும் அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 54: மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் நிலுவைக் கடன்கள்**

| மாநில பொதுத்துறை நிறுவனங்கள் | நிலுவைக் கடன் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் | 1,34,119.94 |
| தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் | 25,568.73 |
| மாநில போக்குவரத்துக் கழகங்கள் | 39,883.88 |
| **மொத்தம்** | 1,99,572.55 |

**பொதுத் துறை நிறுவனங்களில், மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறைகளின் நிலுவைக் கடன்கள் மட்டும் அரசின் கடனுடன் சேர்க்கப்பட்டால், அத்தொகை மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36 சதவீதமாக இருக்கும். இது அனுமதிக்கப்பட்ட வரையறையை விட கணிசமான அளவில் அதிகமாக இருக்கும்.**

**31.03.2021** நிலவரப்படி குடிநீர் வழங்கலுக்கான இரண்டு சட்டப்படியான வாரியங்களின் ஒட்டுமொத்த இழப்புகள் **5,282.57** கோடி ரூபாய் ஆகும். அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 55: குடிநீர் வழங்கல் வாரியங்களின் ஒட்டுமொத்த இழப்புகள்**

| சட்டப்படியான வாரியங்கள் | ஒட்டுமொத்த இழப்புகள் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 2,581.77 |
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 2,700.80 |
| **மொத்தம்** | 5,282.57 |

இந்த வாரியங்களின் ஆபத்தான நிதிநிலைக்கு, அவற்றின் இயக்க செலவினங்களை குறைவாக வசூலிப்பதே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக, சொத்துகளை உருவாக்குவதற்கான முதலீடு செய்வதற்கோ அல்லது தற்போது உள்ள சொத்துகளைப் பராமரிப்பதற்கோ தேவையான நிதியைப் பெற இயல்வதில்லை. இதன் காரணமாக அவற்றின் செயல்திறன் குறைவதுடன் அதிகப்படியான செலவு ஏற்படுகிறது.

இதனால், அதிக அளவில் கடன் பெறுதல், கூடிக்கொண்டே செல்லும் வட்டி மற்றும் கடன் திரும்பச் செலுத்தும் சுமை, கூடுதல் நட்டம் எனும் வெளிவர இயலாத சுழலில் அவை சிக்கிக் கொள்கின்றன.

தமிழ்நாட்டில் கொரானா பெருந்தொற்றின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார தாக்கம் குறித்து ஆய்வு செய்த டாக்டர் ரங்கராஜன் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட உயர்மட்டக் குழு தன்னுடைய அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

**"அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான முதலீடுகளிலிருந்து அரசால் பெறப்பட்ட மிக சொற்பமான வருமானம் குறித்து 2018 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. சட்டப்படி உருவாக்கப்பட்ட கழகங்கள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மார்ச் 2018 வரை அரசு 33,579 கோடி ரூபாய் முதலீடு செய்திருந்தது. அரசு பெறும் கடன்களுக்கான வட்டி சராசரி 8.08 சதவீதமாக உள்ள நிலையில், அரசு மேற்கொள்ளும் முதலீடுகளின் வாய்ப்புச் செலவினத்தை அளவிடும்போது, மேற்கண்ட முதலீடுகளில் இருந்து பெறப்படும் சராசரி வருவாய், வெறும் 0.45 சதவீதம் என்ற சொற்ப அளவிலேயே உள்ளது."**

மாநில பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து அரசிற்கு வரப்பெற்ற வருவாய் குறித்து பின்வரும் அட்டவணை 56ல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 56: மாநில பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து அரசிற்கு வரப்பெற்ற வருவாய்**

| ஆண்டு | பங்கு மூலதனத்தில் அரசின் முதலீடு (ரூபாய் கோடியில்) | பங்காதாயம் பெற்றது | பங்கு வருவாய் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2006-07 | 1862.01 | 32.41 | 1.74% |
| 2007-08 | 2113.55 | 36.61 | 1.73% |
| 2008-09 | 2284.62 | 37.10 | 1.62% |
| 2009-10 | 2439.60 | 37.70 | 1.55% |
| 2010-11 | 2630.36 | 42.90 | 1.63% |
| 2011-12 | 2713.52 | 39.36 | 1.45% |
| 2012-13 | 2796.04 | 38.35 | 1.37% |
| 2013-14 | 3174.92 | 95.60 | 3.01% |

| ஆண்டு | பங்கு மூலதனத்தில் அரசின் முதலீடு (ரூபாய் கோடியில்) | பங்காதாயம் பெற்றது | பங்கு வருவாய் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2014-15 | 3295.97 | 135.47 | 4.11% |
| 2015-16 | 3769.04 | 188.30 | 5.00% |
| 2016-17 | 4054.43 | 146.26 | 3.61% |
| 2017-18 | 29142.64 | 154.37 | 0.53% |
| 2018-19 | 31842.81 | 172.25 | 0.54% |
| 2019-20 | 36549.44 | 201.78 | 0.55% |
| 2020-21 | 38212.06 | 94.65* | --- |

குறிப்பு: **2017–18**ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழக நிறுவனம் போன்றவை சட்டப்படியான வாரியங்கள் என்ற நிலையிலிருந்து மாற்றப்பட்டு மாநில பொதுத்துறை நிறுவனங்களுடன் சேர்க்கப்பட்டது.

* மாநில பொதுத்துறை நிறுவனங்கள் சிலவற்றிடமிருந்து பெறப்பட்ட இடைக்கால பங்காதாயம்

**மாநில போக்குவரத்துக் கழகங்கள்**

மாநில போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்தும், அண்மையில் வங்கிகளிடமிருந்தும் பெருமளவில் கடன்களைப் பெற்றுள்ளன. மாநிலத்தின் அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் மொத்த நிலுவையிலுள்ள பொறுப்புகள், (தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான பொறுப்புகள்) ஒட்டுமொத்த இழப்பு மற்றும் ஆண்டு நிகர இழப்பு குறித்த விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 57: மாநிலத்தின் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களின் நிலுவை பொறுப்புகள், ஒட்டுமொத்த இழப்புகள் மற்றும் ஆண்டு நிகர இழப்பு**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| **ஆண்டு நிகர இழப்பு** | 1791.65 | 7984.05 | (+) 6192.40 | (+) 345.63 |
| **ஒட்டுமொத்த இழப்பு** | 8761.69 | 42143.69 | (+) 33382.00 | (+)381.00 |
| **நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள்** | 8848.73 | 39883.88 | (+) 31035.15 | (+)350.73 |

2011–12 ஆம் ஆண்டில் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களின் ஒட்டுமொத்த இழப்புகள் மற்றும் நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள் அதே அளவில் இருந்தபோதும், 2020–21 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த இழப்புகளுக்கும், நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகளுக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் காணப்படுகிறது. அரசு வழிவகை முன்பண வடிவில் வழங்கிய கடனை வட்டியுடன் சேர்த்து மொத்தம் 3,001.47 கோடி ரூபாயை 2017–18 ஆம் ஆண்டில் அரசின் பங்கு மூலதனமாக மாற்றியதே இதற்கு காரணமாகும்.

**அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள், ஓய்வூதியம், டீசல் மற்றும் வட்டிச் செலவினங்கள் போன்ற காரணங்களினாலேயே கடந்த பத்தாண்டுகளில், தொடர்ந்து இழப்புகள் ஏற்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:**

**அட்டவணை 58: மாநில போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய செலவினங்கள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| **பணியாளர் செலவு** | 3757.89 | 8235.94 | (+)4478.05 | (+)119.16 |
| **டீசல் செலவு** | 2726.37 | 1966.85 | (-)759.52 | (-)27.86 |
| **ஓய்வூதியச் செலவு** | 274.60 | 1279.60 | (+)1005.00 | (+)365.99 |
| **வட்டிச் செலவு** | 490.62 | 1871.38 | (+)1380.76 | (+)281.43 |
| **மொத்தம்** | 7249.48 | 13353.77 | (+)6104.29 | (+)84.20 |

கோவிட்–**19** பெருந்தொற்று காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்க கட்டுப்பாடுகளினால் மாநிலத்தின் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களும் பேருந்து சேவைகளை முழுவதுமாக வழங்க இயலாததன் காரணமாக, **2020–21** ஆம் ஆண்டில் டீசலுக்கு செலவிடப்பட்ட **1,966.85** கோடி ரூபாயானது உண்மையான நிலவரத்தைக் காட்டவில்லை.

அனைத்து போக்குவரத்து நிறுவனங்களின் இயக்க வருவாய் பின்வருமாறு:

**அட்டவணை 59: அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் இயக்க வருவாய்**

**(ரூபாய் கோடியில்)**

| விவரங்கள் | 2011-12 | 2019-20 | 2020-21 | கூடுதல் / குறைவு 2011-12 எதிர் 2019-20 | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) 2011-12 எதிர் 2019-20 |
|---|---|---|---|---|---|
| **இயக்க வருவாய்** | 6008.82 | 8827.39 | 3517.31 | (+)2818.57 | (+)46.91% |
| **இதர வருவாய் (மானியம் நீங்கலாக)** | 159.98 | 200.40 | 62.84 | (+)40.42 | (+)25.27% |
| **மொத்தம்** | 6168.80 | 9027.79 | 3580.15 | (+)2858.99 | (+)46.35% |

கோவிட் பெருந்தொற்று காரணமாக 2020–21 ஆம் ஆண்டில் நிலவிய ஊரடங்கின் விளைவாக அனைத்துப் போக்குவரத்து நிறுவனங்களும் முழுமையான சேவைகளை வழங்காததால், 2019–20 ஆம் ஆண்டின் இயக்க வருவாய் ஒப்பீட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. **மேற்கண்ட அட்டவணை 59 ல் இருந்து அனைத்துப் போக்குவரத்து நிறுவனங்களின் இயக்க வருவாய், அவற்றின் பணியாளர் செலவுகள் மற்றும் ஓய்வூதியச் செலவுகளைக் கூட மேற்கொள்வதற்கு போதுமானதாக இல்லை என்பதைக் காணலாம்.**

**மாநில போக்குவரத்து நிறுவனங்கள் இயக்கும் வாகனங்கள் ஒரு கிலோமீட்டருக்கு ரூபாய் 59.15/– இழப்பை ஏற்படுத்துகின்றன**

2011–12 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்த இழப்பு 8761.69 கோடி ரூபாயாக இருந்தது. 2020–21 ஆம் ஆண்டில் 42143.69 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.(381 சதவீதம் உயர்வு)


அதிக விலைக்கான காரணங்கள்;

- கட்டண உயர்வு இல்லாமல் டீசல் விலையில் அடிக்கடி திருத்தம்.
- பொருள் மேலாண்மை மற்றும் செலவு, நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள், ஆகியவை அதிக கொள்முதல் செலவுகளுக்கு வழிவகுக்கின்றன.
- முந்தைய 10 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அதிக ஊழியர் மற்றும் ஓய்வூதிய செலவும் ஒரு முக்கியமான காரணியாகும்.

இன்றைய நிலவரப்படி, மாநிலத்தின் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் இயக்கச் செலவு கிலோமீட்டர் ஒன்றிற்கு 96.75 ரூபாயாக கணக்கிடப்படுகிறது. ஆனால், மாநில போக்குவரத்து நிறுவனங்களின் கட்டண வசூல் கி.மீ ஒன்றுக்கு 37.60 ரூபாயாக இருப்பதால் இயக்கப்பட்ட கி.மீ ஒன்றுக்கு 59.15 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இவ்விழப்பின் ஒரு பகுதியானது, அரசால் வழங்கப்படும் டீசல் மற்றும் மாணவர்களுக்கான பேருந்து பயணச் சலுகைக்கான மானியங்களால் ஈடு செய்யப்பட்டு வருகிறது. டீசல் விலைகளில் அடிக்கடி ஏற்படும் விலை உயர்விற்கு இணக்கமான அளவில் கட்டண உயர்வு இல்லாததால், மாநில போக்குவரத்து நிறுவனங்களின்

பற்றாக்குறை அதிகரித்துள்ளது. பொருள்களின் பயன்பாடு மற்றும் செலவின மேலாண்மை ஆகியவற்றில் உள்ள குறைபாடுகள் மற்றும் இயந்திரங்கள், உதிரி பாகங்களை அதிக விலைக்கு கொள்முதல் செய்தல் ஆகியவை மாநில போக்குவரத்துக் கழகங்களின் மோசமான நிதிநிலைக்கு காரணமாக உள்ளன. முந்தைய பத்தாண்டுகளுடன் ஒப்பிடுகையில், அதிகப்படியான தொகை, பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்படுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

**<u>படம் 23: அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் ஒவ்வொரு ரூபாய்க்கும் வருவாய் மற்றும் செலவினங்களை கணக்கிடுதல்</u>**



கடந்த பத்தாண்டுகளில், பேருந்து கட்டணத்தில் மாணவர்களுக்கான சலுகைக்காக மானியத் தொகை மற்றும் டீசல் மானியம் ஆகியவைகளின் போக்குகள் பின்வருமாறு.

**அட்டவணை 60: மாநில போக்குவரத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்களின் போக்குகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | கூடுதல் / குறைவு 2011-12 vs 2020-21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மானியம் | 22.78 | 22.78 | 21.60 | 22.78 | 32.78 | 35.88 | 33.86 | 33.00 | 30.00 | 30.00 | (+) 31.69% |
| மாணவர்களுக் கான மானியம் | 438.97 | 452.52 | 452.96 | 448.00 | 480.00 | 505.35 | 541.78 | 764.72 | 1274.85 | 3430.04 | (+) 681.38% |
| டீசல் மானியம் | 0.00 | 200.00 | 500.00 | 600.00 | 256.72 | 617.17 | 816.12 | 333.08 | 237.55 | 268.16 | - |
| மொத்தம் | 461.75 | 675.30 | 974.56 | 1070.78 | 769.50 | 1158.40 | 1391.76 | 1130.80 | 1542.40 | 3728.20 | (+) 707.41% |

**பேருந்து சேவைகளின் தரம் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாகக் குறைந்து வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைகளுக்கு ஏற்ப, மாநில போக்குவரத்து நிறுவனங்கள் மூலதன சொத்துகளில் முதலீடு செய்வதற்கு இயலாததால், 2011–12ஆம் ஆண்டில் 21,197 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை, 2020–21 ஆம் ஆண்டில் 20,670 பேருந்துகளாகக் குறைந்துள்ளது. இதனால், போக்குவரத்தின் பல்வேறு வகைகளில், பொதுப் போக்குவரத்தின் பங்கு குறைந்துள்ளதை காட்டுகிறது.**

**மாநில போக்குவரத்துக் கழகங்கள் வழித்தடத் தேவையை சீரமைப்பதில் கவனம் செலுத்தாததுடன், தொலைதூரப் பகுதிகளுக்கு சேவை வழங்கும் இனங்கள் என்று இல்லாமல், இலாபம் ஈட்டா வழித்தடங்களில் பேருந்துகளை தொடர்ந்து இயக்கி வந்துள்ளன. இதனால், இலாபம் தரும் பல வழித்தடங்களை தனியார் நிறுவனங்களுக்கு தாரை வார்த்து வந்துள்ளன.**

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு **31.03.2021** நிலவரப்படி, தமிழ்நாடு அரசுக் கடன் **4,582.45** கோடி ரூபாய் மற்றும் உதய் கடன் **4,563.00** கோடி ரூபாய் உட்பட நிலுவையிலுள்ள மொத்தக் கடன் **1,34,119.94** கோடி ரூபாயாகும். இதில், அரசுக் கடன் நீங்கலாக நிலுவைக் கடன் **1,24,974.49** கோடி ரூபாயாகும். முன்னர் இருந்த தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மொத்த நிலுவை பொறுப்புகள் ஒட்டுமொத்த இழப்பு மற்றும் ஆண்டு நிகர இழப்பு குறித்த விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 61: தமிழ்நாடு மின்சார வாரியம் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஒட்டுமொத்தக் கடன்கள் மற்றும் பொறுப்புகள்**

**(ரூபாய் கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| **ஆண்டு நிகர இழப்பு** | 15055.34 | 32553.19 | (+)17497.85 | (+)116.22 |
| **ஒட்டுமொத்த இழப்பு** | 53696.25 | 111084.50 | (+)57388.25 | (+)106.88 |
| **நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள்** | 31040.12 | 134119.94 | (+) 103079.82 | (+)332.09 |

தமிழ்நாடு அரசு, முந்தைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் **51,441** கோடி ரூபாய் அளவிலான நிலையான சொத்துக்களை எடுத்துக் கொண்டு அதனை மறுமதிப்பீடு ஒதுக்கமாகக் கருதியது. இது பின்னர், **31.10.2010**ஆம் நாளன்றுள்ளவாறான முந்தைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒட்டுமொத்த இழப்புகளுக்கு எதிராக சரிகட்டப்பட்டதால், எரிசக்தி **(பி1)** துறையின் **13.8.2015**ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.**49** வாயிலாக வெளியிடப்பட்ட இறுதி மாற்றத் திட்டத்திற்கான அறிவிக்கையின்படி, **31.03.2016**ஆம் நாளன்றுள்ளவாறு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒட்டுமொத்த இழப்புகள் **92,116.95** கோடி ரூபாயிலிருந்து **55,820.83**கோடி ரூபாயாகக் குறைந்தது. மீதமுள்ள ஒதுக்கத் தொகை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக நிறுவனம் போன்ற பின்னர் உருவான (Successor)

நிறுவனங்களுக்குக் கொண்டுச் செல்லப்பட்டு, **2015–2016**ஆம் ஆண்டின்போது, ஒட்டுமொத்த இழப்புகளில் தேவையான சரிகட்டல்கள் மேற்கொள்ளப்பட்டது.

மின் பகிர்மான நிறுவனங்களின், நிதிநிலையை சீர் செய்வதற்காக, உதய் திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், கடன் பத்திரங்களை வழங்குவதன் வாயிலாக **30.09.2015**ஆம் நாளன்றுள்ளவாறான பகிர்மான நிறுவனங்களின் **75** சதவீதம் கடன் பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், அரசுக்குச் செலுத்த வேண்டிய **25** சதவீதக் கடனை மானியங்கள் வழங்குவதன் மூலம் மாற்றவோ தள்ளுபடி செய்யவோ வேண்டும். முந்தைய **2016–17**ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பில் **5** சதவீதம், **2017–18** ஆம் ஆண்டில் **10** சதவீதம், **2018–19** ஆம் ஆண்டில் **25** சதவீதம், **2019–20**ஆம் ஆண்டில் **50** சதவீதம் மற்றும் இதைப்போன்றே இழப்புகளை படிப்படியாக மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில், மாநில அரசு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கிய மானியங்கள் பின்வரும் அட்டவணை **62** ல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 62: உதய் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இழப்பீட்டு நிதி**

**(ரூபாய் கோடியில்)**

| நிதியாண்டு | ஏற்பட்ட இழப்பு | இழப்பீட்டு நிதி சதவீதம் | தொகை | நிலுவை ஏற்பட்ட ஆண்டு | விடுவிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 2016-17 | 4348.76 | 5% | 217.43 | 2017-18 | 2017-18 |
| 2017-18 | 7760.78 | 10% | 776.08 | 2018-19 | 2019-20 |
| 2018-19 | 12623.41 | 25% | 3155.85 | 2019-20 | ரூ.8373.19 கோடி 2020-21 ஆம் ஆண்டில் |
| 2019-20 | 11964.93 | 50% | 5982.47 | 2020-21 | |
| 2020-21 | 11792.88 | 50% | 5896.44 | 2021-22 | * |

உதய் திட்டத்தின் கீழ் கருதப்பட்டுள்ள செயல்பாடுகளில் மேம்பாடு மற்றும் நிதிநிலையில் திருப்பம் ஆகியவற்றிற்கான இரண்டு முக்கிய கூறுகள் பின்வருமாறு:

அ) ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பை **13.50** சதவீதமாகக் குறைத்தல்; மற்றும்

ஆ) **2018–2019**ஆம் ஆண்டிற்குள், சராசரி வழங்கல் செலவினம் மற்றும் வசூலிக்கப்பட்ட சராசரி வருவாய்க்கு இடையிலான இடைவெளியை பூஜ்ஜியமாகக் குறைத்தல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், **2018–19**ஆம் ஆண்டிற்குள், ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை **13.50** சதவீத அளவிற்கு குறைக்க வேண்டும் என்ற இலக்கை எய்த வேண்டியதாக இருந்த நிலையில், **2019–20**ஆம் ஆண்டுவரை **12.39** சதவீத அளவிற்கு குறைத்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன. மின்சாரத்திற்கான சராசரி வழங்கல் செலவினம் அலகு ஒன்றுக்கு ரூ.**9.06** என கணக்கிடப்பட்டுள்ள நிலையில், **2020–21** ஆம் ஆண்டில் , சராசரி வசூல் வீதம் அலகு ஒன்றுக்கு ரூ.**6.70** ஆகும். எனவே, அலகு ஒன்றுக்கு **2.36** ரூபாய் குறைவாக வசூல் ஏற்பட்டுள்ளது. மானியம் உட்பட திருத்தியமைக்கப்பட்ட வசூலிக்கப்பட்ட சராசரி வருவாய் மற்றும் சராசரி வழங்கல் செலவினம் இடையிலான இடைவெளி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 63: வசூலிக்கப்பட்ட சராசரி வருவாய் மற்றும் சராசரி விநியோகச் செலவிற்கு இடையிலான இடைவெளி**

| கூறுகள் | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | திருத்த மதிப்பீடு 2020-21 |
|---|---|---|---|---|---|---|
| உள்ளீட்டு அலகுகள் (மில்லியன் அலகு) | 68629 | 68055 | 69214 | 76126 | 77391 | 73312 |
| வசூலிக்கப்பட்ட சராசரி வருவாய் (ஒரு அலகிற்கு ரூபாயில்) | 5.90 | 6.35 | 6.23 | 6.04 | 6.35 | 6.70 |
| சராசரி விநியோகச் செலவு (ஒரு அலகிற்கு ரூபாயில்) | 6.88 | 7.28 | 8.01 | 8.29 | 8.49 | 9.06 |
| வசூலிக்கப்பட்ட சராசரி வருவாய் மற்றும் சராசரி விநியோகச் செலவிற்கு இடையேயான இடைவெளி (ஒரு அலகிற்கு ரூபாயில்) | -0.98 | -0.93 | -1.78 | -2.25 | -2.14 | -2.36 |

அதிக தொகை செலவிடப்பட்டதாலும் குறைவான தொகை வசூலிக்கப்பட்டதாலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இழப்புகள் ஏற்பட்டன. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு, பணியாளர் செலவுகள், ஓய்வூதிய செலவுகள் மற்றும் வட்டிச் செலவுகள் உட்பட செலவுகள் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன.

**அட்டவணை 64: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| பணியாளர்கள் செலவு | 2227.65 | 5832.64 | (+) 3604.99 | (+) 161.83 |
| ஓய்வூதியச் செலவு | 1536.74 | 3203.57 | (+)1666.83 | (+)108.47 |
| வட்டிச் செலவு | 3588.08 | 11225.43 | (+) 7637.35 | (+)212.85 |
| **மொத்தம்** | 7352.47 | 20261.64 | (+)12909.17 | (+)175.58 |

**மேற்கூறிய செலவுகளுடன், நிலக்கரிக்கான முதன்மை உள்ளீடு செலவு அதிகரிப்பு மற்றும் வெளிப்புற மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் வாயிலாக செலவு அதிகரித்ததும் மொத்த செலவு அதிகரிப்பிற்கு காரணமாகும்.**

**அட்டவணை 65: எரிபொருள் செலவுகள் மற்றும் மின் கொள்முதல் செலவுகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2011–12 க்கும் 2020–21 க்கும் இடையிலான கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எரிபொருள் செலவு (நிலக்கரி, எரிவாயு உட்பட) | 6110.07 | 6396.87 | 5862.57 | 9746.26 | 8744.22 | 8036.98 | 7291.64 | 9431.70 | 8267.41 | 6500.97 | (+) 6.40% |
| மின்கொள்முதல் செலவுகள் | 21034.51 | 25740.83 | 30529.29 | 30651.70 | 31617.63 | 37384.59 | 41071.77 | 44178.31 | 47145.89 | 47330.83 | (+) 125.02% |
| மொத்தச் செலவுகள் | 32022.85 | 36971.19 | 42056.91 | 47375.50 | 48097.47 | 53996.80 | 58917.25 | 66041.96 | 67785.56 | 66638.05 | (+) 108.10% |
| மொத்தச் செலவினத்தில் எரிபொருள் செலவினங்களின் சதவீதம் | 19.08 | 17.30 | 13.94 | 20.57 | 18.18 | 14.88 | 12.38 | 14.28 | 12.20 | 9.76 | |
| மொத்தச் செலவினத்தில் மின் கொள்முதல் செலவினங்களின் சதவீதம் | 65.69% | 69.62% | 72.59% | 64.70% | 65.74% | 69.23% | 69.71% | 66.89% | 69.55% | 71.03% | |

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சொந்த பிரிவுகள் வாயிலாக மின் உற்பத்தி செய்வதற்கான ஒப்புமை தொகை மற்றும் மின் கொள்முதலின் சராசரி தொகை ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு ஆண்டுக்கு ஆண்டு வேறுபடுகிறது என்பது அட்டவணை **66** ல் காணப்படுகிறது. அண்மை காலங்களில், சொந்த உற்பத்தியைக் காட்டிலும் மின் கொள்முதல் விலை குறைவாக உள்ளது.

**அட்டவணை 66: சொந்த உற்பத்தி – எதிர்– மின் கொள்முதல் செலவு**

(ஒரு யூனிட்டிற்கான ரூபாய்)

| விவரங்கள் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சொந்த உற்பத்தி** | | | | | | | | | | |
| (a) **நீர் மின்சக்தி** | 1.11 | 0.75 | 0.64 | 0.71 | 0.72 | 1.16 | 1.07 | 0.65 | 0.77 | 0.70 |
| (b) **அனல் மின்சக்தி** | 3.64 | 5.47 | 4.01 | 4.53 | 3.89 | 3.85 | 3.94 | 4.30 | 4.70 | 4.87 |
| (c) **எரிவாயு** | 3.60 | 2.70 | 2.93 | 3.77 | 4.28 | 3.32 | 3.00 | 3.51 | 3.52 | 2.81 |
| **மின் கொள்முதல்** | 3.76 | 3.61 | 4.17 | 4.05 | 3.65 | 3.92 | 4.22 | 4.27 | 4.33 | 4.42 |

மின் கொள்முதலுக்கான தொகை தாமதமின்றி செலுத்தப்படும் என்பதை உறுதி செய்வதற்காக, பகிர்மான நிறுவனங்கள், மின் கொள்முதலுக்கான நன்மதிப்பு கடிதங்களை அனுப்புமாறு மின் அமைச்சகம் அறிவுறுத்தியது. எனவே, தனது கடன் தேவையை உயர்த்திக் கொள்வதற்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நன்மதிப்பு கடிதங்களை அளிக்க வேண்டும் அல்லது முன் தொகைகளை செலுத்த வேண்டும்.

**வருவாய் தரப்பில், கடந்த 7 ஆண்டுகளாக, மின் கட்டண நிர்ணயத்தில் யாதொரு திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.** யூனிட் ஒன்றுக்கு சராசரியாக விநியோகச் செலவினம் 9.06 ரூபாயாக இருந்த நிலையில், வேளாண்மை துறைக்கு வழங்கப்பட்ட 18 சதவீத மின்சாரத்திற்கான வசூல் ஏதுமில்லை. ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியம் யூனிட் ஒன்றுக்கு 3.32 ரூபாய் ஆகும். எனவே, **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால், வேளாண்மை பிரிவிற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான மானியம் முழுமையாகப் பெறுவதில்லை. இந்த 8,225 கோடி ரூபாய் மானியமானது, அனுமதிக்கப்பட்ட 20 விழுக்காட்டையும் தாண்டிய குறுக்கு மானியமாகும்.**

**அதுபோல், வீட்டு உபயோக மின்நுகர்வோர்களை பொறுத்த வரையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 2.23 ரூபாய் வசூலிக்கிறது. யூனிட் ஒன்றுக்கு 9.06 ரூபாய் மொத்த வழங்கல் தொகையில் வீட்டு உபயோக மின்கட்டண மானியம் யூனிட் ஒன்றுக்கு சராசரியாக 1.09 ரூபாய் பெறப்பட்ட பின்னர், யூனிட் ஒன்றுக்கு 5.74 ரூபாய் என்ற அளவிலான வசூல் இடைவெளி ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கு வழங்கப்பட்ட 32,639 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்திற்கு, 2020–21 ஆம் ஆண்டில், வீடுகளுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தால் ஏற்பட்ட மொத்த இழப்பு**

**18,735 கோடி ரூபாய் ஆகும். தெளிவாக, அதிகமான மின்சாரம் உபயோகிப்போரே அதிக மானியம் பெற்று வருகின்றனர்.**

பல ஆண்டுகளாக, தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் பங்கு தொடர்ந்து சரிந்து கொண்டே இருந்தது. தன்பயன் மின்சார ஆலைகள் மற்றும் மின் பரிவர்த்தனைகளின் மூலம் மூன்றாம் தரப்பு நுகர்வோர்களுக்கு திறந்த நிலை நுழைவு வழங்கல் ஆகியவை போன்ற மலிவான மாற்று முறைகளே இதற்கு முக்கிய காரணமாகும். தன்பயன் மின்சார ஆலைகளுக்கான வலுவற்ற சட்ட விதிமுறைகளால் இது சாத்தியமானது. மேலும், அதிக மின் கட்டணத்தால் இது விரைவுபடுத்தப்பட்டது.

**தொழிலகங்களுக்கான அதிக கட்டணம், தமிழ்நாட்டை, இந்தியாவின் பிற முக்கிய மாநிலங்களைப் போல், தொழில்துறைக்கான இடமாக போட்டியிடச் செய்யவில்லை. கீழே அட்டவணை 67ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, திறந்த நிலை நுழைவு வழங்கலின் கீழ், தன்பயன், திறந்தநிலை நுழைவு வழங்கல் போன்ற மாற்று முறைகள் உள்ள காரணத்தால் தொழிற்சாலைக்கான வழங்கல் குறைந்து வருகிறது.**

**அட்டவணை 67: திறந்தவெளி நுழைவு உரிமை மற்றும் தொழிற்சாலைகளுக்கு நேரடி மின் விநியோகம்**

**(மில்லியன் அலகுகளில்)**

| ஆண்டு | உயர் மின்னழுத்த தொழிற்சாலைகள் | | |
|---|---|---|---|
| | திறந்தவெளி நுழைவு உரிமை | நேரடி விநியோகம் | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பங்கு |
| 2011-12 | 6712 | 10137 | 60% |
| 2012-13 | 8191 | 7699 | 48% |
| 2013-14 | 9551 | 9796 | 51% |
| 2014-15 | 9648 | 11188 | 54% |
| 2015-16 | 10281 | 11408 | 53% |
| 2016-17 | 14295 | 8948 | 38% |
| 2017-18 | 15611 | 9204 | 37% |
| 2018-19 | 15728 | 10804 | 41% |
| 2019-20 | 16382 | 9874 | 38% |
| 2020-21 | 15242 | 6957 | 31% |

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால், தனது செயல்பாட்டு கட்டணங்களை வசூலிக்க இயலாததால், அதிகரித்து வரும் வட்டி தொகைகளுடன், பல பட்டியல்கள் (பில்) நிலுவையில் உள்ளன. உயர் வட்டியுடன் கூடிய கடனுடன், அதிகப்படியான மூலதன செலவினமும் ஏற்பட்டுள்ளது. இதனால், அதிக பட்டியல்கள் (பில்) நிலுவை, அதிகரித்த வட்டி தொகை மற்றும் உருவாக்கப்பட்ட மூலதன சொத்துகளிலிருந்து மோசமான வசூலிப்பு போன்ற மோசமான சூழல் உருவானது.

**குறுகிய காலத்தில் நிலைத்திருத்தல் மற்றும் குறுகிய கால நிதி மேலாண்மை மீது கவனம் செலுத்தப்பட்டதால், நீண்ட காலத்திற்கு, அதிக கடன் பொறுப்புறுதிகள் உருவாக்கப்பட்டுள்ளதன் விளைவாக முழுமையாக மறுகட்டமைப்பு செய்வதை மேலும் ஒத்திவைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.**

**தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்**

கடந்த பத்து ஆண்டுகளாக, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் செலுத்தப்பட வேண்டிய மொத்த கடன் பொறுப்புறுதிகள், ஒட்டுமொத்த இழப்பு மற்றும் நிகர ஆண்டு இழப்பு ஆகியவற்றின் விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 68: தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இழப்பு மற்றும் கடன் பொறுப்புகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| **ஆண்டு நிகர இழப்பு** | 0.00 | 1299.99 | (+)1299.99 | --- |
| **ஒட்டுமொத்த இழப்பு** | 4031.86 | 6782.35 | (+)2750.49 | (+) 68.22% |
| **நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள்** | 10156.20 | 25568.73 | (+)15412.53 | (+) 151.75% |

**2011–12** ஆம் ஆண்டின்போது, வருவாய் வரவினங்கள் மற்றும் வருவாய் செலவினங்களிடையே யாதொரு இடைவெளியும் இல்லாத நிலையில், **2020–21** ஆம்

ஆண்டின்போது, வருவாய் பற்றாக்குறை **1,299.99** கோடி ரூபாய்க்கு அதிகரித்துள்ளது. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு, பணியாளர்களுக்கான செலவு மற்றும் வட்டி தொகை அதிகரிப்பு ஆகியவை கடந்த பத்து ஆண்டுகளாக இழப்புகள் தொடர்ந்து அதிகரிப்பதற்கு காரணிகளாகும்.

**அட்டவணை 69: தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| பணியாளர்கள் செலவு | 291.48 | 1465.36 | (+) 1173.88 | (+) 402.73% |
| வட்டிச் செலவு | 1144.98 | 1916.14 | (+) 771.16 | (+) 67.35% |
| இதரச் செலவுகள் | 308.40 | 1141.49 | (+)833.09 | (+)270.13% |
| **மொத்தம்** | 1744.86 | 4522.99 | (+)2778.13 | (+)159.22% |

ஒட்டுமொத்த இழப்புகளுக்குக் காரணமான காரணிகள் பின்வருமாறு:

(i) கடந்த பத்து ஆண்டுகளில், **2012, 2013, 2014** மற்றும் **2017**ஆம் நிதியாண்டுகளின்போது, நான்குமுறை மட்டுமே கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால், காலமுறையாக கட்டணங்கள் திருத்தியமைக்கப்படவில்லை. இதனால், செயல்பாடுகளிலிருந்து பெறப்படும் வருவாய் செலவினத்துடன் ஒத்திசைவாக இல்லை.

(ii) வட்டி தொகை அதிகரிப்பை தொடர்ந்து, மின் தொடரமைப்பு வலையமைப்பை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினமும் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக **3500** முதல் **4000** கோடி ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது.

(iii) கடன் வாங்குதல் வாயிலாக கூடுதல் வட்டி சுமையுடன் வருவாய் செலவினத்தை அதிகரிப்பதற்கான பொறுப்பும் நிறைவேற்றப்பட்டது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டு பற்றாக்குறை, ஒட்டுமொத்தப் பற்றாக்குறை மற்றும் நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள் குறித்த விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 70: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இழப்பு மற்றும் பொறுப்புகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| ஆண்டு பற்றாக்குறை | 144.10 | 390.17 | (+)246.07 | (+)170.76 |
| ஒட்டுமொத்த பற்றாக்குறை | 574.15 | 2700.80 | (+)2126.65 | (+)370.40 |
| நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள் | 422.24 | 2890.26 | (+)2468.02 | (+)584.51 |

ஒட்டுமொத்தப் பற்றாக்குறைக்கும் நிலுவையில் உள்ள மொத்தப் பொறுப்புகளுக்கும் இடையிலான இடைவெளி வித்தியாசம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு மானியத்திற்காகவும், இடைவெளி மானியமாகவும் அரசிடமிருந்து **2018–19** ஆம் ஆண்டில் **571** கோடி ரூபாயும், **2019–20** ஆம் ஆண்டில் **449** கோடி ரூபாயும், ஆகமொத்தம் **1,020** கோடி ரூபாய் வரப்பெற்றதே காரணமாகும்.

ஓய்வூதிய தொகை மற்றும் அதிகளவிலான குடிநீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு, வாரியத்தின் மூலமாகச் செய்யப்படாமல் வெளி முகமைகளின் வழியாகச் செயல்படுத்தப்படுவதால், பராமரிப்புச் செலவினம் ஆகியவை அதிகரித்து கடந்த பத்து ஆண்டுகளாக தொடர்ந்து அதிகரித்துவரும் செலவுகளுக்கான காரணிகளாகும்.

**அட்டவணை 71: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு | 314.16 | 896.20 | (+)582.04 | (+)185.27% |
| பணியாளர் செலவு | 156.94 | 108.12 | (-)48.82 | (-) 31.11% |
| ஓய்வூதியச் செலவு மற்றும் குடும்ப ஓய்வூதியம் | 130.47 | 309.70 | (+)179.23 | (+)137.37% |
| ஏனைய செலவுகள் | 50.76 | 18.33 | (-)32.43 | (-)63.89% |
| **மொத்தம்** | 652.33 | 1332.35 | (+)680.02 | (+)104.24% |

**இயக்கச் செலவுகளைக் குறைவாக வசூலிப்பதே பற்றாக்குறைக்கான முக்கிய காரணியாகும். கிலோ லிட்டர் ஒன்றுக்கான இயக்கச் செலவு சுமார் 20.81 ரூபாயாக இருக்கும்போது, 2020–21 ஆம் ஆண்டில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிலோ லிட்டருக்கு 10.42 ரூபாயும், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிலோ லிட்டருக்கு 8.11 ரூபாயும் குடிநீர்க் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.** 2020–21 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் வசூலிக்கப்பட்ட தொகை (அரசு மானியம், வட்டி, தேய்மானம் முதலியவை நீங்கலாக) **44.21** சதவீதம் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிலுவை தொகைகளின் பெருமளவிலான தொகை உள்ளாட்சி அமைப்புகளால் உரிய நேரத்தில் செலுத்தப்படவில்லை. **31.3.2021** ஆம் நாளின்படி, உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து வரவேண்டிய குடிநீர் கட்டண நிலுவை தொகை **484.10** கோடி ரூபாய் ஆகும். விவரம் கீழே உள்ளவாறு.

**அட்டவணை 72: குடிநீர் கட்டண நிலுவைகள்**

(ரூபாய் கோடியில்)

| **பயனாளிகள்** | **நிலுவைத் தொகை** |
|---|---|
| மாநகராட்சிகள் (நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்) | 261.05 |
| நகராட்சிகள் (நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்) | 10.09 |
| பேரூராட்சிகள் (நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்) | 10.82 |
| கிராம ஊராட்சிகள் (கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள்) | 202.14 |
| **மொத்தம்** | 484.10 |

31.3.2021 ஆம் நாளின்படி, மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 2,583ஆகும். ஆனால், 31.3.2021 ஆம் நாளின்படி, மொத்த ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 9101 ஆகும். இது பணியிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமானதாகும். 31.3.2021 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செலுத்த வேண்டிய கடன் பொறுப்புறுதி தொகை 2890.26 கோடி ரூபாய் ஆகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவையிலுள்ள மின் கட்டணமான 1518.59 கோடி ரூபாய் இதில் அடங்கும்.

**பெரும்பாலும், ஒன்றிய நிதிக்குழு மற்றும் மாநில நிதிக்குழு ஆகிய இரண்டு குழுக்களின் பரிந்துரையில் குறிப்பிட்டு அறிவிக்கப்பட்டுள்ள ஒருமுகப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்கள் வாயிலாக மூலதனம் தொடர்பான செலவினங்களுக்காக ஒன்றிய நிதிக்குழு மற்றும் மாநில நிதிக்குழுவிடமிருந்து வரபெற்ற நிதி பகிர்வு மானியங்கள் பயன்பாட்டின் காரணமாக உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலை வலுவிழந்தது.**

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய செயல்பாட்டு கட்டண நிலுவைகளை செலுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புகளால் இயலவில்லை. இதனால், வலுவிழக்கும் உள்ளாட்சி அமைப்புகள், பொதுத் துறை நிறுவனங்கள் / வாரியங்களை வலுவற்ற**

**நிலைக்குத் தள்ளுவதுடன், அதன்தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுக்கு மேலும் பொறுப்பு சுமையை ஏற்படுத்தியுள்ளது.**

**சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம்**

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் ஆண்டு பற்றாக்குறை, ஒட்டுமொத்த பற்றாக்குறை மற்றும் நிலுவையிலுள்ள மொத்த பொறுப்புகள் குறித்த விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 73: சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் இழப்பு மற்றும் பொறுப்புகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| ஆண்டு பற்றாக்குறை | 181.72 | 353.49 | (+)171.77 | (+)94.52% |
| ஒட்டுமொத்த பற்றாக்குறை | 391.78 | 2581.77 | (+)2189.99 | (+)558.98% |
| நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள் | 1370.32 | 1909.88 | (+)539.56 | (+)39.37% |

**31.3.2021** அன்றுள்ளபடி, அரசுக் கடன் நிலுவை **1,522.16** கோடி ரூபாய் உட்பட, சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நிலுவை பொறுப்புகள் **1,909.88** கோடி ரூபாயாகும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு, பணியாளர் தொகை, ஓய்வூதியத் தொகை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரிப்பு ஆகியவை கடந்த பத்து ஆண்டுகளாக அதிகரித்து இழப்பிற்கு காரணமாக இருந்தது.

**அட்டவணை 74: சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செலவுகள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2011–12 | 2020–21 | கூடுதல் / குறைவு | கூடுதல் / குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| இயக்குதலும் பராமரிப்பும் | 74.19 | 286.44 | (+)212.25 | (+)286.09% |
| பணியாளர்கள் செலவு | 106.09 | 140.50 | (+) 34.41 | (+)32.43% |
| ஒய்வூதியச் செலவு மற்றும் குடும்ப ஒய்வூதியம் | 40.55 | 127.92 | (+)87.37 | (+)215.46% |
| ஏனைய செலவுகள் (மின்சாரம் மற்றும் கடல்நீர் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கொள்முதல் செய்யப்படும் குடிநீர் உள்பட) | 226.93 | 497.68 | (+)270.75 | (+)119.31% |
| **மொத்தம்** | 447.76 | 1052.54 | (+)604.78 | (+)135.07% |

**இயக்கச் செலவுகள் குறைவாக வசூலிப்பதே பற்றாக்குறை அதிகரிப்பின் முக்கிய காரணியாக உள்ளது. கிலோ லிட்டர் ஒன்றுக்கு இயக்கச் செலவு 36.58 ரூபாயாக உள்ளபோது, 2020–21ஆம் ஆண்டின் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் வசூலிப்பு தொகை (அரசு மானியம், வட்டி, தேய்மானம் முதலியவை நீங்கலாக) 14.08 ரூபாயாகும். இது, 38 சதவீதம் மட்டுமே என கணக்கிடப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் ஒப்பிடும்போது சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் இயக்கச் செலவு அதிகமாகும். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க அதிக செலவு மேற்கொள்ளப்படுவதே இதற்குக் காரணமாகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீர் விநியோகிக்கிறது. அவை வீடுகளுக்கு விநியோகம் செய்கின்றன. சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் விநியோகச் செலவு அதிகமாக உள்ளதற்கான காரணம், இவ்வாரியம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வீடுகளுக்கு நேரிடையாக விநியோகம் செய்வதேயாகும்.

குடியிருப்பு மற்றும் பகுதியளவு வணிக மின்நுகர்வோர்களுக்கான கட்டணம், 5 சதவீதம் வருடாந்திர உயர்வுடன் 2018ஆம் ஆண்டு மே மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டது. மேலும், வணிக மற்றும் நிறுவனம் சார்ந்த மின்நுகர்வோர்களுக்கான கட்டணம் 10 சதவீத வருடாந்திர உயர்வுடன் 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டது. எனினும், 2019ஆம் ஆண்டு மே மாதத்தில், வறட்சியின் காரணமாக குடியிருப்பு மற்றும் பகுதியளவு வணிக நுகர்வோருக்கான வருடாந்திர கட்டணம் திருத்தியமைக்கப்படவில்லை. மேலும், கோவிட்–19 பெருந்தொற்று காரணத்தால் 2020 ஆம் ஆண்டிலும், வருடாந்திர கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், நுகர்வோர்களிடமிருந்து சொத்தின் 7 சதவீத வருடாந்திர மதிப்பை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியாக வசூலிப்பதால், அதன் முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ளது. 2018–19ஆம் ஆண்டின்போது, சொத்து வரியின் வருடாந்திர மதிப்பை பெருநகர சென்னை மாநகராட்சி திருத்தியமைத்தபோதிலும், இது பின்னர் நிறுத்திவைக்கப்பட்டதால் வரி வருவாய் பாதித்தது.

குழாய் இணைப்புகள் மூலமாக குடிநீர் வழங்குவதுடன், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் வாடகைக்கு எடுக்கப்பட்ட சரக்குந்துகள் (லாரிகள்) வாயிலாகவும் குடிநீரை வழங்கி வருகிறது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் பிற குடிசை பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் சராசரி செலவு ஆண்டுக்கு சுமார் 100 கோடி ரூபாய் ஆகும். எனினும், இச்செலவினத்திற்காக 36 கோடி ரூபாயை மட்டுமே அரசிடமிருந்து மானியமாக சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் பெறுகிறது.

2020–21ஆம் ஆண்டின்போது கோரப்பட்ட மொத்த தொகை 1061.74 கோடி ரூபாய் ஆகும். 31.3.2021ஆம் நாளின்படி வசூலிக்கப்பட்ட மொத்த தொகை 512.83 கோடி ரூபாயாகும். 31.03.2021 ஆம் நாளன்றுள்ளவாறான செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகைகளின் விவரக் கூறுகள் பின்வருமாறு:–

**அட்டவணை 75: சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | தொகை |
|---|---|
| வரி | 248.18 |
| நிலையான கட்டணம் | 152.06 |
| அளவீட்டிற்கு ஏற்ப மாறுபடும் கட்டணங்கள் | 81.35 |
| கழிவுநீரகற்றும் சேவைக் கட்டணங்கள் | 67.32 |
| | 548.91 |

அட்டவணை 75 லிருந்து, வீட்டிற்கான இணைப்புகளிலிருந்து குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் கட்டணங்கள் மற்றும் நிலையான கட்டணங்கள் வாயிலாகவே பெரும்பான்மையான வரவுகள் உள்ளன என்பது தெரிய வருகிறது. அளவிடும் கருவியில்லாமல் நிலையான கட்டணத்தை, பெரிய வீடுகளில் வசிப்போர் செலுத்தி ஆதாயம் பெறும் இந்த சமமற்ற முறையினால், சிறிய குடியிருப்புகளில் வசித்து வரும் ஏழை மற்றும் நடுத்தர மக்களைப் போன்றோர் அளவிடும் கருவியின் மூலம் பயன்பாட்டிற்கு ஏற்ப கட்டணம் செலுத்தி வருகின்றனர். 31.3.2021 ஆம் நாளன்றுள்ளவாறு, மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 2,621 ஆகும்.

ஆனால், 31.3.2021 ஆம் நாளின்படி மொத்த ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 5,818 ஆகும். இது பணியிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையக் காட்டிலும் இரு மடங்கு அதிகமானதாகும்.

மின் விநியோகம், குடிநீர் வழங்கல் மற்றும் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட பொதுப் பயன்பாடுகளை செயல்படுத்துகின்ற முக்கியமான பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களின் இக்கட்டான நிதிநிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. **அவற்றின் மோசமான நிதிநிலைமை, அவை வழங்கி வரும் சேவைகளின் தரத்தில் சரிவுக்கு வழிவகுப்பதோடு மட்டுமல்லாது, ஏற்கெனவே மாநில**

**அரசால் வழங்கப்பட்டுள்ள நிதி ஆதாரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. எனவே, மேற்குறித்த நிறுவனங்களில் சீத்திருத்தத்தை மேலும் ஒத்திவைக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.**

இயக்கப்பட்ட ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் மாநில போக்குவரத்துக் கழகங்கள் 59.15 ரூபாய் இழப்பை சந்திக்கிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் /தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் அதிக செலவுகள் மற்றும் குறைந்த வசூல் ஆகிய காரணத்தால் பாதிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்: நிலுவையிலுள்ள மொத்தப் பொறுப்புகள் 2,890.26 கோடி ரூபாய்: இது 2011–12 இல் 422.24 கோடி ரூபாயாக இருந்தது.

சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்: நிலுவையிலுள்ள மொத்த பொறுப்புகள் 1,909.88 கோடி ரூபாயாகும், 2011–12 இல் 1,370.32 கோடி ரூபாயாக இருந்தது .

## II. பொருளாதார வளர்ச்சி நிலை:

எந்தவொரு மாநிலம் அல்லது நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அவற்றில் சில, அரசின் கட்டுப்பாட்டிலும் சில அரசின் கட்டுப்பாட்டை மீறியும் உள்ளன. மாநில அரசு நன்றாகவே செயல்பட்டாலும் உலக மற்றும் தேசியப் பொருளாதாரத்தின் பேரளவுப் போக்கு மாநில அரசின் திறனை குறிப்பிடத்தக்க அளவிற்கு கட்டுப்படுத்துகிறது.

கடந்த பதினைந்தாண்டு காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நிச்சயமற்ற தன்மை மற்றும் இடையூறுகளால் பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் 2008–09 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார நெருக்கடி, உலக நிதி வழங்கல் மற்றும் சந்தைகளில் ஏற்படுத்திய பாதிப்பினால் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றங்களை நாம் இன்றும் கண்டு வருகிறோம். அதேபோன்று, பல்வேறு அரசாங்கங்கள் பல்வேறு விதமான அணுகுமுறைகளைக் கையாண்டபோதும், அண்மைக்கால கோவிட் பெருந்தொற்று பல்வேறு நாடுகளை நிலைகுலைய வைத்துள்ளது.

தேசிய அளவில், 2016 ஆம் ஆண்டு பணமதிப்பிழப்பின் காரணமாக ஆரம்பித்த பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்து வருகிறது. சரக்கு மற்றும் சேவை வரியை அவசரகோலத்தில் நடைமுறைப்படுத்தியதும் பொருளாதார வீழ்ச்சியை மேலும் விரைவுபடுத்தியது. இதனால், சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு முன்னர் உயர் உற்பத்தி கொண்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் எதிர்பாராமல் ஆரம்பித்த தேசிய ஊரடங்கு, அடுத்து வரும் குறுகிய காலத்தில் பொருளாதாரம் எழுச்சி பெறும் என்ற சிறிதளவு நம்பிக்கையும் பொய்த்துப் போனது.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மாநிலத்திலும் இது போன்ற நெருக்கடி வெவ்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, உலகப் பொருளாதார நெருக்கடியின்போது, வளர்ந்து வரும் சந்தைகளுடன் ஒப்பிடும்போது, முன்னேறிய முதலீட்டு சந்தைகள் மிகப் பெரிய அளவில் பாதிப்படைந்தன. இந்தியாவிற்குள், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் மேம்பட்ட மருத்துவ உட்கட்டமைப்பு மற்றும் பணியாளரமைப்பு, கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட பாதிப்பை சிறப்பாகவே தணித்துள்ளது.

இதர வழக்கமான நிகழ்வுகளான பத்தாண்டுக்கு ஒருமுறை அமைக்கப்படும் ஊதியக் குழு அல்லது ஐந்தாண்டிற்கு ஒருமுறை அமைக்கப்படும் இந்தியாவின் நிதிக்குழு ஆகியவை அரசின் நிதியை பாதிப்பதால், ஒவ்வொரு மாநிலத்தின் பொருளாதாரமும் வேறுபடுகிறது. ஒரு குறிப்பிட்ட காரணத்தால் மட்டுமே பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என கூற இயலாது. பல்வேறு காரணங்களின் ஒட்டுமொத்த விளைவே, தமிழ்நாட்டின் 2011–12 ஆம் ஆண்டில் நிலவிய பொருளாதார வளர்ச்சியின் உச்ச நிலையில் இருந்து குறிப்பிடத்தகுந்த வீழ்ச்சியை சந்தித்ததற்கு காரணம் எனலாம்.

பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மந்த நிலைக்கு **மேற்குறிப்பிட்ட நிதிநிலைச் சீர்கேடு, குறிப்பாக 2013–14 ஆம் ஆண்டிற்கு பின்** ஏற்பட்ட சரிவு, காரணமா என்பதை உறுதியாக கூற முடியாது .


எனினும், நிதி ஒழுங்கு மற்றும் மேலாண்மையில் ஏற்பட்ட பின்னடைவே இதற்குக் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள அடிப்படை பொருளாதார அறிவே போதுமானது. சந்தேகத்திற்கு இடமின்றி இந்தியாவில் உள்ள இதர முன்னணி மாநிலங்களுடன்

ஒப்பிடும்போது, இத்தகைய பிறழ்வான நிதி ஒழுங்கும், மேலாண்மையும் நமது பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட சரிவிற்கு குறிப்பிடத்தகுந்த பங்கை வகிக்கிறது.

உள்ள நிலைமையை மேலும் மோசமடையச் செய்த கோவிட் பெருந்தொற்றினால், 2020–21 ஆம் ஆண்டில் ஏற்கெனவே நிதி நெருக்கடியைச் சந்தித்து வந்த தமிழ்நாடு மேலும் பாதிப்படைந்தது. ஒட்டுமொத்த நிதி நெருக்கடியின் தாக்கத்தை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வரும் வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறை மற்றும் அதனால் உயர்ந்து வரும் கடன் சுமை ஆகியவற்றில் காணப்படுகிறது.

நிலையான விலைகளில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் (GSDP) கொண்டு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வழக்கமாக அளவிடப்படுகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி வரலாற்றினை ஆய்வு செய்வதற்கு, 2006–07 முதல் 2019–20 வரையிலான 14 ஆண்டுகள் காலத்தை கருத்தில் கொண்டுள்ளோம். அதனை 2006–07 முதல் 2010–11 வரை, 2011–12 முதல் 2015–16 வரை மற்றும் 2016–17 முதல் 2019–20 வரை என மூன்று துணைக் காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பெருந்தொற்று மற்றும் ஊரடங்கினால் ஏற்பட்ட விளைவுகள் அளப்பரியவை என்பதால், அவை கீழ்க்காணும் விவாதங்களுக்கு விதிவிலக்காகக் கருதப்பட வேண்டும். முதல் துணைக் காலத்திற்கான புள்ளிவிவரங்கள், தேசிய வருமானக் கணக்குகளின் 2004–05 அடிப்படை ஆண்டினைக் கொண்டும், இறுதி இரண்டு துணைக் காலங்களுக்கு, 2011–12 அடிப்படை ஆண்டினைக் கொண்டும் கணக்கிடப்பட்டுள்ளன. முதல் துணைக் காலத்தில் (2004–05 அடிப்படை ஆண்டு) காரணி செலவின் அடிப்படையிலும், இறுதி இரண்டு துணைக் காலங்களில் (2011–12 அடிப்படை ஆண்டு), சந்தை விலைகளின் அடிப்படையிலும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடப்பட்டு பொருளாதார வளர்ச்சி அளவிடப்பட்டுள்ளது.

**படம் 24: தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் (நிலையான விலைகளில்)**




தமிழ்நாட்டின், மேற்கண்ட மூன்று வேறுபட்ட காலங்களுக்கான உள்ளபடியான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் (நிலையான விலைகளில்) முறையே 10.15 சதவீதம், 6.70 சதவீதம் மற்றும் 7.22 சதவீதமாக உள்ளது. எனவே, இரண்டாவது மற்றும் மூன்றாவது துணைக் காலங்களில் குறிப்பிடத்தக்க அளவில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது. இந்திய அளவிலான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சி நிலையற்றதாகவும், வெளிப்புற காரணிகளால் எளிதில் பாதிக்கத்தக்கதாகவும் உள்ளது. முதல் துணைக் காலத்தில், தமிழ்நாட்டின் வளர்ச்சி செயல்திறன் அனைத்து இந்திய சராசரியைக் காட்டிலும் கணிசமான அளவில் சிறப்பாக இருந்ததையும், அதே சமயம் 2011–12 முதல் 2015–16 வரையிலான இரண்டாவது துணைக் காலத்தில் மாநிலத்தின் வளர்ச்சி, இந்திய வளர்ச்சி அளவிற்கு நெருக்கமாக வந்து மீண்டும் வேகமாக வளரத் தொடங்கியதை அட்டவணை 76 இல் காணமுடியும். நாட்டிலுள்ள மற்ற மாநிங்களை விட நமது மாநிலம் பணமதிப்பிழப்பு தாக்கத்தை சிறப்பாக எதிர்கொண்டது என தெரிய வருகிறது.

**அட்டவணை 76: தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் (நிலையான விலைகளில்)**

**(சதவீதத்தில்)**

| விவரங்கள் | 2006–07 முதல் 2010–11 வரை | 2011–12 முதல் 2015–16 வரை | 2016–17 முதல் 2019–20 வரை |
|---|---|---|---|
| **தமிழ்நாடு** | 10.15 | 6.70 | 7.22 |
| **இந்திய அளவில்** | 8.62 | 6.50 | 6.41 |

வங்கிக் கட்டமைப்பில் சிறந்து விளங்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். எனவே, நெருக்கடியான சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு, தமிழ்நாட்டின் அனைத்து மக்களும் எளிதில் அணுகக்கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கும் வங்கி உட்கட்டமைப்பு, இதற்கு ஓர் காரணமாகும்.

சென்னை பொருளியல் கல்வி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான ஒப்பீட்டு ஆய்வின்படி, 2004–05 முதல் 2011–12 வரையுள்ள காலத்திற்கான சராசரி வளர்ச்சியில், தமிழ்நாடு பெரிய மாநிலங்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. ஆனால், 2012–13 முதல் 2018–19 வரையுள்ள காலத்தில், தமிழ்நாடு 11–வது இடத்தை அடைந்ததுடன், அதன் சராசரி வளர்ச்சியும், முந்தைய 7 ஆண்டுகளின் வளர்ச்சியான 10.3 சதவீதத்தைக் காட்டிலும் 3.2 சதவீதப் புள்ளிகள் குறைவாக, அதாவது 7.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தமிழ்நாட்டில், கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை, மிகவும் கவலையளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது.


பின்வரும் அட்டவணையில், தமிழ்நாட்டில் 2006–07 முதல் 2019–20 வரையுள்ள காலத்தில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கியத் துறைகளின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதங்கள் மூன்று துணைக் காலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 77: தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைவாரியான சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் – 2006–07 முதல் 2019–20 வரை (நிலையான விலையில்)**

(சதவீதத்தில்)

| வ. எண். | துறை | 2006–07 முதல் 2010–11 வரை | 2011–12 முதல் 2015–16 வரை | 2016–17 முதல் 2019–20 வரை |
|---|---|---|---|---|
| 1 | வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் | 4.07 | 5.24 | 5.86 |
| 2 | தொழில் | 10.30 | 5.49 | 8.17 |
| 3 | சேவைகள் | 11.23 | 7.44 | 6.03 |
| | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு | 10.15 | 6.70 | 7.22 |

**படம் 25: தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைவாரியான சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் – 2006–07 முதல் 2019–20 வரை (நிலையான விலைகளில்)**



சேவைகள் மற்றும் தொழில் துறைகள், வேளாண்மைத் துறைகளைக் காட்டிலும் அதிக வளர்ச்சி விகிதங்களைப் பதிவு செய்துள்ளன என்பதைத் துறைவாரியான வளர்ச்சி விபரங்கள் வெளிப்படுத்துகிறது. பெருமளவு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் துறையால் வழங்கப்படுவதால், கொள்கைத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படாத வரை, தமிழ்நாட்டின் வளர்ச்சி, அனைத்தையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சியாக இல்லாமல், மேலும் சமமற்ற தன்மைக்கு வழிவகுப்பதாகவும் அமையும்.

தொழில் துறை வளர்ச்சி விகிதத்தில் மிகப் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. 2006–07 முதல் 2010–11 வரையிலான காலத்தில் 10.30 சதவீதமாக இருந்த வளர்ச்சி விகிதம், 2011–12 முதல் 2015–16 வரையிலான காலத்தில் 5.49 சதவீதமாகச் சரிந்து, பின்னர் 2016–17 முதல் 2019–20 வரையிலான காலத்தில் 8.17 சதவீதமாக சற்று அதிகரித்தது. இதனை அட்டவணை–77 இல் காணலாம். அதைப் போல, சேவைகள் துறையும், 2006–07 முதல் 2010–11 வரையுள்ள காலத்தில் 11.23 சதவீத வளர்ச்சியிலிருந்து 2011–12 முதல் 2015–16 வரையுள்ள காலத்தில் 7.44 சதவீதமாகவும், 2016–17 முதல் 2019–20 வரையிலான காலத்தில் மேலும் குறைந்து 6.03 சதவீதமாகவும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. **சமீபத்திய ஆண்டுகளில், தொழில் மற்றும் சேவைத்துறையின் செயல்திறனில் நிலவும் மந்தநிலை கவலையளிப்பதாக உள்ளது. இத்தகைய தொடர் சரிவின் காரணமாக, பொருளாதாரத்தின் மிகப் பெரும் பிரிவுகளான தொழில்துறை மற்றும் சேவைத் துறைகள் போதிய உத்வேகத்துடன் துரித வளர்ச்சியைப் பெறவில்லை. இத்தகைய நிலை விரைவாக மாற்றப்படாவிட்டால், ஒப்பீடு செய்யும் நிலையில் உள்ள மற்ற மாநிலங்களிடம் தமிழ்நாடு தனது நிலையை இழக்கக் கூடும்.**

2011–12 முதல் 2019–20 வரையிலான ஆண்டுகளில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில்துறைக்குள் அடங்கிய துறையாக இருக்கும் உற்பத்தித் துறையின் துறைசார் பங்களிப்பு (அட்டவணை 78) 19.89 சதவீதத்திற்கும் 25.32 சதவீதத்திற்கும் இடையில் ஏற்ற இறக்கமாக இருந்தது. இதற்கு உற்பத்தி அலகுகளில் ஏற்பட்ட உற்பத்தியின் ஏற்ற இறக்கம் காரணமாகும். தமிழ்நாடு அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைக் கொண்டிருந்தாலும் தொழில் துறையின் வளர்ச்சி நிலையற்றதாக உள்ளதுடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனப்

பிரிவுகளின் உற்பத்திப் பொருட்களின் மதிப்புக் கூட்டலில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தைக் காட்டிலும் குறைவாக உள்ளது.

**அட்டவணை 78: தமிழ்நாடு உற்பத்தித் துறையின் வளர்ச்சி விகிதம் மற்றும் சதவீதப் பங்கு ( 2011–12 ஆண்டின் நிலையான விலையில்)**

| ஆண்டு | மொத்த மதிப்புக் கூட்டல் (ரூபாய் இலட்சத்தில்) | சதவீதப் பங்கு | வளர்ச்சி விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2011-12 | 15176801 | 21.90 | … |
| 2012-13 | 16945553 | 23.37 | 11.65 |
| 2013-14 | 16632909 | 21.42 | -1.84 |
| 2014-15 | 16209238 | 19.89 | -2.55 |
| 2015-16 | 19970561 | 22.72 | 23.20 |
| 2016-17 | 22451412 | 23.90 | 12.42 |
| 2017-18 | 24898500 | 24.54 | 10.90 |
| 2018-19 | 26739746 | 24.97 | 8.31 |
| 2019-20 | 29486635 | 25.32 | 7.30 |

சேவைகள் துறையில் **2011–12** முதல் **2019–20** வரையிலான ஆண்டுகளில் (அட்டவணை **79**)மாநிலத்தின் மொத்த கூட்டப்பட்ட மதிப்பு (GVA) **50** முதல் **54** சதவீதமாக உள்ளது.

**அட்டவணை 79: மொத்த மதிப்புக் கூட்டலில் சேவைகள் துறையின் பங்கு (நிலையான விலையில்)**

**(சதவீதத்தில்)**

| ஆண்டு | ஆந்திரப் பிரதேசம் | குஜராத் | கர்நாடகா | கேரளா | மஹாராஷ்ட்ரா | இராஜஸ்தான் | தெலுங்கானா | உத்தரப் பிரதேசம் | மேற்கு வங்கம் | தமிழ்நாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2011-12 | 40.91 | 36.71 | 56.84 | 57.46 | 51.07 | 38.75 | 52.85 | 45.51 | 49.92 | 50.48 |
| 2012-13 | 44.38 | 37.52 | 59.55 | 59.06 | 52.19 | 40.39 | 55.68 | 46.26 | 50.55 | 51.55 |
| 2013-14 | 44.70 | 37.03 | 60.22 | 60.38 | 52.80 | 41.32 | 57.49 | 47.04 | 51.21 | 52.44 |
| 2014-15 | 44.95 | 36.46 | 61.80 | 60.76 | 54.26 | 41.65 | 61.72 | 49.61 | 52.76 | 54.32 |
| 2015-16 | 45.53 | 35.61 | 62.85 | 61.61 | 54.63 | 40.84 | 62.10 | 48.96 | 53.25 | 52.33 |
| 2016-17 | 42.79 | 35.16 | 62.49 | 61.13 | 54.52 | 40.41 | 63.55 | 46.28 | 51.96 | 52.12 |
| 2017-18 | 41.90 | 35.08 | 62.35 | 61.48 | 54.63 | 41.96 | 62.75 | 47.94 | 51.93 | 51.46 |
| 2018-19 | 43.40 | 35.87 | 63.71 | 62.39 | 55.44 | 44.90 | 63.08 | 48.51 | 52.39 | 51.66 |
| 2019-20 | 42.76 | 36.25 | 64.50 | 63.31 | 57.05 | 44.70 | 62.68 | 50.22 | 53.30 | 51.09 |

***ஆதாரம்: 15.03.2021 அன்று இந்திய அரசின் மத்திய புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சக இணையதளத்தில் கிடைத்த மாநிலங்களின் மொத்த மதிப்புக் கூட்டலின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது.***

பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றத்தின் அடுத்த கட்டத்தை குறிக்கக்கூடிய சேவைத் துறையின் பங்கானது, கர்நாடகா, கேரளா, மற்றும் மஹாராஷ்ட்ரா போன்ற சில சக மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது என்பதை அட்டவணை 79 இல் காணலாம்.


மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானம், **2006–07** முதல் **2010–11** வரையிலான ஆண்டுகளில் **9.37** சதவீதமாக இருந்தது. **2011–12** ஆண்டு முதல் **2015–16** வரையிலான ஆண்டுகளில் **6.32** சதவீதமாக பெருமளவில் சரிவடைந்து, பின்னர் **2016–17** முதல் **2019–20** வரையிலான காலகட்டங்களில் **6.70** சதவீதமாக ஓரளவு உயர்ந்தது. அட்டவணை **80** இல் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டவாறு, மாநிலத்தின் தனிநபர் வருமானத்தின் வளர்ச்சி வீதம், அனைத்திந்திய அளவில் மூன்று துணைக்காலப் பிரிவுகளிலும் அதிகமாக இருந்தது.

**அட்டவணை 80: தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தின் ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதம் (நிலையான விலையில்)**

**(சதவீதத்தில்)**

| **ஆண்டு** | **2006–07 முதல் 2010–11 வரை** | **2011–12 முதல் 2015–16 வரை** | **2016–17 முதல் 2019–20 வரை** |
|---|---|---|---|
| **தமிழ்நாடு** | 9.37 | 6.32 | 6.70 |
| **இந்திய அளவில்** | 7.12 | 4.84 | 5.24 |

**படம் 26: தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தின் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் (நிலையான விலைகளில்)**



அட்டவணை 81 இல், 13வது நிதிக்குழுவின் அறிக்கையில், 2004–05 முதல் 2006–07 வரையிலான ஆண்டுகள், 14வது நிதிக்குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள 2010–11 முதல் 2012–13 வரையிலான ஆண்டுகள் மற்றும் 15வது நிதிக்குழுவின் அறிக்கையில் 2016–17 முதல் 2018–19 வரையிலான ஆண்டுகளுக்கான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தின் ஒப்பீட்டு தொடர்புகள் காட்டப்பட்டுள்ளன. 2010–11 முதல் 2012–13 வரையிலான மூன்று ஆண்டு காலத்திற்கு, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத் தரவரிசையில் பெரிய மாநிலங்களுக்கு இடையே தமிழ்நாடு நான்காவது இடத்தை வகித்தது. இந்த காலகட்டத்தில் தமிழ்நாடு குஜராத்திற்கு இணையாகவும், பஞ்சாப், கேரளா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு மேலாகவும் இருந்தது.

பதினைந்தாவது நிதிக் குழுவின் அறிக்கையில், 2016–17 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தில் பெரிய மாநிலங்களுக்கு இடையே தமிழ்நாட்டின் நிலை 5வது இடத்திற்கு சறுக்கியது. 2016–17 முதல் 2018–19 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானத்தில், கேரளா, கர்நாடகா மற்றும் தெலுங்கானா போன்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைக் காட்டிலும் முன்னேறிச் சென்றன. அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது மந்தநிலைக்கான காரணங்கள் மற்றும் போட்டித்திறன் குறைவது குறித்து கவனமாகப் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். 2007 முதல் 2013 வரையிலான காலகட்டத்தில் எவ்வாறு முன்னேறிச் சென்றோம், 2013 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் ஏன் வீழ்ச்சியடைந்துள்ளோம் என்பதை ஓரளவாவது விளக்கும் முந்தைய பகுதிகளில் காணப்படும் ஆய்வுகளை நம்புகிறோம்.

## அட்டவணை 81: தேர்வுசெய்யப்பட்ட பெரிய மாநிலங்களில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் தனிநபர் வருமானம்

**(ரூபாயில்)**

| வ. எண். | மாநிலங்கள் | 13 ஆம் நிதிக்குழு அறிக்கையின்படி மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சராசரி தனிநபர் வருமானம் (2004–05 முதல் 2006–07 வரை) | தரவரிசை | 14 ஆம் நிதிக்குழு அறிக்கையின்படி மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சராசரி தனிநபர் வருமானம் (2010–11 முதல் 2012–13 வரை) | தரவரிசை | 15 ஆம் நிதிக்குழு அறிக்கையின்படி மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சராசரி தனிநபர் வருமானம் (2016–17 முதல் 2018–19 வரை) | தரவரிசை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆந்திரப் பிரதேசம் | 30,561* | 8 | 73,979 | 9 | 1,52,436 | 9 |
| 2 | பீஹார் | 8,851 | 15 | 24,584 | 17 | 39,951 | 17 |
| 3 | சத்தீஸ்கர் | 23,757 | 9 | 58,130 | 12 | 1,01,121 | 12 |
| 4 | குஜராத் | 40,094 | 4 | 98,690 | 3 | 1,82,534 | 7 |
| 5 | ஹரியானா | 43,797 | 1 | 1,16,179 | 1 | 2,25,547 | 1 |
| 6 | ஜார்கண்ட் | 21,984 | 10 | 44,028 | 14 | 72,990 | 15 |
| 7 | கர்நாடகா | 33,433 | 7 | 76,781 | 8 | 2,04,419 | 3 |
| 8 | கேரளா | 38,278 | 5 | 89,715 | 6 | 2,05,114 | 2 |
| 9 | மத்தியப் பிரதேசம் | 18,187 | 13 | 42,996 | 15 | 86,077 | 14 |
| 10 | மஹாராஷ்ட்ரா | 43,074 | 2 | 1,03,091 | 2 | 1,94,997 | 6 |
| 11 | ஒடிசா | 21,280 | 12 | 54,877 | 13 | 1,01,416 | 11 |
| 12 | பஞ்சாப் | 41,180 | 3 | 92,055 | 5 | 1,56,989 | 8 |
| 13 | இராஜஸ்தான் | 21,779 | 11 | 58,985 | 10 | 1,10,086 | 10 |
| **14** | **தமிழ்நாடு** | **36,563** | **6** | **98,327** | **4** | **1,95,377** | **5** |
| 15 | தெலுங்கானா | பொருந்தாது | பொருந்தாது | 83,738 | 7 | 1,97,505 | 4 |
| 16 | உத்தரப் பிரதேசம் | 15,548 | 14 | 33,815 | 16 | 65,351 | 16 |
| 17 | மேற்கு வங்கம் | 27,418 | 8 | 58,323 | 11 | 99,685 | 13 |
| **அனைத்து மாநிலங்கள்** | | **30,902** | | **64,290** | | **1,25,246** | |

* **குறிப்பு**: தெலுங்கானா உட்பட

மகத்தான பொருளாதார ஆற்றலும், மனித வளமும் கொண்ட மாநிலம் என்றாலும், கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருப்பது கவலைக்குரியதாகும். 2004–05 முதல் 2011–12 வரை சராசரி வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய மாநிலங்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது, ஆனால் 2012–13 முதல் 2018–19 வரை அது 11 வது இடத்தைப் பிடித்தது.

தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் : 2006–11 ஆம் ஆண்டில் 10.15 சதவீதத்திலிருந்து 2016–20 ஆம் ஆண்டில் 7.22 சதவீதமாகக் குறைந்தது.

- பணமதிப்பிழப்பு (2016), அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (2017) மற்றும் கோவிட் –19 தொற்றுநோயால் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு (மார்ச் 2020) போன்ற தேசிய இடையூறுகள் வளர்ச்சியை பாதித்தது.
- மற்ற வளமான மாநிலங்களைக் காட்டிலும் நிதியொதுக்கம் இல்லாத காரணத்தினால் தமிழ்நாட்டின் பொருளாதார வளச்சி விகிதம் சரிந்துள்ளது

**நிலையில்லா துறைவாரியான வளர்ச்சி மற்றும் போட்டித்திறன் இல்லாமை ஆகியவை விரைவான முறையில் தீர்க்கப்படவேண்டிய முக்கிய பிரச்சனைகள்.**

- தொழில் மற்றும் சேவைத் துறைகள் போதுமான வளர்ச்சி பெறவில்லை. இதுவிரைவாக சரிசெய்யப்படாமல்போனால் ஒப்பீடு மாநிலங்களுடனான போட்டியில் தமிழ்நாடு மிகவும் பின்தங்கி விடும்.

**தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு மாநில தனிநபர்களின் நல்ல பொருளாதார நிலையை குறிக்கிறது. 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு தொடர்ந்து சரிந்து வருகிறது.**

- மாநிலத்தின் தனி நபர் வருமானம் மூன்று துணை காலங்களிலும் அகில இந்திய அளவை விட அதிகமாக உள்ளது. இருப்பினும் 2011–12 முதல் 2015–16 வரையிலான இரண்டாவது துணைக்காலத்தில் இது குறைந்தது.
- 2010–11 முதல் 2012–13 வரையிலான மூன்று ஆண்டு காலத்திற்கு, தமிழ்நாடு தனிநபர் மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் பெரிய மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக 4 வது இடத்தைப் பிடித்தது, பின்னர் அது 5 வது இடத்திற்கு சரிந்தது.
- அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் இந்த மந்த நிலைக்கு காரணங்கள் மற்றும் சரிவுக்கு வழிவகுத்த விஷயங்கள் குறித்து கவனமாக பகுப்பாய்வு தேவை.

**IV முடிவுரை**

ஒரு புறம் அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாகவும், பெருமளவில் ஆளுகையில் இருக்கும் கட்டமைப்புக் குறைபாடுகளை சரியான நேரத்தில் சரிசெய்யாததாலும், மாநிலத்தின் நிதிநிலை நெருக்கடியில் தள்ளப்பட்டுள்ளது. இந்தச் சூழலையும், நாம் எவ்வாறு இந்த நிலைக்கு சென்றடைந்தோம் என்பதையும் இந்த அறிக்கை தெளிவுபடுத்தும் என நம்புகிறோம். மாநிலத்தின் நிதி நெருக்கடியை கோவிட் பெருந்தொற்று மேலும் அதிகரித்ததுடன், தமிழ்நாட்டின் நிதிநிலைமை எவ்வாறு பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது என்பதையும் நமக்கு உணர்த்தியுள்ளது. இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் சீர்திருத்தத்தை மேலும் தாமதப்படுத்த முடியாது.

**வழக்கமான அணுகுமுறையைத் தொடர இயலாது. அணுகுமுறையில் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான், தொடர்ந்து அதிகரிக்கும் கடன் மற்றும் வட்டிச் செலவுகளிலிருந்து நாம் மீள முடியும். மற்றொரு பக்கம், வெகு காலத்திற்கு முன்னதாகவே ஒரு பொறுப்புள்ள அரசு பல ஆண்டுகளில் ஒருமுறை செய்ய வேண்டிய, அடிப்படைச் சீர்திருத்தங்களை செய்திருக்க வேண்டும். அதை தற்போது செயல்படுத்துவதற்கான வாய்ப்பாகவே இதனைக் கருத வேண்டும்.**

நமது வருவாய்ப் பற்றாக்குறையை குறைப்பதற்கு, நம்முடைய வட்டிச் செலவுகளைக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். மாநில மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஏற்ப நமது கடனை கட்டுப்படுத்துவது அவசியமாகும். எந்த மக்களாட்சி நாட்டிலும், செலவினங்களை பெருமளவில் குறைப்பது என்பது மிகக் கடினமாகும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அரசு, தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு கூடுதல் செலவு ஏற்படும். எனவே, நியாயமான முறையில் வருவாயை உயர்த்த வேண்டும். இல்லையெனில், கடனளவு அதிகரித்து, வட்டிச் செலவினங்கள் வரவு செலவுத் திட்டத்தின் மீது சுமை ஏற்படுத்தும். கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டிச் செலவினங்கள் போன்ற விருப்புரிமையற்ற செலவினங்களுக்குக்கூட கடன்கள் பெறப்பட்டுள்ளது. இத்தகைய செலவினங்கள் அதற்கு முன்னதாக அரசின் வருவாய் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த நடைமுறை நிறுத்தப்பட வேண்டும்.

மக்களுக்குத் தேவையான விவரங்களை வழங்குவதன் மூலம் வெளிப்படைத்தன்மை ஏற்படுவது விரும்பத்தக்கதாகும். இவை, அரசின் கொள்கைகளை

மக்கள் முன் கொண்டு செல்லவும், அவற்றின் மீதான அரசின் முடிவிற்கு அவர்களின் ஒப்புதலைப் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கின்றன. பிரச்சினையை நேர்மையாக ஒப்புக்கொள்ளவதே தீர்வு காண்பதற்கான முதல் படியாகும்.

நமது பொருளாதார நிலை குறித்த விரிவான ஆய்வு செய்வதற்கும், முக்கியமான தூண்டுதலாக இருக்கவும் இந்த ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கையும், இதனைத் தொடர்ந்து வரும் சில குறிப்பிட்ட அறிக்கைகளும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, உடனடியாக தேவைப்படுகின்ற முக்கிய சீர்திருத்தங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அனைவரின் ஆதரவையும், பங்களிப்பையும் பெறுவதற்கு உதவும்.

தற்போது எடுக்கப்பட வேண்டிய சில சீர்திருத்த நடவடிக்கைகள் அனைவருக்கும் தெரிந்ததேயாகும். மேலும், மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு, வல்லுநர்கள் மற்றும் தொடர்புடையவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே நடைபெற்று வருகின்றன. இதன் முதல் படியாக நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் எஸ்தர் டப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன், ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார ஆலோசகர் டாக்டர் அரவிந்த் சுப்பிரமணியன், பிரபல பொருளாதார ஆலோசகர் ஜான் டிரீஸ் மற்றும் ஒன்றிய அரசின் முன்னாள் நிதிச் செயலாளர் மற்றும் இந்திய பிரதமரின் முன்னாள் பொருளாதார ஆலோசகர் திரு எஸ். நாராயன் இ.ஆ.ப ஆகியோரைக் கொண்ட முதலமைச்சரின் உலக பொருளாதார ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படை தேவைப்படக்கூடிய மற்ற துறைகளிலும் இதைப் போன்ற ஆலோசனைக் குழுக்கள் வரும் நாட்களில் ஏற்படுத்தப்படும்.

சரியான ஆளுகை இல்லாததால், குறிப்பாக கடந்த 7 ஆண்டுகளில் இல்லாததால், தற்போதைய பெரும்பாலான பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள நேரிடுகிறது. அரசியல் உள்நோக்கத்தை தவிர்ப்பதற்காக, நிதி நிலையின் சரிவிற்கான காரணங்களை நாங்கள் தெரிந்தே, இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை. ஆனால், இந்த அறிக்கையின் மூலம், மாநிலத்தில் எவ்வாறு இத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டது குறித்து பொது விவாதங்கள் எழும் என நம்புகிறோம்.

**இந்தச் சரிவு சரிசெய்யக்கூடியது.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வலுவான தலைமையினாலும், அவர் அடிக்கடி கூறுவது போல, சமூக ஆர்வலர்களுடன் தொடர்ந்து ஈடுபட்டு, உயர்தர நிர்வாகத்தை வழங்கும் வெளிப்படையான அரசு என்ற அவரின் கொள்கையினாலும், மேற்கூறிய சரிவை மாற்றியமைத்து, தமிழ்நாட்டை அதன் உரிய இடத்திற்கு உயர்த்த முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்.

**இறுதியாக, சமீபத்தில் முடிவடைந்த தேர்தலின் போது, அளித்த வாக்குறுதிகளை மாற்றியமைக்கவோ அல்லது கைவிடுவதற்கோ ஒரு காரணத்தை உருவாக்கும் முயற்சியாக இந்த அறிக்கை இல்லை.** தேர்தல் வாக்குறுதியான குடும்ப அட்டை ஒன்றுக்கு 4000 ரூபாய் வழங்கப்பட்டது மட்டுமல்லாமல் எந்தவொரு வாக்குறுதியிலும் குறிப்பிடப்படாதவாறாக, 14 அத்தியாவசியப் பொருட்களின் தொகுப்பினை வழங்கியது இந்த அரசு வாக்குறுதியை நிறைவேற்றும் என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

நமது மாநிலம் பெரிய மற்றும் மதிப்புமிக்க நில உடைமைகள் முதல் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ள பொது நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க பங்குகள் வரை மிகப்பெரிய வளங்களைக் கொண்ட மாநிலம் ஆகும். நமது மாநிலத்தின் மக்கள், நமது மாநிலத்தை வசிப்பிடமாகக் கொண்டிராத மக்கள் மற்றும் தங்கள் தாய்நாட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்ட உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களான நமது மக்களின் செல்வம், சொத்துக்களின் செல்வத்தை விட அதிக மதிப்புடையவர்கள்.

அரசின் செயல்பாட்டிலும் அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகள் உள்ளிட்ட எண்ணற்ற அம்சங்களில் கட்டமைப்பிலும் சீர்திருத்தங்களை மேற்கொள்வது நமது இலட்சிய இலக்குகளை எய்துவதற்கு தேவையானது என்று நாங்கள் உணர்ந்துள்ளோம். இறுதியாக பொருளாதார ஆலோசகர்களின் குழுவில் மாண்புமிகு முதலமைச்சர் தெரிவித்த கருத்துகளுடன் இந்த அறிக்கையை நிறைவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

*"இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் தமிழ்நாட்டை முன்னுதாரணமாகக் கொண்டு வளருவதற்கு திட்டமிடும் சூழலை*

*உருவாக்க வேண்டும். இதற்கு தேவையான ஆலோசனையை நீங்கள் வழங்க வேண்டும்.*

*என்னுடைய இந்தக் கனவுகள் சாதாரண சீர்திருத்தங்கள் மூலமாக மட்டும் சாத்தியமாகிவிடாது. முழுமையான மாற்றம் – அதிரடியான மாற்றம் மூலமாகத்தான் சாத்தியம் என்பதை நான் அறிவேன். எத்தகைய மாற்றத்திற்கும் தயாராக தமிழ்நாடு அரசு இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.''*

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர்